வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu
வீர மலர் ඊළනාඩු





மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram money transfer – மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER – ரியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER – வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை



Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 11.02.2024 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 42 | பக்கங்கள் : 16




07 தமிழக வெற்றி கழகம்: கலகம் செய்யுமா? கரைந்து போகுமா?


08 நாட்டில் அமைதி நிலவவேண்டும்!


10 ஜே.வி.பி.யின் இந்திய விரோத கடந்த காலத்தை மோடி அரசு பொருட்படுத்த வில்லை!


13 சீனாவில் ஊடக சுதந்திரம் மறுப்பு: ஆஸி. எழுத்தாளருக்கு மரண தண்டனை!


# ஒருங்கிணைந்த பட்டியலிலுள்ள அதிகாரங்கள் மாகாணங்களுக்கு!

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

### அடுத்த வருடம் மாகாண சபை தேர்தல்!

புதுடில்லி, பெப்ரவரி 11

**ஒருங்கிணைந்த அதிகாரப் பட்டியலில் உள்ள அதிகாரங்களில் அநேகமானவற்றை அல்லது தேவையானவற்றை வழங்கத் தயாராகவுள்ளோம் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

அடுத்த வருடம் மாகாண சபைகள் தேர்தலை நடத்துவோம் என்று கூறிய அவர், பாராளுமன்ற அமர்வுகளை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய வேளை நான் தெரிவித்தது போல ஒவ்வொரு மாகாண சபைக்கும் அதன் சொந்த பொருளாதாரத்தை வழங்க விரும்புகின்றோம்.

இதனால், இந்தியா போன்று ஒவ்வொரு மாகாணமும் ஏனைய மாகாணத்தின் பொருளாதாரத்துடன் போட்டியிடும்.

15

## தமிழ் அரசு பொது செயலர் விவகாரம்:
## சமரசம் ஏற்படுத்தும் நோக்கில் இன்று வவுனியாவில் கூட்டம்!

யாழ்ப்பாணம், பெப். 11

இலங்கை தமிழ் அரசு கட்சியின் பொதுச்செயலாளர் உள்ளிட்ட நிர்வாகிகள் தெரிவில் ஏற்பட்டுள்ள குழப்பத்தை தீர்க்கும் சமரச முயற்சி இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது. இது தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுப்பதற்காக இன்று ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் தமிழ் அரசு கட்சியின் பிரமுகர்கள் கூடுகின்றனர்.

இலங்கை தமிழ் அரசு கட்சியின் தலைவராக சி. சிறீதரன் தெரிவான பின்னர், பொதுச் செயலாளர் மற்றும் நிர்வாகிகளை தெரிவு செய்வதற்கான கூட்டம் கடந்த மாதம் 27ஆம் திகதி திருகோணமலையில் நடந்தது.

இதில், பலத்த வாதப்பிரதிவாதங்களுக்கு

15

## மூன்று விமான நிலையங்கள் அதானி கையில்?

கொழும்பு, பெப். 11

இலங்கையின் 3 விமான நிலையங்களின் நிர்வாகத்தை கையகப் படுத்துவது தொடர்பாக இலங்கை அதிகாரிகளுடன் அதானி குழுமம் கலந்துரையாடியுள்ளது என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கொழும்பு இரத்மலானை விமான நிலையம் மற்றும் மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன. சுற்றுலா, காணி, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் ஹரின்

15

## அரச சார்பற்ற நிறுவனங்களை பதிவு செய்வது கட்டாயமானது!

### புதிய சட்டமூலம் இறுதிக் கட்டத்தில்

கொழும்பு, பெப். 11

அனைத்து தன்னார்வ தொண்டு நிறுவனங்களும் கட்டாயம் பதிவு செய்யப்பட வேண்டும். இதற்கான புதிய சட்டமூலத்தை உருவாக்கும் பணி இறுதிக்கட்டத்தை எட்டி உள்ளது என்று தேசிய தன்னார்வ தொண்டு நிறுவன செயலகத்தின் பணிப்பாளர் நாயகம் விமல குணரத்ன தெரிவித்தார்.

அரச சார்பற்ற நிறுவனங்களால் பெறப்படும் நிதியில் அரைவாசிக்கும் மேல் எந்தவிதமான கண்காணிப்பும் இன்றி செலவிடப்படுகிறது என்று வெளியான செய்திகளை அடுத்து இந்த ஏற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தற்போது, செயலகத்தில் பதிவு செய்யப்படாமல் - கண்காணிப்பு இன்றி பல அமைப்புகள் இயங்கி வருகின்றன. கடந்த

15

## திருமலையில் கப்பல் கட்டும் தளம்! இந்திய பாதுகாப்பு அமைச்சு ஆய்வு!

திருகோணமலை, பெப். 11

திருகோணமலை துறைமுகத்தில் கப்பல் கட்டும் தளம் ஒன்றை நிறுவுவதற்கான சாத்தியக்கூறு தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது.

இந்திய பாதுகாப்பு அமைச்சின் இணை செயலாளர் பிரபாகர் தலைமையிலான கடற்படை குழுவினர் நேற்று கிழக்கு ஆளுநர் செந்தில்

15



## நாட்டின் அதிகாரத்தை கைப்பற்ற திட்டவட்டமாக செயல்படுகிறோம்!

### டில்லியில் அநுரகுமார தெரிவிப்பு

### சகல புலம்பெயர் இலங்கையருடனும் பேசவும் தயாராம்!

புதுடில்லி, பெப். 11

இலங்கையின் அதிகாரத்தை கைப்பற்றும் நோக்கில் திட்டவட்டமாக செயல்படுவதாக தெரிவித்த தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திஸநாயக்க, நாட்டை கட்டியெழுப்புவதற்காக அனைத்து புலம்பெயர் இலங்கையர்களுடனும் பேச்சு நடத்துவதற்கு தயாராக இருக்கிறோம் - என்றும் கூறியுள்ளார்.

இந்தியாவுக்கு சென்ற அவர், அங்கு தேசிய நாளிதழ் ஒன்றுக்கு அளித்த நேர்காணலிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

இந்தியாவுக்கு வருமாறு விடுத்த அழைப்பு தொடர்பில் எழுப்பப்பட்ட

15

## நீர்கொழும்பில் துப்பாக்கி சூடு ஒருவர் மரணம்!

கொழும்பு, பெப். 11

நீர்கொழும்பில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்தார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவரே துப்பாக்கிச் சூட்டை நடத்தி விட்டு தப்பிச் சென்றனர். நீர்கொழும்பு - கல்கந்த சந்தியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## பதிவு பெற்ற மருந்து விற்பனை நிலையங்கள் மீதும் விசாரணை

கொழும்பு, பெப். 11

நாட்டில் பதிவுசெய்யப்பட்ட அனைத்து மருந்து விற்பனை மற்றும் கொள்வனவு நிறுவனங்களையும் விசாரிக்கும் பணியை குற்றப் புலனாய்வுத் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

குற்றப் புலனாய்வுப் பிரிவிற்குப் பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தின் பின்னர் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

அண்மையில் மருந்து கொள்வனவு செய்த நிறுவனங்கள், அதனுடைய தொடர்புடையவர்கள் தொடர்பாக விசாரணைகளை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இம்யூனோகுளோபுலின் ஊழல்கள் தொடர்பான விசாரணைகளை

15

## இப்படியும் நடக்கிறது

சில மாதங்களுக்கு முன்னர் தெற்கில் நடத்தப்பட்ட கருத்துக்கணிப்பு ஒன்றின் விவரங்கள் சமூகவலைதளங்களில் வெளியாகியிருந்தன.

மக்கள் மத்தியில் பிரபல்யமானவர்கள் யார் என்ற கருத்துக் கணிப்பில் வெளியிடப்பட்ட முடிவுகள் இந்த ஊர்க்குருவிக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருந்தன.

அந்தக் கருத்துக்கணிப்புகள் மீது விமர்சனங்கள் இருந்தாலும் அதில் தெரிவிக்கப்பட்டிருந்தவை கவனத்திற்குரியவையாக இருந்தன.

கிராமப்புறங்களில் சஜித் பிரேமதாஸவுக்கும் அநுர குமாரவுக்குமிடையே கடும்போட்டி நிலவ, நகரப்புறங்களில் அநுர முன்னணியில் இருந்தார். அது வல்ல ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருந்தது, இவர்களுக்கு அடுத்து ரணிலும் அவருக்கு அடுத்து இருந்தவர் சரத் பொன்சேகா.

இதனையடுத்துத்தான் தானும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவேண்டும் என்ற எண்ணம் சரத் பொன்சேகாவுக்கு ஏற்பட்டதோ தெரியவில்லை. ஆனால், அவர் தானும் களத்தில் இருப்பதாகவே அண்மைக்காலம்வரை கூறிக் கொண்டிருந்தார்.

ஆனால், அவர் விருப்பத்துக்கு மாறாக முன்னாள் இராணுவத் தளபதி தயா ரத்நாயக்காவை கட்சியில் உள்வாங்கியமைக்கு எதிராகக் குரல் எழுப்பி வந்த சரத் பொன்சேகா கடைசியாக ரணிலுடன் சங்கமமாகத் தயாராகிவிட்டார் என்றே தெற்கில் பரவலாக பேசப்படுகின்றது.

கடைசியாக பாராளுமன்றில் ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரையை பகிஷ்கரிப்பது என்று ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்திருந்தபோதிலும், அதில் கலந்துகொண்டதன் மூலம் தனது அதிருப்தியை சஜித்துக்கு காட்டியிருக்கும் பொன்சேகா, அணி மாறுவதற்கு தயாராகி விட்டாரென்றே கூறப்படுகின்றது.

முன்னதாக, தயா ரத்நாயக்காவை கட்சியில் இணைத்தமைக்கு எதிராக அவர் கருத்து சொன்னபோது, தமது கட்சி ஒரு ஜனநாயகக் கட்சி என்றும் யார் வேண்டுமானாலும் உள்ளே வரலாம் என்றும் யார் வேண்டுமானாலும் வெளியே போகலாம் என்றும் பதிலளித்திருந்தார் சஜித். அதாவது விரும்பினால் சரத் பொன்சேகா வெளியேறலாம் என்பதே அதன் பொருள்.

இந்நிலையிலேயே, பாராளுமன்றில் கட்சியின் முடிவுக்கு மாறாக ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரையை பகிஷ்கரிக்க மறுத்ததுடன், பின்னர் ஜனாதிபதி ரணிலையும் அவரின் பாராளுமன்ற அலுவலகத்தில் தனியாக சந்தித்துப் பேசியிருக்கிறார். அவர் மாத்திரமன்றி அவருடன் மேலும் சிலர் அவ்வாறே நடந்துகொண்டதும் கவனிக்கத்தக்கது. ஏற்கனவே, கட்சியுடன் முரண்பட்டு நிற்கும் ராஜித சேனாரத்ன, பௌசி, வடிவேல் சுரேஷ், இஷாக் ரஹ்மான், குமார வெல்கம ஆகியோரும் கட்சிக் கட்டுப்பாட்டை மீறி பாராளுமன்ற அமர்வில் கலந்து கொண்டிருந்தனர். பின்னர், ஜனாதிபதியையும் சந்தித்திருந்தனர்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மும்முனைப் போட்டியைத் தவிர்த்து இரு முனைப் போட்டியாக்க சிலர் முயன்று வரும் அதேவேளை, அதற்கு முன்னதாக சஜித் அணியிலிருந்து ஒரு தொகை எம்.பிக்களை பிரித்து எடுத்து அவரை பலவீனமாக்குவதற்கான முயற்சியை ஏற்கனவே, ரணில் தொடக்கிவிட்டாரென்றே நம்பப்படுகின்றது.

கடந்த வாரம் இந்தியா சென்றிருந்த தேசிய மக்கள் சக்தியின் நால்வர் அணி தமது பயணத்தை முடித்துக்கொண்டு தாயகம் திரும்பியிருக்கின்றது. இந்த அழைப்புக்காகக் கடந்த பல மாதங்களாக காத்திருந்த ஜே. வி. பியின் தேசிய மக்கள் சக்தியினருக்கு இப்போது அவசர அவசரமாக அழைப்பு விடுக்க பல காரணங்களை விமர்சகர்கள் எழுதி வருகின்றனர்.

இலங்கையுடனான வர்த்தக உடன்படிக்கையான 'எட்கா' ஒப்பந்தத்தை செய்துகொள்ள இந்தியா மிகுந்த ஆர்வம் காட்டி வருகின்றது. ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக அந்த உடன்படிக்கையை செய்துகொள்ள விரும்பும் இந்தியா, அதற்கான தருணம் இது என்றே நம்புவதாகத் தெரிகின்றது.

இந்த உடன்படிக்கையை தெற்கின் தீவிர இனவாத சக்திகள் பலமாக எதிர்ப்பதுடன், சில அதிகாரமுள்ள தொழில் சங்கங்களும் அதனை எதிர்க்கின்றன. முக்கியமாக மருத்துவர்கள் சங்கம் இதனை எதிர்த்து வருகின்றது. இந் நிலையில், அதற்கு எதிராக ஜே. வி. பி. குரல்கொடுப்பதை தடுப்பதற்காகத்தான் இந்தியா அவசர அவசரமாக அழைத்து, அவர்களை தர்மசங்கடத்துக்குள் விழுத்தியிருக்கின்றது என்கிறார் கள் சில விவரம் அறிந்தவர்கள்.

இந்தியாவின் இந்த நோக்கத்தை புரிந்துகொண்டதால் தானோ என்னவோ, தாங்கள் இன்னமும் தமது இடதுசாரிக் கொள்கையை கைவிட்டுவிடவில்லை என்பதை சொல்வதற்காக இந்தியாவில் இடதுசாரிகளின் ஆட்சியிலுள்ள ஒரேயொரு மாநிலமான கேரளாவுக்கும் சென்று திரும்பியிருக்கின்றனரோ தெரியவில்லை.

இனி என்ன அவர்களைப் பார்த்து சஜித்தும் இந்தியாவுக்கு செல்லும் தமது விருப்பத்தை வெளிப்படுத்தியிருக்கிறார். அவர்களுக்கும் விரைவில் அழைப்பு வரும். அவர்களும் 'எட்கா' குறித்து விமர்சனம் செய்வது நல்லதல்லத்தானே.!

**- ஊர்க்குருவி.**

# 11 நாள் குழந்தையின் தாயார் கிணற்றிலிருந்து சடலமாக மீட்பு!

முல்லைத்தீவு, பெப். 11

குழந்தை பெற்று 11 நாட்களேயான இளம் தாய் ஒருவர் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவின் ஒன்பதாம் வட்டார பகுதியில் அவரின் வீட்டின் கிணற்றிலிருந்தே அவர் சடலமாக மீட்கப்பட்டார்.

குழந்தையை பிரசவித்து 11ஆவது நாள் அவர் மருத்துவமனையிலிருந்து வீடு திரும்பியுள்ளார். இந்த நிலையில் தாங்கள் உறக்கத்தில் இருந்த நேரம் - நள்ளிரவு நேரம் வீட்டிலிருந்து வெளியேறியிருக்கலாம் என்று வீட்டார் கூறியுள்ளனர். அவரை காணவில்லை என்று தேடிய நிலையில் காலை 8 மணியளவில் வீட்டு கிணற்றில் பார்த்தபோது சடலமாகக் காணப்பட்டார் என்றும் வீட்டார் மேலும் கூறியுள்ளனர்.

டெனிஸ்ரன் கீர்த்தனா (வயது 29) என்ற இளம் குடும்பப் பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி முகமட் சம்பவ இடத்துக்கு சென்று பார்வையிட்டார். அத்துடன், பெண்ணின் சடலத்தை உடல் கூறாய்வுக்கு உட்படுத்துமாறும் பணிப்புரை விடுத்தார். (ஐ-10)

# மூத்த விரிவுரையாளர் கலாமணி காலமானார்

வடமராட்சி, பெப். 11

வடமராட்சி பிரதேச கல்வி புலமையாளர்களில் ஒருவரான யாழ். பல்கலைக்கழக கல்வித் துறை முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி தம்பி ஐயா கலாமணி (வயது 72) உடல்நலக் குறைவால் நேற்று காலமானார்.

அல்வாய் தெற்கை சேர்ந்த அவர், ஆரம்ப கல்வியை வதிரி தேவரையாளி இந்து கல்லூரியிலும், இடைநிலை கல்வியை நெல்லியடி மத்திய கல்லூரியிலும் கற்று யாழ். பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை



படித்தார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் பகுதி நேர விரிவுரையாளரான இவர் பின்னர் முழுநேர விரிவுரையாளராகி கல்வியியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளராக நீண்டகாலம் பணியாற்றியிருந்தார்.

கலை இலக்கியத்துறையில் மிகுந்த ஈடுபாடு கொண்ட இவர், காத்தவராயன் உள்ளிட்ட பல இதிகாச புராண நாடகங்களை தயாரித்தும் நடித்தும் மேடையேற்றியுள்ளார். இவரின் புதல்வர்களில் ஒருவரான பரணிதரன் ஜீவநதி இலக்கிய சஞ்சிகையின் நிர்வாக ஆசிரியராவார். இவரின் இறுதிக் கிரியைகள் நேற்று நடைபெற்றன.

(ஐ-02)

# ரூ. 770 கோடி பெறுமதியான போதைப்பொருட்கள் சிக்கின!

கொழும்பு, பெப். 11

யுக்திய சுற்றிவளைப்பு மூலம் 770 கோடி ரூபாய் பெறுமதியான போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட போதைப் பொருட்களில் ஹெரோயின், ஐஸ் மற்றும் கஞ்சா உள்ளிட்டவை உள்ளடங்குகின்றன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதி பொலிஸ்மா அதிபர், சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

சுமார் 142 கிலோ ஹெரோயின் இதுவரை கைப்பற்றப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளனர்.

(ஐ)

# இறந்தோர் உடலை பெறுவதில் தாமதம்

## திருமலை மக்கள் விசனம்

திருகோணமலை, பெப். 11

திடீர் மரண விசாரணை அதிகாரிகள் பற்றாக்குறையால் திருகோணமலை பொது மருத்துவமனையில் இறந்தவர்களின் உடல்களை உரிய நேரத்தில் பெறமுடியாதுள்ளதாகவும் ஆவணங்களை பெறுவதிலும் தாமதம் ஏற்படுவதாகவும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

திருகோணமலை நகரப் பகுதியில் ஒரு இலட்சம் பேர் வசிக்கின்றனர். இவர்கள் இந்த மருத்துவமனையையே நம்பியிருக்கின்றனர். இந்த நிலையில் திருமலை மருத்துவமனையில் ஒரேயொரு திடீர் மரண விசாரணை அதிகாரி மட்டுமே இருக்கிறார். சுகவீனம் காரணமாக அவரும் விடுமுறையில் இருக்கிறார். இந்த நிலையில் இறந்தவர்களின் உடல்கள் மற்றும் அது தொடர்பான ஆவணங்களைப் பெறுவதில் தாமதம் ஏற்படுகிறது. எனவே, இது விடயத்தில் அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(ஐ)

# வாடகை காரை பாகங்களாக பிரித்து விற்க முயன்றோர் கைது!

கொழும்பு, பெப். 11

வாடகைக்கு பெற்ற காரை பல பாகங்களாக பிரித்து விற்பனை செய்ய முயன்ற இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் எஸ்வெல்ல மற்றும் நெலும்தெனிய ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 38 வயது நபர்களாவர்.

கம்பஹா குற்றப் புலனாய்வு பிரிவினர்களுக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர்கள் நிட்டம்புவை பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாகங்களாகப் பிரிக்கப்படவிருந்த கார் அநுராதபுரம் பிரதேசத்தில் உள்ள வாகன வாடகை சேவை நிலையம் ஒன்றில் இருந்து பெறப்பட்டது என விசாரணையில் தெரியவந்தது. (ஐ)

# தொலைபேசி நிறுவன களஞ்சியசாலை தீயால் நாசம்!

கொழும்பு, பெப். 11

தனியார் தொலைபேசி நிறு வனம் ஒன்றின் களஞ்சிய சாலை தீயில் எரிந்து நாசமாகியுள்ளது.

நேற்று சனிக்கிழமை கொழும்பு - பிலியந்தலை பலன்வத்தை பிரதேசத்தில் இந்தத் தீ விபத்து இடம் பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் தீயை அணைக்கும் பணியில் கோட்டை, தெகிவளை மற்றும் கொழும்பு மாநகர சபையில் இருந்து சுமார் பத்து தீயணைப் ஈடுபட்டன.

தீ விபத்துக்கான காரணம் கண்டறியப்படாத நிலையில் மேலதிக விசாரணைகள் இடம் பெற்று வருகின்றன. (ஐ)

# தமிழர் பிரச்னைக்கு தீர்வு கண்டாலே ஒன்றிணைந்து செயல்பட முடியும்!

## ஜனாதிபதியின் அழைப்புக்கு சிறீதரன் எம். பி. பதில்

கொழும்பு, பெப். 11

தமிழ் தேசிய இனத்தின் பிரச்னைகளுக்கு தீர்வு காணாமல் எவ்வாறு முன்னேற்றமடைய முடியும்? பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதற்கு சிங்கள தலைவர்கள் முன்வர வேண்டும். எமக்கான தீர்வு கிடைத்தால் தான் ஒன்றிணைந்து செயல்பட முடியும் - என்று இலங்கை தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் தெரிவித்தார்.

நாட்டின் முதல் பிரஜையான ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்ட கொள்கை பிரகடன உரையில் அடிப்படை பிரச்னைகளுக்கான தீர்வு குறிப்பிடப்படவில்லை. குறிப்பாக எட்டு தசாப்தமாக இந்த நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்னை தொடர்பில் ஜனாதிபதி ஏதும் பேசாமல் இருந்தமை தமிழ் மக்களுக்கு மிகப்பெரிய ஏமாற்றத்தை அளித்துள்ளது. குறிப்பாக சமாதானத்தின் கதவுகள் இலங்கையில் மிக இறுக்கமாக மூடப்பட்டுள்ளன.

நாட்டில் புரைபோடிப் போயுள்ள பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதற்கு அரச தலைவர்கள் இதய சுத்தியுடன் செயல்படவில்லை என்பதை



காலம் உணர்த்தியுள்ளது. குறிப்பாக யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் யுத்த வெற்றி அமோகமாக கொண்டாடப்பட்டது. அறகலய போராட்டத்துக்கு பின்னர்தான் இந்த நாடு அடிமட்ட பொருளாதார நிலையில் உள்ளது என்பதை சிங்களவர்கள் புரிந்து கொண்டுள்ளார்கள்.

நாட்டை விட்டுச் செல்வதற்குதான் இன்று இலங்கையர்கள் அதிக கவனம் செலுத்தியுள்ளார்கள். மக்களின் மனங்கள் வெறுப்படைந்துள்ளன. நாட்டின் தலைவர்கள் சரியாக செயல்படவில்லை. அடுத்த தலைமுறையினருக்கு நம்பிக்கை வழங்கும் வகையில் அரச தலைவர்கள் பொறுப்புடன் செயல்படவில்லை. யுத்தத்தை காரணம் காட்டி ஆயுதம் கொள்வனவு செய்வதற்கும் இராணுவத்தை பலப்படுத்தவும் கடன் பெறப்பட்டது. அதன் விளைவு இன்று தாக்கம் செலுத்தியுள்ளது. பொருளாதார பாதிப்பு என்று குறிப்பிடப்படுகிறது. ஆனால், பௌத்த விகாரைகள் அமைப்பதற்கும் தமிழர்களின் காணிகளை அபகரிப்பதற்கும் மாத்திரம் நிதி ஒதுக்கப்படுகிறது.

தமிழ் தேசிய இனத்தின் பிரச்னைகளுக்கு தீர்வு காணாமல் எவ்வாறு முன்னேற்றமடைய முடியும். பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதற்கு சிங்கள தலைவர்கள் முன்வர வேண்டும். எமக்கான தீர்வு கிடைத்தால் தான் ஒன்றிணைந்து செயல்பட முடியும். தமிழர்களின் அரசியல் அபிலாசைகளுக்கு தீர்வு காண்பதற்கு முன்னுரிமை வழங்கினால் பொருளாதாரம் முன்னேற்றமடையும் அதற்கு நாங்கள் ஒத்துழைப்பு வழங்குவோம் - என்றார். (ஐ)

# மண்டைதீவு முத்துமாரி ஆலய இராஜகோபுர அடிக்கல் நாட்டல்

யாழ்ப்பாணம், பெப். 11

மண்டைதீவு வேபந்திடல் ஸ்ரீமுத்துமாரி அம்பாள் ஆலயத்தில் பஞ்சதள இராஜ கோபுரத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இராஜ கோபுரத்துக்கான அடிக்கல்லை செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் நாட்டி வைப்பார். பூர்வாங்க கிரியைகளை ஆலய பிரதம குரு சிவஸ்ரீ பா. பாலஸ்கந்தரூப குருக்கள் நடத்துவார்.

பஞ்சதள இராஜகோபுரம், மணிக் கோபுரங்கள், மணி மண்டபம் எனபவற்றை மண்டைதீவை சேர்ந்த கணபதிப்பிள்ளை விநாயகரத்தினம் குடும்பத்தினர் நிர்மாணித்து வழங்கவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தலைக்கவசத்துக்குள் மறைத்து ஐஸ் போதை கடத்தியவர் கைது

மன்னார், பெப். 11

தலைக்கவசத்திற்குள் ஐஸ் போதைப்பொருளை மறைத்து விற்பனைக்காக கொண்டு சென்றவரை மன்னார் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மன்னார் பொலிஸ் குற்ற புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் பிரகாரம் மன்னார் சாவற்கட்டு பகுதியில் நேற்று முன்தினம் இந்தக் கைது இடம்பெற்றுள்ளது.

இதன்போது, 20 கிராம் 850 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டது.

கைதான சந்தேகநபரை மன்னார் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

# ஹரிஹரன் இசை நிகழ்ச்சியில் குழப்பம் 6 பேர் கைது; மூவர் மருத்துவமனையில்!

யாழ்ப்பாணம், பெப். 11

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஹரிஹரனின் இசை நிகழ்ச்சியில் குழப்பம் ஏற்படுத்தினர் என்ற குற்றச்சாட்டில் 6 பேர் கைது செய்யப்பட்டனர். 3 பேர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர்.

நிகழ்ச்சியை பார்வையிட பல ஆயிரக்கணக்கானோர் திரண்டிருந்தனர். எனினும், அவர்கள் நிகழ்ச்சியை பார்வை யிட வாய்ப்பு மறுக்கப்பட்ட நிலையில் தடையை உடைத்து அவர்கள் நுழைந்திருந்தனர்.

இதன்போது, கதிரைகள், தண்ணீர் தாங்கி உள்ளிட்ட பல பொருட்கள் சேதமாகின. இதைத் தொடர்ந்து 6பேர் வரை கைதாகி பிணையில் விடுவிக்கப்பட்டனர். 3 பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இதேநேரம், குழப்ப நிலையை அடுத்து ஏற்பட்ட நெரிசலின்போது மயக்கமடைந்த, காயமடைந்த 12 பேர் வரையிலானவர்கள் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். (ஐ)





# வேம்படி சந்தி விபத்தில் மாணவி ஒருவர் காயம்!

யாழ்ப்பாணம், பெப். 11

யாழ்ப்பாணம் நகரில் வேம்படிச்சந்தியில்இடம்பெற்ற விபத்தில் வேம்படி மகளிர் கல்லூரி மாணவி ஒருவர் காயமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் மாணவி சைக்கிளில் பாடசாலைக்குச் சென்றவேளை, இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்து மோதி இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் காயமடைந்த மாணவி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ)

# பொலிஸாருக்கான அதிகரித்த கொடுப்பனவு அடுத்த வாரம்!

கொழும்பு, பெப். 11

2024 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் அதிகரிக்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான உணவு, பயண மற்றும் தங்குமிட கொடுப்பனவு அடுத்த வார தொடக்கத்தில் வழங்கப்படும் என நிதி இரா ஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இதுவரையில் பெறப்பட்ட கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக, வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் அதிகரிக்கப்பட்டுள்ள கொடுப்பனவில் பாதி உடனடியாக வழங்கப்படும் என அமைச்சர் தெரிவித்தார்.

கனிஷ்ட பொலிஸ் அதிகாரிகளுக்கு உதவித்தொகை 17 ஆயிரம் ரூபாய் உயர்த்தப்படவுள்ளது. (ஐ)

# கோமகனுக்கு பிடியாணை!

யாழ்ப்பாணம், பெப். 11

அரசியல் கைதிகளின் விடுதலைக்காக போராடி வரும் 'குரலற்றவர்களின் குரல்' அமைப்பின் செயல்பாட்டாளர் மு. கோமகனுக்கு யாழ்ப்பாண நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் தைப்பொங்கல் நிகழ்வுக்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணம் வருகை தந்தார். அப்போது, அவரின் வருகையை எதிர்த்து போராட்டம் நடத்தப்பட்டது. அந்தப் போராட்டத்தில் பங்கேற்றமைக்காக அவருக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

இது தொடர்பில் கோமகனிடம் வினவியபோது,

எனக்கு வழக்குக்கு வருமாறு இதுவரை எந்தவிதமான அழைப்பாணையும் வழங்கப்படவில்லை. ஆனால், எனக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டதாகவும் வழக்கின்போது எனது பெயர் அழைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. ஆகையால் எனக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டது. எனவே, நான் சட்டத்தரணியூடாக மன்றில் முன்னிலையாகவுள்ளேன் - என்றார். (ஐ)

# கெஹலிய மீதான விசாரணைக்கு பெரமுன முழு ஆதரவளிக்கும்!



## நாமல் ராஜபக்ஷ எம். பி.

கொழும்பு, பெப். 11

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தொடர்பில் முன்னெடுக்கப்பட்டுவரும் விசாரணைகளுக்கு சிறீலங்கா பொதுஜன பெரமுன கட்சி முழுமையான ஆதரவை வழங்கும் என்று அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

"கெஹலிய ரம்புக்வெல தொடர்பில் விசாரணை நடைபெறுகின்றது. அந்த விசாரணைக்கு அவரும் ஒத்துழைப்பு வழங்குகின்றார். கட்சி என்ற வகையில் எந்தவொரு விசாரணைக்கும் முழுமையான ஆதரவை வழங்க தயார்.

இதேபோல இதன் பின்னணியில் வேறு நபர்கள் உள்ளனரா என்பது பற்றியும் பொலிஸார் விசாரணை நடத்த வேண்டும். அமைச்சரவை பத்திரம் பற்றியும், அமைச்சரவை அனுமதி குறித்தும் தகவல் வெளியாகியுள்ளது. அவை தொடர்பிலும் தேடி பார்க்க வேண்டும். இதை அரசியல் மயப்படுத்தினால் எவருக்கும் நீதி கிடைக்காது." - என்றார். (ஐ)

# மலையக மக்களுக்கு காணி உறுதி வழங்கல் ஏப்ரலில் ஆரம்பமாகும்!

## வீட்டுத் திட்டல் 19 தொடங்கும் என்கிறார் ஜீவன்

கொழும்பு, பெப். 11

**மலையக பெருந்தோட்ட மக்களுக்கு காணி உறுதிப் பத்திரம் வழங்கும் சௌமியபூமி திட்டம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதல் நடைமுறைப்படுத்தப்படும் - என்று நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.**

அத்துடன், “இந்திய அரசின் நிதி உதவியுடன் மலையக பெருந்தோட்ட பகுதிகளில் முன்னெடுக்கப்படவுள்ள 10 ஆயிரம் வீட்டுத் திட்டம் எதிர்வரும் 19 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. முதற்கட்டமாக ஆயிரத்து 300 வீடுகள் நிர்மாணிக்கப்படும்.” - என்றும் அவர் கூறினார்.

நேற்று முன்தினம் பாராளுமன்றில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். தொடர்ந்து அவர் தனது உரையில்,

“ 2014 இல் இந்திய அரசால் வழங்கப்பட்ட 4 ஆயிரம் வீட்டுத் திட்டத்தை முழுமையாக முடிப்பதற்கு 10 வருடங்கள் எடுத்துள்ளன. இந்தக் காலப் பகுதியில் பெருந்தோட்டப் பகுதிகளில் சனத்தொகைகூட 4 ஆயிரமாக அதிகரித்திருக்கும். இது தொடர்பில் நான் எவரையும் குறைகூறவில்லை. யதார்த்தத்தையே கூற விளைகின்றேன். அதேபோல 2017 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட 10 ஆயிரம் வீட்டு திட்டமும் கொரோனா மற்றும் பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட காரணங்களால் ஆறு வருடங்கள்வரை தாமதமானது.

எனினும், எதிர்வரும் 19 ஆம் திகதி வீட்டு திட்டம் ஆரம்பிக்கப்படும் என்ற மகிழ்ச்சியான தகவலை அறியத்தருகின்றேன். முதல்கட்டமாக ஆயிரத்து 300 வீடுகளுக்கு அடிக்கல் நாட்டப்படும், ஓகஸ்ட் மாதத்துக்குள் இந்தத் திட்டத்தை நிறைவு செய்ய எதிர்பார்க்கின்றோம். 1,300 வீடுகளுக்கும் ஒரே நாளில் அடிக்கல் நாட்டப்படும். தனித்தனியே அடிக்கல் நாட்டு விழாக்களை நடத்தி மக்களை பணத்தை வீணடிக்க விரும்பவில்லை.

இதேபோல 2 மற்றும் 3 ஆம் கட்டங்களையும் அடுத்தடுத்த மாதங்களில் ஆரம்பிக்க உத்தேசித்துள்ளோம்.

மலையக பெருந்தோட்டப் பகுதிகளில் 2 இலட்சத்து 51 ஆயிரம் குடும்பங்கள் வாழ்கின்றன. சுமார் 66 ஆயிரம் வீடுகளே அமைக்கப்பட்டுள்ளன. ஏனைய குடும்பங்களுக்கு வீட்டுப் பிரச்னைகள் உள்ளன. இப்பிரச்னையை தீர்க்க வேண்டுமெனில் காணி உரிமை வழங்கப்பட வேண்டும். மலையக மக்களுக்கு காணி உரிமை வழங்க நாட்டு மக்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

மலையக பெருந்தோட்ட மக்கள் இந்நாட்டுக்காக உழைத்துள்ளனர். 1964 இல் எமது மக்கள் நாடு கடத்தப்பட்டுள்ளனர். எனவே, காணி உரிமையை நாம் பிச்சையாக கேட்கவில்லை, அது எமக்கு கிடைக்க வேண்டிய உரிமையாகும். எமது மக்கள் மானத்துடனும், மரியாதையுடனும் வாழவே விரும்புகின்றனர் - என்றார்.

(ஐ)

# 232 வெதுப்பகங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

## நுகர்வோர் அதிகார சபை

கொழும்பு, பெப். 11

நிர்ணயிக்கப்பட்ட எடை மற்றும் விலையை காட்சிப்படுத்தாத சுமார் 232 வெதுப்பகங்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன என்று நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த வெதுப்பகங்கள் மற்றும் விற்பனை நிலையங்களுக்கு எதிராக வழக்கு தொடரப்படவுள்ளது. பாண் தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை இவைகள் மீறியிருந்தமை சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போது கண்டறியப்பட்டிருந்தன.

பாண் தொடர்பான விதிகளை மீறும் வெதுப்பகங்கள், விற்பனை நிலையங்கள் தொடர்பில் 1977 என்ற அவசர தொலைபேசி இலக்கம் ஊடாக நுகர்வோர் அதிகார சபைக்கு முறைப்பாடு செய்ய முடியும்.

(ஐ)

# புதுப்பிக்கப்பட்ட 200 பஸ்கள் மீண்டும் சேவைக்கு திரும்பின!

கொழும்பு, பெப். 11

சேவையில் இருந்து நீக்கப்பட்ட 200 பேருந்துகளை புதுப்பித்து மீண்டும் சேவையில் ஈடுபடுத்தும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

பிரதமர் தினேஷ் குணவர்த்தன தலைமையில் பாராளுமன்ற வளாகத்தை அண்மித்த ஜப்பான் நட்புறவு வீதிக்கு அருகில் இந்த நிகழ்வு நடைபெற்றது என்று பிரதமரின் பணிமனை தெரிவித்தது.

நாடு முழுவதிலும் உள்ள 107 இலங்கை போக்குவரத்து சபையின் சாலைகள் மற்றும் 11 பிராந்திய வேலைத்தளங்களைச் சேர்ந்த பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்பவியலாளர்கள் இந்தப் பேருந்துகளை புதுப்பித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# சிறைக் கைதிகளின் தகவல்களை டிஜிற்றல் மயமாக்க நடவடிக்கை!

கொழும்பு, பெப். 11

சிறைக்கைதிகளின் கைரேகைகளை பெற்று டிஜிற்றல் மயமாக்குவதற்கு சிறைச்சாலைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி, நாட்டிலுள்ள 30 சிறைச்சாலைகளில் உள்ள கைதிகளின் கைரேகைகளை பெற்று டிஜிற்றல் மயமாக்கப்படவுள்ளன. இதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று சிறைச்சாலை சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஹேமந்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.

(ஐ)

# சுகாதார தொழில்சங்கங்களின் பணிப்புறக்கணிப்பு ஒத்திவைப்பு

கொழும்பு, பெப். 11

தொழில் சார் உரிமை கோரி 72 சுகாதாரத் தொழில் சங்கங்கள் முன்னெடுக்கப்பட இருந்த தொழிற்சங்க நடவடிக்கை ஒரு வார காலத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக சுகாதார தொழிற்சங்கங்களின் கூட்டிணைவு தெரிவித்துள்ளது.

மருத்துவர்களுக்கு போக்குவரத்து உள்ளிட்ட பிற கொடுப்பனவாக 35ஆயிரம் ரூபாய் வழங்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது. இதையடுத்து, தமக்கும் அவ்வாறான கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும் என்று கோரி 72 சுகாதார தொழில்சங்கங்கள் போராட்டங்களை முன்னெடுத்திருந்தன.

அவர்களின் பணிப்புறக்கணிப்பு போராட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்ட நிலையில் மீண்டும் தொழில்சங்க போராட்டத்தில் ஈடுபட அவை ஆயத்தமாகின. இந்த நிலையில், நிதி அமைச்சு பரிந்துரைத்த குழு எதிர்வரும் 12ஆம் திகதி கூடுகிறது. இதன்போது சுகாதார தொழிலாளர்களுக்கான கொடுப்பனவு குறித்துத் தீர்மானிக்கப்படவுள்ளது. இதையடுத்து போராட்டம் ஒத்திவைக்கப்படவுள்ளது. (ஐ)

# தாயாரின் தவறான தொடர்பால் 13 வயது சிறுமிமீது வன்புணர்வு!

கொழும்பு, பெப். 11

தாயாருடன் தவறான தொடர்பில் இருந்தவர், அந்தப் பெண்ணை கட்டி வைத்து விட்டு அவரின் 13 வயது மகளை வன்புணர்வு செய்தவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குருநாகலில் இடம்பெற்ற இந்த சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

தாயாருடன் தவறான தொடர்பில் இருந்தவர் மது போதையில் அவரின் வீட்டுக்கு சென்றுள்ளார். சிறுமியின் தாயின் கை, கால்களை கட்டி அவரை சமையல் அறைக்குள் வைத்து கதவுகளை பூட்டியுள்ளார்.

பின்னர், அந்தப் பெண்ணின் மகளான 13 வயது பெண்ணை வேறோர் அறைக்குள் இழுத்துச் சென்று வன்புணர்வு செய்துள்ளார்.

பாதிக்கப்பட்ட சிறுமியின் தாய் இது தொடர்பில் மினுவாங்கொடை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதையடுத்து சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். பாதிக்கப்பட்ட சிறுமி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ)

# பொருளாதாரம் நிலையானதாக அமையாவிடின் எதிர்மறை தாக்கம்!

**ஹர்ஷ டி சில்வா**

கொழும்பு, பெப். 11

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை தொடர்ந்து நாட்டின் பொருளாதாரம் ஸ்திரமடைந்துள்ளது என்பதை ஏற்றுள்ளோம். தற்போதைய முன்னேற்றம் நிலையானதாக அமையாவிடின் எதிர்மறையான விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும். சந்தைப்படுத்தல் பொருளாதாரம் குறித்து அரசாங்கம் விசேட கவனம் செலுத்த வேண்டும் - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் அவர் ஆற்றிய உரையில்,

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை தொடர்ந்து நாட்டின் நிதி நிலைமை ஸ்திரமடைந்துள்ளது என்பதை ஏற்றுக்கொள்கிறோம். பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த அமுல்படுத்தப்பட்ட தவறான தீர்மானங்களால் தேசிய பொருளாதாரம் ஒடுக்கப்பட்டுள்ளது. தொழிலின்மை தீவிரமடைந்துள்ளதுடன் சிறு மற்றும் நடுத்தர கைத்தொழில் முயற்சியாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். பொருளாதாரத்தின் இயந்திரம் செயலிழந்துள்ளது.

பொருளாதார பாதிப்புக்காக அரசாங்கம் அமுல்படுத்தியுள்ள தீர்மானங்களால் பொருளாதாரம் ஸ்திரமடைந்திருந்தாலும் ஏழ்மை இரட்டிப்படைந்துள்ளது. எதிர்பாராத வீழ்ச்சிக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளார்கள். போராடுகிறார்கள். தற்போதைய ஸ்திரப்படுத்தல் தற்காலிகமானதாக உள்ளது. நிலையான பொருளாதார செயல்திட்டங்களை உறுதியாக அமுல்படுத்தாவிட்டால் இந்த ஸ்திரத்தன்மை மற்றும் சமநிலை என்பன மீண்டும் பலவீனமடையும், சமூக கட்டமைப்பில் நெருக்கடிகள் தோற்றம் பெறும்.

நிலையான பொருளாதார ஸ்திரத்தன்மையை அடைய வேண்டுமாயின் போட்டித்தன்மையான சமூக சந் தைப்படுத்தல் பொருளாதாரத்தை அமுல்படுத்தவேண்டும். பொருளாதார விவகாரத்தில் தனிப்பட்ட சுதந்திரம் இன்றியமையாததாகும். தொழிற்றுறை மற்றும் முயற்சியாளர்களை ஊக்குவிக்க வேண்டுமாயின் பொருளாதார தனிமனித சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

மத்திய வங்கி அரசியல் மயப்படுத்தப்பட்டமை பொருளாதார வீழ்ச்சிக்கான பிரதான காரணியாகும். வட்டி வீதம், பணவீக்கம், ரூபாயின் பெறுமதி என்பன நிதி கொள்கையுடன் தொடர்புடையது. நிதி கொள்கை பிரச்னைக்குரியதாகக் காணப்படும் போது வட்டி வீதம், பணவீக்கம், ரூபாயின் பெறுமதி என்பனவற்றை நிலையானதாகப் பேண முடியாது. மத்திய வங்கி சட்டத்துக்கு அமைய தற்போது எடுக்கப்பட்டுள்ள தீர்மானங்களால் நிதி ஒழுக்கம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்பதை ஏற்றுக் கொள்கிறோம்.

பொருளாதார ரீதியில் எடுக்கப்பட்டுள்ள தீர்மானங்கள் வெற்றி பெற வேண்டுமாயின் சந்தை பொருளாதாரம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பொருளாதார மீட்சிக்கான 20 திட்டங்களை முன்வைத்துள்ளார். 2022 ஓகஸ்ட் மாதமும், 2023 பெப்ரவரி மாதமும் பொருளாதார ஸ்திரப்படுத்தலுக்கான திட்டங்களை முன்வைத்தோம் .ஆனால் அரசியல் நிலைப்பாட்டுக்குள் இருந்து கொண்டு அரசாங்கம் எமது யோசனைகளைக் கவனத்தில் கொள்ளவில்லை.

பொருளாதார மீட்சிக்கு அரசாங்கம் எடுக்கும் சிறந்த முரண்பாடற்ற தீர்மானங்களுக்கு ஆரம்பத்திலிருந்து நாங்கள் ஒத்துழைப்பு வழங்கியுள்ளோம். பாரம்பரியமான எதிர்க்கட்சியாக செயல்படவில்லை. சந்தைப் பொருளாதாரத்தை முன்னிலைப்படுத்திய சிறந்த திட்டங்களை வெகுவிரைவில் வெளிப்படுத்துவோம் - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu
11.02.2024 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், தை 28

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தென்னிந்தியாவுடன் தரைவழித் தொடர்பு?

அவுஸ்திரேலியாவில் இடம்பெற்ற இந்து சமுத்திர நாடுகளின் மகாநாட்டில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தென்னிந்தியாவுக்கும் இலங்கைக்குமான தரைவழித் தொடர்பை ஏற்படுத்துவது, பற்றி பேசியிருக்கின்றார். இதற்கு முன்னரும் பல்வேறு சந்தர்ப்பங்களில் இது பற்றி பேசியிருக்கின்றார் - ஆனால், பேசிக்கொண்டு மட்டும்தான் இருக்கின்றார். இவ்வாறுதான் - அடுத்த சுதந்திர தினத்திற்குள், அரசியலமைப்பிலுள்ள 13ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்தப் போவதாக குறிப்பிட்டார் - ஆனால், எதுவும் நடைபெறவில்லை.

இந்தியா உலகின் முன்னணி பொருளாதாரங்களில் ஒன்று. இலங்கை மோசமானதொரு பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கிய போது, இலங்கையை உடனடியாக மீட்பதற்கு இந்தியாவே உதவியது. இந்தியா உதவாது விட்டிருந்தால், நிலைமைகள் மோசமடைந்திருக்கும். இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு, இந்தியாவுடன் இணைந்து செயல்படுவது இன்றியமையாத ஒன்று. அந்த வகையில், தென்னிந்தியாவுக்கும் இலங்கைக்குமான தரைவழித் தொடர்பை ஏற்படுத்துவது, இலங்கையின் வேகமான பொருளாதார மீட்சிக்கு இன்றியமையாத ஒன்றுதான். அதில் சந்தேகமில்லை ஆனால், அதனை நடைமுறைப்படுத்துவதில் கொழும்பு எந்தளவு உறுதியான நிலைப்பாட்டுடன் இருக்கின்றது என்பதுதான் கேள்வி.

பல்வேறு விடயங்கள் பேச்சளவில் மட்டும்தான் இருக்கின்றது. நாடு ஒரு ஜனாதிபதி தேர்தலை எதிர்கொண்டிருக்கும் நிலையில், ரணில் விக்கிரமசிங்க பல்வேறு விடயங்கள் தொடர்பில் பேசிவருகின்றார். தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயத்தில் முன்னேற்றங்களை காண்பிப்பதாக கூறியது போல், இந்தியா தொடர்பான வாக்குறுதிகளும் அமைந்துவிடுமா - என்பதுதான் கேள்வி.

இந்தியா தொடர்ந்து தமிழ் மக்களின் இனப்பிரச்னைக்கான தீர்வு தொடர்பில் பேசிவருகின்றது. அரசியலமைப்பிலுள்ள 13ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்துவது தொடர்பில் ஆலோசனைகளை பகிர்ந்து வருகின்றது. ஆனால், அரசாங்கம் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதனையும் முன்னெடுக்கவில்லை. மாகாண சபை தேர்தல் தொடர்ந்தும் பிற்போடப்பட்டுவருகின்றது. ஜனாதிபதிக்குள்ள அதிகாரங்களின் அடிப்படையில் அதனை செய்ய முடியும். ஆனால், அதனை செய்வதற்கான விருப்புடன் ஜனாதிபதி இல்லை.

இந்த நிலையில்தான் கவர்சிகரமான திட்டங்கள் பற்றி அவர் தொடர்ந்தும் பேசி வருகின்றார். ஆனால், இவ்வாறு பேசுகின்றபோது, இது சிங்கள கடும்போக்கு வாதிகள் மத்தியில் தேவையற்ற அச்சங்களையும் ஏற்படுத்தலாம், இதனால், இந்தியாவின் ஏனைய திட்டங்களும் பாதிக்கப்படவும் வாய்ப்புண்டு. இவை குறித்து ஜனாதிபதி அறியாமல் இருக்கின்றாரா?

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலின் போது, இவ்வாறான விடயங்கள் தேர்தல் பிரசாரங்களுக்கு பயன்படுத்தப்படும். கோட்டாபயவின் வீழ்ச்சிக்கு பின்னர், சிதறியிருக்கும் கடும்போக்கு சிங்கள - பௌத்த தேசியவாத தரப்புகள் தங்களை ஒருங்கிணைப்பதற்கான வாய்ப்புகளைத் தேடிவருகின்றன. இந்த நிலையில், நாட்டை இந்தியாவின் காலணியாக்க முயற்சிக்கின்றார்கள் என்றவாறு, கடும்போக்குவாதிகள் போர்கொடி உயர்த்தலாம். 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் ஜனாதிபதி அறிவித்தவுடன், கடும்போக்கு பௌத்த பிக்குகள், 13ஆவது திருத்தச்சட்டத்தின் பிரதியை எரித்து தங்களின் எதிர்ப்பை வெளிப்படுத்தினர். அதன் பின்னர் ஜனாதிபதி அமைதியடைந்துவிட்டார். தென்னிந்தியாவுடனான தரைவழிப் பாதை திட்டத்திற்கும் அதுதான் நடக்குமா?

# ரணிலின் அரசாங்கத்துடன் தேசிய மக்கள் சக்தி சேரும்!

## ஐ. தே. கட்சி இப்படி நம்பிக்கை

*கொழும்பு, பெப். 11*

அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி ரணில் அரசாங்கத்துடன் சேர்ந்து செயல்படும் என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.



அந்தக் கட்சியின் தவிசாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்த்தன இந்த நம்பிக்கையை வெளியிட்டுள்ளார்.

மேலும், "தேசிய மக்கள் சக்தி, உலகத் தலைவர்களுடன் இணைந்து பணியாற்றுவது நல்ல விடயமாகும். நாட்டின் கொள்கைகளை உருவாக்குவதற்கு தேசிய மக்கள் சக்தி தமது பங்களிப்பை வழங்கும்.

இது புதிய விடயம் ஒன்றல்ல. கடந்த காலத்திலும் தேசிய மக்கள் சக்தியான ஜே. வி. பி. மறைந்த முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன மற்றும் முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா குமாரதுங்க, மகிந்த ராஜபக்ஷ ஆகியோரின் அரசாங்கங்களுடன் இணைந்து பணியாற்றியுள்ளது.

2015ஆம் ஆண்டு நல்லாட்சி அரசுக்கு ஜே. வி. பி. ஆதரவு வழங்கியுள்ளது. அந்தவகையில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்துக்கும் ஜே. வி. பியின் கூட்டணியான தேசிய மக்கள் சக்தி ஆதரவு வழங்கும்."
- என்றார். (ஐ)

# வெலிக்கடை சிறை மருத்துவமனை நோயாளர்களால் நிரம்பி வழிகிறது!

*கொழும்பு, பெப். 11*

வெலிக்கடை சிறைச்சாலை மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் கைதிகளின் எண்ணிக்கை இரட்டிப்பாகியுள்ளது. இங்கு, 185 படுக்கைகளே உள்ளன. ஆனால், தற்போது 344 கைதிகள் நோயாளர்களாக சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று சிறைச்சாலை சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஹேமந்த ரணசிங்க தெரிவித்தார்.

சிறை மருத்துவமனையின் 5 விடுதிகளிலும் 55 சிக்குன் குனியா நோயாளர்கள், 61 பொது நோயாளர்கள், 62 உடல் இயலாமை சார் நோயாளர்கள், 82 தொற்று நோய் சார் நோயாளர்கள், 110 மனநோயாளர்கள், 29 காச நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நாடு முழுவதும் 30 சிறைகள் உள்ளன ஒவ்வொரு சிறைக்கும் தனியாக மருத்துவமனை உள்ளது. அவர்களில் வெலிக்கடை பிரதான சிறைச்சாலை மருத்துவ மனையில் மாத்திரமே இந்த நிலைமை காணப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம், முன்னாள் சுற்றாடல் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவும் இந்த சிறைச்சாலை மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருகின்றார். (ஐ)

# 'யுக்திய' நடவடிக்கை 663 பேர் கைதாகினர்!

*கொழும்பு, பெப். 11*

நள்ளிரவு 12.30 மணி வரையான 24 மணி நேரத்தில் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட பொலிஸாரின் 'யுக்திய' நடவடிக்கைகளில் 663 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், போதைப் பொருள் குற்றங்களுடன் தொடர்புடைய 547 சந்தேக நபர்கள் மற்றும் குற்றப் பிரிவுகளில் குறிப்பிடப்பட்ட பட்டியலில் இருந்த 116 சந்தேக நபர்கள் உட்பட மொத்தம் 663 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடமிருந்து 175 கிராம் 191 மில்லி கிராம் ஹெராயின், ஐஸ் 171 கிராம் 197 மி.கி, கஞ்சா 515 கிராம் 538 மி.கி, 807 கஞ்சா செடிகள், மாவா 77 கிராம் 200 மி.கி, 296 மாத்திரைகள், மதன மோதகம் 85 கிராம் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதானவர்களில் இருவர் போதைப் பொருளுக்கு அடிமையானவர்களாவர். இவர்கள் புனர்வாழ்வு முகாமில் சேர்க்கப்பட்டுள்ளனர்.


மேலும், குற்றப்பிரிவுக்கு குறிப்பிடப்பட்ட பட்டியலில் கைது செய்யப்பட்ட 116 சந்தேக நபர்களில் 14 சந்தேக நபர்கள் போதைப் பொருள் குற்றங்கள் தொடர்பான திறந்த பிடியாணைகளையும் 95 பேர் போதைப்பொருள் அல்லாத குற்றங்கள் தொடர்பான திறந்த பிடியானைகளையும் பெற்றுள்ளனர்.

கைரேகை மூலம் அடையாளம் காணப்பட்ட 3 சந்தேக நபர்களும், குற்றங்களுக்காக தேடப்பட்டு வரும் 4 சந்தேக நபர்களும் நடவடிக்கைகளில் கைது செய்யப்பட்டுள்ளனர்
- என்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



# கனடாவில் வாழ முடியாமல் இந்தியர்கள் பலர் நாடு திரும்புவது ஏன்?




வாய்ப்புகளை தேடி அலையும் குஜராத் மற்றும் பஞ்சாபைச் சேர்ந்த இளைஞர்களின் விருப்ப நாடாக கனடா நீண்ட காலமாக இருந்து வருகிறது, ஆனால் தற்போது அந்த கனடா கனவு தகர்ந்து போகிறதா என்ற கேள்வி எழுந்துள்ளது.

வளம் மிகுந்த பஞ்சாபின் கிராமப் புறங்களில் பயணித்தால் , அங்கு வெளிநாட்டு பயணங்களுக்கான விளம்பரங்களை அதிகம் பார்க்கலாம்.

அதன் வயல்வெளிகளில் கனடா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகளுக்கு எளிதாக செல்ல முடியும் என்று உறுதியளிக்கும் நூற்றுக்கணக்கான விளம்பர பலகைகள் உயர்ந்து நிற்பதை பார்க்கலாம். மாடி வீட்டின் சுவர்கள் தோறும் வெளிநாட்டிற்கு அழைத்து செல்லும் முகவர்களின் விளம்பரங்கள் ஆக்கிரமித்திருக்கும்.

பதிண்டா நகரின் தெருக்களில் பல முகவர்களும், அவர்களை தேடி வரும் இளைஞர்களின் வெளிநாட்டு கனவினை உடனடியாக சாத்தியப்படுத்துவதாக உறுதியளிப்பார்கள்.

இந்தியாவின் வடமேற்கு மாநிலமான இங்கு ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக வெளிநாட்டுக் குடியேற்றத்தின் அலை வீசி வருகிறது. அதில் பிரிட்டிஷ் இந்திய ராணுவத்தில் இருந்த சீக்கிய வீரர்கள் கனடாவுக்குச் செல்லும் பயணம் தொடங்கி, சுதந்திரத்திற்குப் பிறகு கிராமப்புற பஞ்சாபியர்களின் இங்கிலாந்து பயணம் வரை அடங்கும்.

**கனடா மீதான ஏமாற்றம் ஏன்?**

ஆனால், தற்போது கனடா செல்வதற்கான கனவு கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து வருகிறதோ என்ற கேள்வி எழுந்துள்ளது.

கனடாவில் குடியேறிய பலரும் தங்களது தாய்நாடுகளுக்கு திரும்பி வருகின்றனர்.

அப்படியானவர்களில் ஒருவர்தான், 28 வயதான பால்கர். கனடாவில் ஒரு வருடம் தங்கியிருந்த அவர் 2023 இன் தொடக்கத்தில் இந்தியா திரும்பினார். கோவிட் -19 தொற்றுநோய் இந்தியாவில் பரவத் தொடங்கியதை அடுத்து அவர் தனது சிறிய கிராமமான பித்தோவை விட்டு வெளியேறினார். அப்போது அவரின் இறுதி இலக்கே கனடாவின் குடியுரிமையை பெறுவது மட்டுமே. எனவே, இவரின் கல்விக்காக இவரது குடும்பம் தங்களது நிலத்தை அடமானம் வைத்துள்ளனர்.

ஆனால், கனடா சென்ற சில மாதங்களில் அவரது கனவு மங்கிவிட்டது.

இதுகுறித்து பேசிய பால்கர், “அங்கு எல்லாமே விலை அதிகம். கல்லூரி முடித்த பிறகு, பிழைப்பிற்காக வாரத்திற்கு 50 மணிநேரம் நான் வேலை செய்ய வேண்டியிருந்தது. பணவீக்கம் அதிகரித்ததன் காரணமாக பல மாணவர்கள் தங்களது படிப்பை கைவிடுகின்றனர்” என்றார்.

தற்போது பால்கர் தனது பெரிய முற்றம் கொண்ட தனது பாரம்பரிய பஞ்சாபி வீட்டின் ஒரு சிறிய அறையில் எம்ப்ராய்டரி தொழிலை செய்து வருகிறார். மேலும் தனது விவசாயக் குடும்பத்தின் வருமானத்தை அதிகரிக்கவும் உதவி வருகிறார்.

இது போன்ற கிராமப்புறங்களில் மிகக் குறைவான வேலை வாய்ப்புகளே உள்ளன. ஆனாலும் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி இந்த இளைஞர்கள் உயரத்திற்கு செல்கின்றனர். பால்கர் தனது வணிகத்தின் பெரும்பகுதியை இன்ஸ்டாகிராம் மூலம் செய்து வருகிறார்.

இதுகுறித்து பேசுகையில், “ வாழ்க்கை வேடிக்கையாக இருக்கிறது. வீட்டிலேயே தங்கி நல்ல சம்பாத்தியம் பெறும்போது, நான் ஏன் அங்கு சென்று கஷ்டங்களை அனுபவிக்க வேண்டும்?” என்ற கேள்வியை முன்வைக்கிறார் பால்கர்.

இருப்பினும் கூட கனடாவில் குடியுரிமை பெறுவதற்கான விருப்பம் கிராமப்புறத்தில் உள்ள நடுத்தர மற்றும் கீழ்-நடுத்தர குடும்பங்களிடம் வலுவாக உள்ளது. ஆனால், அங்கு சென்று வேலை மற்றும் வீட்டு வசதி கிடைக்காமல் திண்டாடும் இளைஞர்கள் வெளியிடும் வீடியோக்கள் இவர்களுக்கு பீதியை ஏற்படுத்தியுள்ளதாக கூறுகிறார் குடியேற்ற முகவர்.

ஒரு மதிப்பீட்டின்படி, இந்தியாவில் இருந்து கனடாவில் படிப்பதற்கான அனுமதிக்கோரி விண்ணப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் 2023இன் இரண்டாம் பாதியில் 40 வீதம் குறையும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

(14ஆம் பக்கம் பார்க்க)

## இந்தவார ராசிபலன் 11.02.2024 - 17.02.2024

ஞாயிற்றுக்கிழமை
சோபகிருது வருடம் - தை 28
நல்ல நேரம்: 9.34 - 11.04
ராகு காலம் : 05.04 - 06.34 திதி : துதியை

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

சமூகத்தில் உயர்வான நிலையை அடைவீர்கள். தொழிலில் புதிய முதலீடு செய்வீர்கள். வாக்குவாதங்களைத் தவிர்க்கவும். கல்விக்காகச் செலவழிப்பீர்கள். உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரிகளின் பாராட்டுகளைப் பெறுவீர்கள். வியாபாரிகள் விற்பனையை பெருக்குவீர்கள். விவசாயிகள் விவசாயத்தை மேம்படுத்துவீர்கள். அரசியல்வாதிகள் மேலிடத்தின் கட்டளைப்படி நடப்பீர்கள். கலைத் துறையினரின் பொருளாதார நிலை உயரும். பெண்கள் நிலைமையை புரிந்துகொள்வீர்கள். மாணவர்கள் வெளியூர் சென்று பயில வாய்ப்புகள் அதிகரிக்கும்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

நன்கு உழைத்து பொருளீட்டுவீர்கள். நண்பர்கள் உதவியாக இருப்பார்கள். வாகனங்களைப் பழுதுபார்க்க நேரிடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். வியாபாரிகள் வியாபாரத்தில் கவனம் செலுத்துவீர்கள். விவசாயிகளின் மகசூல் பெருகும். அரசியல்வாதிகள் எதிரிகளின் சூழ்ச்சி பலிக்க இடம் தரமாட்டீர்கள். கலைத் துறையினர் பொருளாதாரத்தில் ஏற்றம் காண்பீர்கள். பெண்கள் குழந்தைகள் விஷயத்தில் மனக்குறைகள் நீங்கும்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

தொழிலில் முன்னேற்றம் அடைவீர்கள். வருமானம் உயரத் தொடங்கும். பெரியோரின் ஆசி கிடைக்கும். பழைய கடன்களை அடைப்பீர்கள். உத்தியோகஸ்தர்கள் செய்யாத குற்றத்துக்காக, குறை கூறப்படுவீர்கள். வியாபாரிகள் போட்டிகளைச் சமாளிப்பீர்கள். விவசாயிகள் முக்கிய செயல்களைச் செய்து முடிப்பீர்கள். அரசியல்வாதிகளின் தனித்தன்மை வெளிப்படும். கலைத் துறையினர் புதிய வாய்ப்புகளைத் தேடிப் பெறுவீர்கள். பெண்கள் உடன் பிறந்தோருக்கு மதிப்பு அளிப்பீர்கள். மாணவர்கள் படிப்பில் சாதனைகளைப் படைப்பீர்கள்

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

அரசு சலுகைகள் கிடைக்கும். செல்வாக்கு உயரும். குழந்தைகள் உங்கள் சொல் கேட்டு நடப்பார்கள். தொழிலில் நிலவிய இடையூறுகள் அகலும். உத்தியோகஸ்தர்கள் புதிய பணிக்கு மாறுவீர்கள். வியாபாரிகளுக்கு தவறிய வாய்ப்புகள் மீண்டும் கிடைக்கும். விவசாயிகள் கால்நடைகளால் பயன் பெறுவீர்கள். அரசியல்வாதிகளின் மனதில் புதிய சிந்தனைகள் உதயமாகும். கலைத் துறையினர் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். பெண்கள் பிறரால் மதிக்கப்படுவார்கள். மாணவர்கள் புதிய பயிற்சிகளில் நல்ல மதிப்பெண்களைப் பெறுவீர்கள்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

தொழிலில் புதிய விஷயங்களை கற்பீர்கள். இழுபறியான காரியங்கள் நிறைவேறும். கடன்களைத் திரும்ப அடைப்பீர்கள். குழந்தைகளின் திறமை வெளிப்படும். உத்தியோகஸ்தர்களுக்கு பதவி உயர்வு உண்டு. வியாபாரிகளுக்கு நஷ்டம் ஏற்படாது. விவசாயிகளுக்கு நீர்வரத்து அதிகரிப்பால் எந்த பாதிப்பும் ஏற்படாது. கலைத் துறையினர் பொருளாதார நிலையில் சற்று ஏற்றங்களைக் காண்பீர்கள். பெண்களுக்கு குழந்தைகள் விஷயத்தில் சிறிது மனக்குறை ஏற்படும்.மாணவர்கள் தேவையற்ற விஷயங்களை அறவே தவிர்த்துவிடுவீர்கள்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

நல்ல திருப்பங்கள் உண்டாகும். பண விஷயங்களில் கவனமாக இருப்பீர்கள். எவருக்கும் கடன் கொடுக்க மாட்டீர்கள். மகிழ்ச்சி தரும் பயணங்களை மேற்கொள்வீர்கள். உத்தியோகஸ்தர்கள் சக ஊழியர்களால் பெருமையடைவீர்கள். வியாபாரிகளுக்கு கொடுக்கல் ா வாங்கல் விஷயம் சிறப்பாக முடிவடையும். விவசாயிகள் கொள்முதலில் லாபத்தைக் காண்பீர்கள். அரசியல்வாதிகளுக்கு மதிப்பு கூடும். கலைத் துறையினர் புதிய நுட்பங்களைக் கற்பீர்கள். பெண்கள் பெற்றோருடன் இணக்கமாகச் செயல்படுவீர்கள். மாணவர்கள் புதிய படிப்புகளில் சேருவீர்கள்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

பொருளாதார நிலை உயரும். குடும்பத்தில் அந்தஸ்து அதிகரிக்கும். வழக்குகளில் வெற்றி பெறுவீர்கள். தனித்தே காரியங்களைச் செய்து வெற்றி பெறுவீர்கள். உத்தியோகஸ்தர்களுக்கு பிறர் உதவியாக இருப்பார்கள். வியாபாரிகள் புதிய முயற்சிகளில் வெற்றி பெறுவீர்கள். விவசாயிகள் புதிய குத்தகைகளை எடுப்பீர்கள். அரசியல்வாதிகள் கட்சிக் கட்டளைகளை உடனுக்குடன் நிறைவேற்றுவீர்கள். கலைத் துறையினரின் செயல்திறன் அதிகரிக்கும். பெண்கள் குடும்பத்தினருடன் ஒற்றுமையாகப் பழகுவீர்கள்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

உங்கள் பேச்சில் இனிமை கூடும். விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். வருமானம் இருந்தாலும், சிக்கனத்தைக் கடைப்பிடிப்பீர்கள். தரும காரியங்களில் ஈடுபடுவீர்கள். உத்தியோகஸ்தர்கள் தனித்துப் பணியாற்றுவீர்கள். வியாபாரிகள் புதிய முதலீடுகளில் எச்சரிக்கையுடன் ஈடுபடவும். விவசாயிகள் பூச்சி மருந்துக்கு செலவு செய்வீர்கள். அரசியல்வாதிகள் புதிய பதவிகளில் சிறப்பாகப் பணியாற்றுவீர்கள். கலைத் துறையினருக்கு வாய்ப்புகள் அதிகரிக்கும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

தொழிலில் எதிர்பார்த்த இலக்குகளை எட்டுவீர்கள். கடன்கள் வசூலாகும். குடும்பத்தில் நிம்மதி அதிகரிக்கும். வீண் விவாதங்களைத் தவிர்ப்பீர்கள். உத்தியோகஸ்தர்கள் அலுவலகப் பிரச்னைகளைச் சாதுர்யமாகச் சமாளிப்பீர்கள். வியாபாரிகள் கடை ஊழியர்களை நன்றாக நடத்துவீர்கள். விவசாயிகள் குத்தகைகளில் நல்ல வருவாய் ஈட்டுவீர்கள். அரசியல்வாதிகளின் ஆலோசனைகளை கட்சி மேலிடம் ஏற்கும். கலைத் துறையினர் சில ஒப்பந்தங்களைப் பெறுவீர்கள். பிறரை அனுசரித்து நடப்பீர்கள்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

எதிர்ப்புகள் இருக்காது. திட்டமிட்டதுபோல் செயல்களைச் செய்து முடிப்பீர்கள். தொழிலில் ஆதாயம் பெருகும். குழந்தைகளை ஆன்மிகத்தில் ஈடுபடுத்துவீர்கள். உத்தியோகஸ்தர்கள் அலுவலக விஷயமாக பிரயாணம் செய்வீர்கள். வியாபாரிகள் பிரச்னைகளைச் சமாளிப்பீர்கள். விவசாயிகளுக்கு சிறிது செலவு ஏற்படும். அரசியல்வாதிகள் மன உறுதியோடு இருப்பீர்கள். கலைத் துறையினருக்கு நன்மை உண்டு. பெண்கள் உறவினர்களை அனுசரித்து நடப்பீர்கள். மாணவர்கள் உயர்கல்விக்கான ஆலோசனைகளைப் பெறுவீர்கள்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

குடும்பத்தில் ஒற்றுமை நிலவும். சுபகாரிய பேச்சுவார்த்தை நல்ல முடிவுக்கு வரும். வெளியூர் பயணம் உண்டு. புதிய தொழில்நுட்பங்களைக் கற்பீர்கள். உத்தியோகஸ்தர்கள் விரும்பிய இடமாற்றங்களைப் பெறுவீர்கள். வியாபாரிகளுக்கு முன்னேற்றமான சூழல் நிலவும். விவசாயிகள் கடினமான வேலைகளை எளிதில் முடித்துவிடுவீர்கள். அரசியல்வாதிகளுக்கு புதிய வாய்ப்புகள் கிடைக்கும். கலைத் துறையினர் உடனிருப்போரை புரிந்துகொள்வீர்கள். பெண்கள் பிரச்னைகளைச் சமாளிப்பீர்கள்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

முயற்சிகள் வெற்றி பெறும். சுறுசுறுப்பாகச் செயலாற்றுவீர்கள். பொறுமைக்கு நல்ல பலன் கிட்டும். உத்தியோகஸ்தர்கள் சக ஊழியர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாவீர்கள். வியாபாரிகள் கடினமாக உழைத்து வியாபாரத்தைப் பெருக்குவீர்கள். விவசாயிகள் சிறப்பாகப் பணியாற்றுவீர்கள். அரசியல்வாதிகளிடம் மேலிடம் கருணை காட்டும். கலைத் துறையினருக்கு புதிய கலைநிகழ்ச்சிகள் ஒப்பந்தமாகும். பெண்கள் குடும்பத்தில் மருத்துவச் செலவு குறையக் காண்பீர்கள். மாணவர்கள் உடல் நலமும், மன வளமும் சிறக்கும்.

# தமிழக வெற்றி கழகம்: கலகம் செய்யுமா? கரைந்து போகுமா?

செ.கார்கி

நடிகர் விஜய் 'தமிழக வெற்றி கழகம்' என்ற புதிய அரசியல் கட்சியைத் தொடங்கியுள்ளார். அவர் அரசியல் கட்சி தொடங்குவார் என்பது அனைவருக்கும் தெரிந்திருந்தாலும், தனக்கான மார்க்கெட் முடியும் முன்பே தொடங்கியது பேசுபொருளாக மாறியிருக்கின்றது.

சிலர் அதை தியாகமாகவும், மக்களின் மீதான விஜயின் அக்கறையாகவும் கூறுகின்றார்கள். விஜயின் அரசியல் கணக்கை நாம் புரிந்து கொள்ள முயற்சிக்கும் போது, அது தியாகமா அல்லது சமூக அக்கறையா என்பதையும் நாம் புரிந்து கொள்ள முடியும்.

அதற்கு முன் தமிழக வெற்றி கழகத் தலைவர் விஜய் வெளியிட்ட அறிக்கையை நாம் பார்த்து விடுவோம். அந்த அறிக்கையில்,

"அன்பான தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும், என் பணிவான வணக்கங்கள். "விஜய் மக்கள் இயக்கம்" பல வருடங்களாக தன்னால் இயன்ற வரையில் பல்வேறு மக்கள் நலத் திட்டங்களையும், சமூக சேவைகளையும், நிவாரண உதவிகளையும் செய்து வருவது நீங்கள் அனைவரும் அறிந்ததே. இருப்பினும், முழுமையான சமூக, பொருளாதார, அரசியல் சீர்திருத்தங்களைக் கொண்டு வர ஒரு தன்னார்வ அமைப்பினால் மட்டும் இயலாத காரியம். அதற்கு அரசியல் அதிகாரம் தேவைப்படுகிறது. vijay speech தற்போதைய அரசியல் சூழல் பற்றி நீங்கள் அனைவரும் அறிந்ததே. நிர்வாக சீர்கேடுகள் மற்றும் "ஊழல் மலிந்த அரசியல் கலாச்சாரம்" ஒருபுறம் என்றால், நம் மக்களை சாதி மத பேதங்கள் வாயிலாக பிளவுபடுத்த துடிக்கும் "பிளவுவாத அரசியல் கலாச்சாரம்" மறுபுறம், என்று இருபுறமும் நம் ஒற்றுமைக்கும், முன்னேற்றத்திற்குமான முட்டுக்கட்டைகள் நிறைந்துள்ளன.

ஒரு தன்னலமற்ற, வெளிப்படையான, சாதிமத பேதமற்ற, தொலைநோக்கு சிந்தனை உடைய, லஞ்ச - ஊழலற்ற திறமையான நிர்வாகத்திற்கு வழிவகுக்கக் கூடிய அடிப்படை அரசியல் மாற்றத்திற்காக குறிப்பாக தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொருவரும் ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பது நிதர்சனமான உண்மை. மிக முக்கியமாக, அத்தகைய அரசியல், நம் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு உட்பட்டு, தமிழ் நாட்டின் மாநில உரிமைகள் சார்ந்து, இந்த மண்ணுக்கேற்ற "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" (பிறப்பால் அனைவரும் சமம் ) என்கிற சமத்துவ கொள்கைப் பற்று உடையதாகவும் இருக்க வேண்டும்"

அத்தகைய அடிப்படை அரசியல் மாற்றத்தை மக்களின் ஏகோபித்த அபிமானமும், அன்பும் பெற்ற முதன்மையான ஒரு மக்கள் சக்தியால்தான் சாத்தியப்படுத்த முடியும். என்று குறிப்பிட்டு இருக்கின்றார்.

தற்போது வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கையை மட்டுமே வைத்துக் கொண்டு நம்மால் அவரின் அடுத்த கட்ட அரசியலை மதிப்பிட முடியாது என்றாலும், குறைந்த பட்சம் இந்த அறிக்கையில் இருக்கும் போதாமையை சுட்டிக் காட்ட வேண்டி இருக்கின்றது.

அதில் முதன்மையானது தன்னலமற்ற, வெளிப்படையான, லஞ்சம், ஊழலற்ற திறமையான நிர்வாகம் போன்றவை எல்லாம் ஒரு சமூகத்தை மாற்றி அமைப்பதற்கான அடிப்படைக் கருத்தியலா என்பதுதான்.




உலகில் லஞ்சம், ஊழலற்ற நாடு என்று ஏதாவது இருக்கின்றதா? அப்படி எதுவும் இருப்பதாக நமக்குத் தெரியவில்லை. உண்மையில் லஞ்சம், ஊழல் போன்றவை எந்த சமூக அமைப்பில் கொடிகட்டிப் பறக்கின்றது என்பதுதான் முதன்மையானது.

டிரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல் என்ற அரசுசாரா அமைப்பு ஆண்டு தோறும் உலகம் முழுவதும் உள்ள 180 நாடுகளில் ஆய்வு மேற்கொண்டு ஊழல் நிறைந்த நாடுகளின் பட்டியலை வெளியிட்டு வருகிறது.

அதன்படி, ஒரு நாட்டின் நிர்வாக வெளிப்படைத்தன்மை, அந்த நாட்டில் லஞ்சம், ஊழல் மற்றும் நடைபெறும் முறைகேடுகள் போன்றவற்றைக் காரணிகளாகக் கொண்டு ஆய்வுகள் நடத்தப்படுகின்றன. இந்த ஆய்வின் மதிப்பீடுகளை வைத்து ஊழல் அதிகம் உள்ள நாடுகளை அந்த அமைப்பு பட்டியலாக வெளியிடுகிறது

மேற்கொள்ளப்படும் ஆய்வின் அடிப்படையில் 100 மதிப்பெண்ணைப் பெறும் நாடு ஊழலற்ற நாடு என்றும், மதிப்பெண் எதுவும் பெறாமல் இருக்கும் நாடு ஊழல் அதிகமுள்ள நாடு என்றும் வரிசைப்படுத்தப்படுகின்றன.

அதில், 90 மதிப்பெண்ணுடன் ஊழல் மிகவும் குறைந்த நாடாக டென்மார்க் முதலிடம் பிடித்துள்ளது. இரண்டாவது இடத்தில் 87 மதிப்பெண்ணுடன் பின்லாந்தும், 85 மதிப்பெண்ணுடன் நியூசிலாந்து 3ஆம் இடத்திலும் உள்ளன. மேலும், கடந்த ஆண்டு 85ஆவது இடத்தில் இருந்த இந்தியா இந்த ஆண்டு 93ஆவேது இடத்தைப் பெற்றுள்ளது. அண்டை நாடான பாகிஸ்தான் 133-வது இடமும், இலங்கை 115ஆவது இடமும், சீனா 76-ஆவது இடமும் பிடித்துள்ளன.

எந்த ஒரு நாடும் முழு அளவிலான மதிப்பெண்ணைப் பெறாமல் இருக்கக் காரணம், அந்த நாட்டில் ஊழலும், முறைகேடுகளும் நடைபெறவில்லை என்றாலும் வெளிநாடுகளில் தொழில் செய்யும் அந்த நாட்டைச் சேர்ந்த நிறுவனங்கள் முறைகேடுகளில் ஈடுபடுவது தெரிய வந்துள்ளது. அரசு எந்திரங்கள் அனைத்துமே ஊழலில் திளைத்திருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நிலைமை இப்படி பட்டவர்த்தனமாக இருக்கும் போது திரும்பத் திரும்ப ஊழல், திறமையான நிர்வாகம் போன்ற வார்த்தைகளையே ஏன் புதிதாக கட்சி ஆரம்பிக்கும் எல்லோரும் பயன்படுத்துகின்றார்கள்?.

இந்த ஊழல் எதிர்ப்பு, தூய்மையான நிர்வாகம் போன்ற பம்மாத்து வேலைகளை எல்லாம் அன்னா ஹசாரே போன்ற டம்மி பீஸ்களை வைத்து ஏற்கெனவே பிஜேபியே செய்து பார்த்து இருக்கின்றது.



நாங்கள் எதிர்ப்பார்ப்பதெல்லாம் இந்தியாவை மொத்தமாக அழித்துக் கொண்டிருக்கும் முதலாளித்துவத்தைப் பற்றிய உங்களின் பார்வையைத்தான்.

2021-ஆம் ஆண்டு நிலவரப்படி, வெறும் 1 சதவிகித பெரும்பணக்காரர்களிடம் இந்திய நாட்டின் மொத்த சொத்தில் 40.5 சதவிகிதத்திற்கும் அதிகமான சொத்துகள் இருப்பதாக ஜனவரி 16, 2023 அன்று வெளியாகியுள்ள ஆக்ஸ்ஃபாம் ஆய்வறிக்கை (Survival of the Richest: The India Supplement) கூறுகிறது. இதை பற்றிய விஜய் அவர்களின் பார்வை என்ன என்பதுதான் நமக்கு முதன்மையானது.

வெறும் ஊழல் ஒழிப்பு வேசமட்டும் தேர்தலில் வெற்றி பெறப் போதாது. ஏற்கனவே இங்கிருக்கும் கார்ப்ரேட் அரசியல் கட்சிகள் ஊழலைத் தாண்டி சிலவற்றை மக்களுக்கு செய்திருக்கின்றார்கள். அதனால்தான் இந்தியாவில் குறிப்பிடத்தக்க அளவு வளர்ந்த மாநிலமாக தமிழ்நாடு மாறி இருக்கின்றது.

அப்படி என்றால் விஜய் எதிர்க்க வேண்டியது ஊழலை மட்டுமல்ல, அந்த ஊழலுக்குக் காரணமான முதலாளித்துவத்தைதான். கோடிக்கணக்கான மக்களுக்கு நம்பிக்கை வர வேண்டும் என்றால் விஜய் அவர்கள் அதைத்தான் முதலில் பேச வேண்டும்.

மற்றபடி "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்ற விஜயின் அரசியலில் நமக்கு கருத்து வேறுபாடு இல்லை. சமூக சமத்துவம் எந்தளவிற்கு முக்கியமோ அந்தளவிற்கு பொருளாதார சமத்துவமும் முக்கியம்.

இன்றிருக்கும் அரசியல் சூழலில் விஜய் அவர்களின் அரசியல் வரவு தாக்கத்தை ஏற்படுத்துமா என்றால் நிச்சயம் அதற்கு வாய்ப்பு அதிகம். அதிமுக இரண்டாக உடைந்து கவுண்டர் அணி, கள்ளர் அணி என மாறியிருக்கின்றது. சீமான் அப்பட்டமாக குடி அரசியல் பேசும் சாதிவெறியராக இருப்பதோடு கடந்த பல தேர்தல்களில் தோல்வியை மட்டுமே பரிசாகப் பெற்றவர்.

ஆனால் விஜய்க்கான அரசியல் களம் இதிலிருந்து வேறுபட்டது. எந்தவித சமூக அக்கறையுமற்ற சினிமா பைத்தியம் பிடித்த லும்பன்களைச் சார்ந்து அது இருக்கின்றது. இவர்களுக்கு விஜய் கடவுளுக்கு நிகரான ஒரு பிம்பம். அந்த பிம்பத்திற்காக என்ன வேண்டும் என்றாலும் செய்வார்கள்.

தமிழக அரசியல் வரலாறு சினிமாக்காரர்களால் தீர்மானிக்கப்படும் இழி நிலையில் இருந்து இன்னும் மீண்டு வரவில்லை. மக்களுக்கு இந்த மண்ணுக்காக போராடுபவர்களைவிட சினிமாவில் குத்தாட்டம் போடும் கூத்தாடிகளையே நன்றாகத் தெரிந்திருக்கின்றது.

அவர்கள் தமக்கான விடுதலையை சினிமாக்காரர்களால்தான் கொடுக்க முடியும் என ஆழமாக நம்புகின்றார்கள். ஒரு வழிபாட்டு மரபின் தொடர்ச்சியாக நாயக பிம்பம் கடவுள் பிம்பமாக கட்டமைக்கப்படுகின்றது. அதனால்தான் கடவுளுக்கு இணையாக கதாநாய கனுக்கும் பாலபிசேகம் செய்யப்படு கின்றது.

முற்போக்கு இயக்கங்கள் அப்படியான பண்பாட்டை இங்கு மாற்றுவதற்கு வேலை செய்ததைவிட, திமுக, அதிமுக என இரண்டு கட்சிகளும் வளர்த்துவிட்ட சினிமா அரசியலை தூக்கிப் பிடிக்கவே பெரும்பாலும் வேலை செய்தன.

இரண்டு கட்சிகளிலும் உள்ள சினிமாக்காரர்களை பட்டியல் இட்டாலே இதைத் தெரிந்து கொள்ள முடியும்.

அதுமட்டுமல்ல இன்று விஜயை எதிர்க்கும் பலபேர் உதயநிதியை மட்டும் எதிர்க்காமல் இருப்பது அவர்களின் சொம்புதூக்கி தனத்தைத்தான் காட்டுகின்றது.

விஜயின் அரசியல் வருகை நிச்சயம் தமிழக அரசியல் களத்தில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும். அந்த மாற்றத்திற்கு வேறு யாரும் காரணமல்ல. திமுக, அதிமுக, காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சிகள் என எல்லோருக்கும் பொறுப்பு இருக்கின்றது.

போலியான முதலாளித்துவ தேர்தல் ஜனநாயகத்தில் பங்கெடுப்பவர்கள் யாரை நோக்கி சுட்டுவிரலை நீட்டினாலும் மற்ற விரல்கள் தங்களை நோக்கி இருப்பதைப் பார்த்து அச்சப்பட்டுத்தான் ஆக வேண்டும்.

இறுதியில் மக்கள் முடிவு செய்து கொள்வார்கள் பேயிக்கு ஓட்டு போடுவதா, இல்லை பிசாசுக்கு ஓட்டு போடுவதா என்று.



# நாட்டில் அமைதி நிலவவேண்டும்!

**நொயல் நடேசன்**
அவுஸ்திரேலியா

யாழ்ப்பாணம் சென்றால் நான் ஓர் ஓட்டோ சாரதியை எனது தேவைகளுக்கு அழைப்பேன். இம்முறை அந்த ஓட்டோ சாரதியைத் தேடிய போது, அவர் தனது இரு பிள்ளைகளையும் மனைவியையும் விட்டு மரணமடைந்து விட்டார் எனச் சொன்னார்கள்.

“அடப்பாவி.. இளவயதுக்காரனே! என்ன வயது ?” எனக்கேட்டேன்.

“நாற்பத்து மூன்று - இதய நோய். ஓட்டோவிலேயே இறந்து விட்டார்.”

ஓடி ஓடி உழைத்தவன் என மனம் நொந்தேன்.

ஓட்டோ சாரதி சித்தனுடன் (புனை பெயர்) வங்கிக்குப் போகும்போது “உங்கள் வெயிட்டிங்கிற்கு பணம் தருவேன். நில்லுங்கள்” என்று சொன்னாலும் கேட்காது, “ஐயா பக்கத்தில் ஒரு சவாரி இருக்கிறது. போய் வந்துவிடுகிறேன் என்பார்.”

அதே போல் மீன் கடை, காய்கறி சந்தைக்குப் போகும்போதும் அவர் இடையில் ஓடிவிடுவார். விடுமுறையில் சென்றதால் நான் அவற்றைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. அத்துடன் பிள்ளை குட்டிக்காரன், உழைக்கட்டும் என்ற எனது மனநிலை.

போர் முடித்தபின் இந்த 15 வருடங்களில் 25 தடவைகளாவது யாழ்ப்பாணம் சென்றிருப்பேன். ஆளுநர்கள், அதிகாரிகள், அரசியல்வாதிகள், எழுத்தாளர்கள், வைத்தியர்கள், சாமானியர்கள் எனப் பலரைச் சந்தித்தேன். யாழ்ப்பாணத்தில் நண்பர் குகநாதனின் டான் தொலைக் காட்சியும் ஈழநாடுமே போரின் பின்பாக ஏற்பட்ட நல்ல மாற்றங்கள். மற்றும்படி எதுவும் மாறவில்லை என்று நினைப்பேன் . எனது ஆற்றாமையைப் பலரிடம் சொல்லியிருக்கிறேன்.

போர் கடந்த பூமியில் மனிதர்கள் தப்பி ஓடுவது, பணம் திருடுவது ஏமாற்றுவது, கொலை, தற்கொலை என்பன சகஜம். அது வடபகுதியிலும் நடந்தது.

சிறிய விடயங்களையும் நமது ஊடகங்கள், சமூக வலைத்தலங்களில் பெரிதாக்கி வீதியில் சிந்திய மலமாக, கிழறினார்கள். காகங்களாக.

இதற்குக் காரணங்கள் பல. போரின் பின்னர், போர் நடந்த மற்றைய நாடுகள்போன்று இலங்கையில் ஏன் சிறந்த அரசியல், சமூக, மதத் தலைமைகள் உரு வாகவில்லை?

இந்த நிலையில் கைப்பிடி அரிசி மணலில் விழுந்ததுபோல் மக்கள் நிராதரவாக விடப்பட்டார்கள். அவர்கள் தனித்தனியாக ஏதாவது தங்களது விடயங்களைச் செய்யத் தள்ளப்பட்டார்கள். இக்காலத்தில் அரசும் தூரநோக்கான எந்த திட்டமும் வைக்கவில்லை. அதைப் பற்றிய சிந்தனை இல்லை. வெளிநாட்டு அரசுகளிடமிருந்து கிடைத்த பணத்தில், பாதைகள் கட்டடங்கள் செய்வதன் மூலம் அவர்களும் பணத்தைச் சுருட்டினார்கள். கட்டடங்கள், பாதைகள் வந்தாலும் பொருளாதார மாற்றம் ஏற்படவில்லை. நாட்டில் ஆட்சி மாற்றம், கொரோனா, ஈஸ்டர் குண்டு வெடிப்பு என பல நிகழ்ந்தது.

கொரோனாக் காலத்திற்கு முன்னர் போனபோது, யாழ். மக்களிடம் எங்காவது ஓடவேண்டும் என்ற நிலையற்ற சிந்தனைதான் இருந்தது. நான் முன்னர் படித்த இந்துக் கல்லூரி அருகே “இங்கு போதைவஸ்து அதிகம் விற்கப்படுகிறது” என எழுதப்பட்ட எச்சரிக்கை போஸ்டர் பொலிஸாரால் ஒட்டப்பட்டிருந்தது. கடைகளில், அரச நிறுவனங்களில் சிரித்தபடி பேசுபவர்களை அரிதாகத்தான் காணமுடிந்தது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற பகுதிகளில் மக்கள் போரால் அதிகம் பாதிக்கப்பட்டிருந்தாலும் அவர்கள்



மீண்டெழுந்துவிட்டார்கள். உதாரணமாகப் போரின் பின்பாக 12 விதவைப் பெண்களுக்கு மூன்று வருடங்கள் சிறிய உதவிகளைச் செய்தபடியிருந்தேன். மூன்றாவது வருடமுடிவில், அவர்கள் தங்களைத் தாங்களே பார்க்கும் நிலையடைந்து, உதவிகள் வேண்டாம் என்றார்கள்.

ஆனால், யாழ்ப்பாணத்தில் மக்களிடம் வெளிநாட்டுப் பணம் புழக்கத்திலிருந்தபோதிலும், அவர்களிடம் விரக்தியைக் காணக்கூடியதாக இருந்தது. அந்த விரக்தியை ஊக்குவிப்பதுபோன்று வெளிநாட்டவர்களும் பெருந்தொகைப் பணத்தை கோயில்களில் கொட்டுதலும் நடந்தது. மக்களை அதிகமாக பக்திமயமாக மாற்றினார்கள் - மக்களும் மாறினார்கள்.

அக்கால சோவியத் ரஷ்யாவிலிருந்து கனடா, அவுஸ்திரேலியா மற்றும் அமெரிக்கா முதலான நாடுளுக்குப் போனவர்கள் மிகவும் தீவிரமாக ரஷ்யாவை வெறுப்பார்கள். அவர்களே தற்காலத்தில் நடக்கும் உக்ரேனிய - ரஷ்யப் போருக்கும் காரணம். அவர்களது பழிவாங்கும் தன்மை, வெறுப்பு என்பன தலைமுறை கடந்தவை. அவை அடுத்த சந்ததிக்கும் கடத்தப்பட்டது.

அதுபோன்றுதான் இலங்கையிலிருந்து வெளிநாடு சென்றவர்களும் அவர்களது அடுத்த சந்ததியினரும் எப்பொழுதும் வெறுப்பைக் காவியபடியே காலத்தைக் கடத்தினார்கள். போரின் தோல்வி நாட்டு மக்களை விட இந்த புலம்பெயர்ந்த மக்களிடம் ஆழமான மனப்பாதிப்பை உருவாக்கியுள்ளது.

நான் இம்முறை இலங்கை சென்றபோது அங்கு சில மாற்றங்கள் தெரிந்தன.

ஓர் எலக்ரிக் ஓட்டோ இளைஞன் வந்தான். அமைதியானவன். முகத்தில் நல்ல பொலிவு. அத்துடன் சீருடை அணிந்திருந்தான். அவனது பெயர் யாழன்பன். அந்தப்பெயர் என்னை ஈர்த்தது.

விரலால் நொங்கெடுத்த சிறுவயதுப் பழக்கத்தில் அவனைத் தோண்டினேன்

“அது என்ன யாழன்பன்?”

“இயக்கம் வைத்தது.”

“அப்பா அம்மா வைக்கவில்லையா?”

“அவர்கள் நினைத்திருந்தார்கள், ஆனால், இயக்கம் வைத்த பெயரே நிரந்தரமானது.”

“எந்த ஊர்?”

“வட்டக்கச்சி ”

“எப்படி யாழ்ப்பாணம்?”

“போர் முடிந்தவுடன், சென். ஜோன்ஸ் கல்லூரி பிரின்சிபல், எங்களைப் போன்று வன்னியில் போரால் பாதிக்கப்பட்ட 200 பேருக்கு யாழ்ப்பாணத்தில் கல்லூரி விடுதியில் தங்க வைத்துப் படிப்பித்தார். அப்படி படித்தவர்களில் நானும் ஒருவனாக 12 ஆம் தரம் வரை படித்தேன். ஆனால், பாஸ் பண்ணவில்லை. எங்களோடு படித்தவர்கள் பலர் பின்னர் பல்கலைக்கழகத்தில் படித்தார்கள்.”

“எப்படி சென். ஜோன்ஸ் படிப்பு?”

“ நல்லது, அங்கு நாங்கள் படித்தபோது படிப்பைவிட ஒழுக்கம்தான் முக்கியம் என்பார்கள். ஒவ்வொரு நாளும் எங்களால் முடிந்தவரை சரியோ பிழையோ, அரைமணி நேரம் ஆங்கிலம் பேசவேண்டும்.”

“அதன்பிறகு அந்த பிரின்சிபலுக்கு என்ன நடந்தது? ஏன் அந்தத் திட்டம் தொடரவில்லை.”

“அவரைப் பதவியிலிருந்து மாற்றி விட்டார்கள்.”

இந்தச் சந்தர்ப்பத்தில் எனது கதை ஒன்றும் நினைவுக்கு வருகிறது. அதை இப்போது சொல்வதும் பொருத்தமாகும்.

போர் முடிந்த காலத்தில் மெல்பனில் எனது கிளினிக்கிற்கு சிங்களத் தம்பதிகள் இருவர் பேச வந்தார்கள். என்னவென்று விசாரித்தபோது, “ தங்களது மகன் மொனாஷ் பல்கலைக் கழகத்தில் கணிதம் படித்தவன். யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியில் படிப்பிக்க யாழ்ப்பாணம் செல்கிறான். எங்களுக்குப் பயமாக இருக்கிறது”. என்றார்கள்

அப்பொழுது நான், “பயப்பட வேண்டாம் என்று சொல்லி விட்டு, யாழ்ப்பாணத்திலிருந்த எனது நண்பர் சூரியகுமாரனிடமும் மற்றும் ஆளுநரிடமும் அவனைப் பற்றிப் பேசினேன். அதன்பின்னர் நான் படித்த இந்துக் கல்லூரி பழைய மாணவர் ஒருவரிடம், “ நீங்களும் இப்படி ஒரு வேலை செய்யுங்கள்.” என்றேன். அவர்கள் தொடர்ந்தும் அக்காலத்தில் கானமழை என்ற பெயரில் திரைப் பாடல்கள் பாடும் நிகழ்ச்சிகளை நடத்தி வந்தார்கள். நானும் அதன் பிறகு இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க நிகழ்ச்சிகளுக்கு செல்வது குறைந்தது.

நான் யாழ். பல்கலைக்கழகத்தில் சந்தித்த சென் ஜோன்ஸ் பழைய மாணவர்கள், அங்கு வந்துதான் தூசண வார்த்தைகள் பேசினார்கள். அதற்கப்பால் அவர்கள் தமிழ் மீடியத்தில் படித்து வந்தாலும், ஆங்கிலத்தில் எங்களிடம் உரையாட முயல்வார்கள். அது மட்டும் என் போன்ற இந்துக் கல்லூரி மாணவர்களிடம் சரி வராது.

யாழின்பன் அமைதியாக எங்களைத் தேவாலயம், வங்கி என எல்லா இடங்களுக்கும் அழைத்துச் சென்றார். சென் ஜோன்ஸ் பாடசாலையின் பழைய மாணவனாக மட்டுமல்ல கனவானாகவும் தெரிந்தார்.

இம்முறை யாழ்ப்பாணம் வங்கிக்குச் சென்றபோது எனது கடவு எண் மறந்து விட்டது . வங்கியில் ஓர் இளைஞர், பொறுமையாகச் சிரித்தபடியே புதிய எண்ணை உருவாக்கித் தந்தார்.

யாழ்ப்பாணத்தில் நான் நின்றபோது, தஞ்சாவூர் பல்கலைக்கழகத்திலிருந்து எனக்கும் இலக்கிய விருது என அறிவிக்கப்பட்டபோது, யாழ்ப்பாணத்தில் விமானப் பயணச்சீட்டு வாங்க ஒரு பயண முகவரிடம் சென்றபோது, அங்கிருந்தவர்கள் சீட்டை பதிவு செய்தபின்னர், கடனட்டையை எடுக்கும் வசதியில்லை, என்று சொல்லி, பணத்தை வங்கியில் எடுத்து வரும்படி அனுப்பினார்கள்.

இப்படி யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல, கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு, திருகோணமலை எங்கும் மக்களிடம் புத்துணர்வும் மன அமைதியும் தெரிந்தது. போரின் பாதிப்பு வங்கக் கடலை கடந்து விட்டதோ என என்னால் நினைக்க முடிந்தது.

மக்களின் மனங்களில் அவர்களுக்கு எதிர்காலத்தில் எதுவுமில்லை என்ற வெறுமையை உருவாக்குவதன் மூலம் அவர்களைத் தவிப்பு நிலைக்குத் தள்ள முடியும். உதாரணமாகக் கோழிகளின் உணவில் உப்பைக் குறைத்தால், அவை ஒன்றை ஒன்று கொத்தும். அதேபோல் பணம், கடவுச் சீட்டை புதிய இடத்தில் தொலைத்தால் எனக்கும் அந்த நிலை வரும்.

பரபரப்படைந்தவர்கள் தர்க்கமாகச் சிந்திப்பதில்லை. அவர்கள் நடத்தைகளை நாம் எதிர்வுகூற முடியாது. இலங்கையில் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் 1977 இல் இப்படியான ஒரு நிலையை உருவாக்கி இளைஞர்களைத் தகிப்பு நிலைக்குத் தள்ளினார்கள். உணவில் உப்பற்ற கோழிகளாக ஒருவரை ஒருவர் கொத்தி அதன்பின் அவர்கள் மட்டுமல்ல முழுத் தமிழரும் அழிந்தார்கள்.

இதுவரை சம்பந்தன் எதுவும் செய்யாதவர், அதாவது நல்லதும் கெட்டதும் செய்யாதவர். சுமந்திரன் விக்னேஸ்வரன் போன்றவர்கள் ஆசனத்துக்காக கூச்சல் போடுகிறார்கள் என்பது அரசிற்கும் தமிழருக்கும் தெரியும். ஆனால், தற்போது தமிழரசுக்கட்சிக்கு தலைவராக தெரிவாகியிருக்கும் சிறிதரன், விடுதலைப் புலிகளில் ஒரு கூறாக இருந்தவர். தனது இருப்புக்காக நான்கு இலட்சம் பேரை முள்ளிவாய்க்காலுக்கு அழைத்துச் சென்ற பிரபாகரனைப் போன்று தகிப்பு நிலைக்கு மக்களைத் கொண்டு செல்லக் கூடியவர்.

அப்பொழுது தற்போதுள்ள நிலை மிகவும் எளிதில் மாறலாம். சிறிதரனுக்கு கிளிநொச்சியில் உணர்வுபூர்வமான ஆதரவு உண்டு என்பதால், அமைதியை வேண்டுபவர்கள் இவரை அவதானித்து நடக்கவேண்டும். ஏற்கனவே ஒரு முட்டாள் கிணற்றில் போட்ட பாறாங் கல்லை நாம் எடுக்கமுடியாது இன்றளவும் தத்தளிக்கிறோம் என்பதை மனதில் வைத்திருப்போம். எதிர்காலத்தில் அமைதியை வேண்டுகிறோம்.

# கூட்டத்தில் கூடிநின்று கூவிப் பிதற்றலன்றி நாட்டத்தில் கொள்ளாரடி!

பனங்காட்டான்



இலங்கை அரசியல் பரப்பில் இரண்டு கட்சிகளின் தலைவர்கள் தங்கள் தரப்பில் வேகமாக காரியங்களை ஆற்று கின்றனர். தமிழரசுக் கட்சியின் தலை வரா கத் தெரிவாகியுள்ள சிவஞானம் சிறீதரன், ஜனாதிபதியாகவுள்ள ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிர மசிங்க ஆகியோரே இவர்கள் இருவரும்.

மாவை சேனாதிராஜாவின் தலை மைக் காலத்தில் மூத்த தலைவர் சம்பந்த னின் ஆசீர்வாதத்துடன் தம்மிஷ்டப்படி ராஜதந்திரிகளையும், தூதரக அதிகாரி களையும் சுமந்திரன் சந்தித்து வந்தார். தமிழரசுக் கட்சியினர் எவருக்கும் இச்சந் திப்புகளின் விபரங்கள் தெரிவிக்கப்படுவ தில்லை.

ஆனால், கட்சியின் புதிய தலைவ ரான சிறீதரன் சற்று வித்தியாசமாக தமது சந்திப்புகளை ஆரம்பித்துள்ளார். சட்ட வாளராக இல்லாத, ஆங்கிலப் புலமை இல்லாத இவரை தலைவராக்கினால் கட்சியின் நிலை என்னாகும் என்று கேள்வி எழுப்பியவர்களுக்கு இவரது சந் திப்புகள் புதுமையாகவிருக்கும். இது வரை இரண்டு வெளிநாட்டுத் தூது வர்கள் இவரைச் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

தமிழரசுக் கட்சியின் நிறுவுநர்களில் ஒருவரான தந்தை செல்வாவின் பேரனை யும் இச்சந்திப்புகளில் சிறீதரன் இணைத் துக் கொள்வதானது கட்சியின் நற்பெய ருக்கும் இவரின் வித்தியாசமான அணுகு முறைமைக்கும் நல்ல உதாரணம். ஆரம் பமே பிளஸ் பொயின்ராக காணப்படு கிறது.

இந்திய தூதரக அதிகாரிகளைச் சந் திப்பதற்கான ஏற்பாடும் இடம்பெறுவ தாகத் தெரியவருகிறது. தீர்வைப் பற்றி பேசிக் கொண்டிருப்பது தீர்வாகாது, தீர் வைக் காண்பதற்கு தமிழர் தரப்பே முயற் சிக்க வேண்டுமென்று கடந்த வருடம் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங் கர் வடக்கு - கிழக்கு தமிழ் அரசியல் பிரமுகர்களிடம் நேரடியாகத் தெரிவித் தது சிறீதரனுக்கு ஞாபகம் இருக்கும்.

ரணில் அரசுடன் பேசி தீர்வைக் காண தமிழர் தரப்புத்தான் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் ஜெய்சங்கர் கூறியிருந் தார். இது விடயத்தில் இந்தியா நேரடி யாகத் தலையிட முடியாது என்று கூறிய இவர், அதிகாரப்பகிர்வுக்கு இந்தியா முழுமையாக ஆதரவு வழங்குமென்று தெரிவித்ததைப் புரிந்து கொண்டு சிறீ தரன் தமது நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டிய நிலையிலுள்ளார்.

நிலைமை இவ்வாறிருக்கையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழர் பிரச்சனைத் தீர்வை முற்றாக மறந்து விட்டவர் போன்று தமது காரியங்களை ஆற்றி வருகிறார். முக்கியமாக, கடந்த வாரம் நிகழ்த்திய கொள்கை விளக்கப் பிரகடனத்தில் தமிழர் பிரச்சனைத் தீர்வு தொடர்பாக மறந்தும்கூட ஒருவரிதா னும் தெரிவிக்காததையிட்டு தமிழர் தரப்பு விசனமடைந்துள்ளது. சிலர் தங்கள் உரைகளிலும் இதனைச் சுட்டிக் காட்டியுள்ளனர்.

2022 நடுப்பகுதியில் ஜனாதிபதிப் பதவியை ஏற்றதும், தமிழர் பிரச்சனைத் தீர்வு விடயத்தில் மற்றெல்லோரையும் விட தாமே அதீத அக்கறை கொண்டவர் போன்று காட்டிக் கொண்டார். தமிழர் தரப்புடன் பேச்சுவார்த்தையையும் ஆரம் பித்தார். பிரச்சினைக்கான விடயங்களை - ஏதோ தமக்கு எதுவும் தெரியாதவர் போன்று எழுத்தில் சமர்ப்பிக்குமாறு தமிழ்ப் பிரதிநிதிகளிடம் கேட்டுக் கொண்டார்.

கடந்த ஆண்டு (2023) சுதந்திர தின மான பெப்ரவரி 4ம் திகதிக்கு முன்னதாக தமிழர் பிரச்சனைக்கான தீர்வை அறிவிக் கப் போவதாக சொன்னார். அப்படி எதுவும் நடக்கவில்லை. அதன் பின்னர் முழுமையாக ஒரு வருடம் கடந்து விட்ட தாயினும் செயலளவில் எதனையும் காணவில்லை. இதன் பின்னர் இடம் பெற்ற பேச்சுவார்த்தைகள் சறுக்கலா கவே முடிந்தன. அவரது பாணியில் சொல்வதானால் சும்மா ஒரு சந்திப்பா கவே இவை இடம்பெற்றன.

2024ல் ஜனாதிபதித் தேர்தல் என்று அறிவித்துவிட்டு வடக்கே போன ரணில் அங்கிருந்துதான் தமது தேர்தல் பணி களை ஆரம்பித்தார். இங்கு அவரால் வீசப்பட்ட உறுதிமொழிகள் அவரது தேர்தல் விஞ்ஞாபனமாக தோற்றமளித் தன. சர்வதேசத்தை விளித்து ஆற்றும் உரைகளின்போதும் இவ்விடயங் களையே சுட்டி வருகிறார்.

இலங்கையிலுள்ள அரசியல் தலைவர் களுள் ரணில் என்ற பெயரே சர்வதேச அரங்கில் நம்பகத்தன்மை கொண்டதாக இருப்பதாகவும், அதனாலேயே அவர் ஏந் திச் செல்லும் பிச்சா பாத்திரத்தை வெளி நாடுகளும் சர்வதேச அமைப்புகளும் நிரப்பி விடுவதாகவும் சொல்லப்படுகி றது. இதில் உண்மையில்லாமல் இல்லை.

45 ஆண்டுகளுக்கு மேலாக அரசிய லில் அறாத்தொடராக இருக்கும் ஒரு புள்ளி இவர். பல தடவைகள் பிரதமராக இருந்தவர். நான்கு தசாப்தங்களில் பல முக்கிய அமைச்சுப் பதவிகளை வகித்த வர். தற்போது நாட்டின் ஜனாதிபதி. எல்லாவற்றுக்கும் மேலாக ஊழலற்ற அரசியல்வாதி என்ற நன்மதிப்பும் இவருக்குண்டு.

> முப்பது கோடி முகமுடையாள், உயிர் மொய்ம்புற ஒன்றுடையாள், இவள் செப்பும் மொழி பதினெட்டுடையாள், எனில் சிந்தனை ஒன்றுடையாள்" என்று இந்திய ஒருமைப்பாடு பற்றி மகாகவி பாரதி பாடியதை நினைவில் கொண்டிருக்கும் ரணில் விக்கிரமசிங்க, நடிப்புச் சுதேசிகள் பற்றி அதே மகாகவி பாரதி எழுதிய "நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத் திறனுமின்றி வஞ்சனை செய்வாரடி! கூட்டத்தில் கூடிநின்று கூடிப் பிதற்றலன்றி நாட்டத்திற் கொள்ளாரடி!" என்ற வரிகளையும் நினைவிற் கொள்ள வேண்டும்.

இவ்வாறு சர்வதேசம் ரணிலைப் பார்த்து அதன்வழியாக ஒரு வியூகம் அமைக்கப்பட்டுள்ளது என்று நான் கூறவில்லை. இலங்கையில் பணிபுரியும் முக்கியமான வெளிநாட்டுத் தூதுவர் ஒருவரின் கருத்து இது.

இந்தத் தூதுவர் சில மாதங்களுக்கு முன்னர் தமது சொந்த நாட்டுக்கு விடு முறையில் சென்றிருந்தார். அவ்வேளை அந்நாட்டில் வாழும் ஈழத்தமிழர்களின் முக்கியஸ்தர்கள் சிலரையும், தமிழர் அமைப்புகளின் பிரதிநிதிகளையும் சந்தித்து உரையாற்றியுள்ளார். பலதும் பத்துமாக உரையாடி இவர்களின் நாடியை அவர் பிடித்துப் பார்த்தா ரென்றே சொல்ல வேண்டும்.

இந்தச் சந்திப்புகளின்போது அந்த ராஜதந்திரி முக்கியமான விடயங்களை தமக்கேயுரிய ராஜரீக மொழியில் தெரி வித்ததன் சாராம்சம் பின்வருமாறு அமைந்திருந்தது:

"இலங்கையின் அரசியல் தலைவர்க ளுள் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஒரு தனியிடம் அல்லது சிறப்பான மரியா தையை பூகோள அரசியலில் காணமுடி கிறது. இவருடைய பதவிக் காலத்தில் தமிழர் பிரச்சனைக்கு ஏதாவது வகையில் தீர்வு காண முடியாவிடின், அதன் பின்னர் வேறு எவராலும் தீர்வு வழங்க முடியுமென்பது சந்தேகம். எதிர்காலத் தில் அரசியலில் தலைமை தாங்க இருப்பவர்கள் பலரும் இலங்கையில் இனப்பிரச்சனை என்ற ஒன்று இல்லை என்ற பாணியில் இயங்குபவர்கள். எனவே ஏதாவது வழியில் ரணிலின் காலத்தில் கிடைக்கக்கூடிய ஒரு தீர்வைப் பெற தமிழர் தரப்பு முன்வந்து செயற்பட வேண்டும்" என்பதே இந்த ராஜதந்தி ரியின் கருத்தாகக் காணப்பட்டது.

பேசிக் கொண்டேயிருப்பது தீர்வா காது, பேச்சுவார்த்தை மூலம் தீர்வைக் காண தமிழர் தரப்பே செயற்பட வேண்டுமேன்று இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்த மைக்கும், புலம்பெயர் தமிழர்களைச் சந்தித்து உரையாடிய ஒரு தூதுவரின் கருத்துக்குமிடையில் மெல்லியதான ஓர் ஒற்றுமை இருப்பதை கூர்மையாக நோக் கின் காண முடியும்.

இவ்வாறுதான் சர்வதேசம் தமிழர் பிரச்சனைத் தீர்வைப் பார்க்கிறதெனின், தமிழரசுக் கட்சியின் புதிய தலைமைக்கு பாரிய பொறுப்பு ஆரம்பத்திலேயே சுமத்தப்பட்டு விட்டது. ரணில் கடந்த வார கொள்கை விளக்க உரையில் தமிழர் பிரச்சனை தீர்வு பற்றி எதுவுமே கூறாது விட்டதை தற்செயலானதாகப் பார்க்க முடியவில்லை. இதுவரை தாம் கூறிய எதனையும் செய்யவில்லையென்பது அவருக்குத் தெரியாததல்ல. இதனால் இனிமேல் கூறப்போகின்றவைகளை தமிழர் நம்பத் தயாரில்லை என்பது அவருக்குத் தெரியும். எனவே எத னையுமே கூறாமல் விடுவது இப் போதைக்கு நல்லது என அவர் எண்ணி யிருக்கலாம்.

"2022 பெப்ரவரியில் நாடு இருந்த நிலை அனைவருக்கும் நினைவிலிருக்கும். 2023 பெப்ரவரி மாதமளவில் நாட்டை சிறந்த நிலைக்குக் கொண்டுவர முடிந் தது. இந்த வருடம் பெப்ரவரி ஆகும் போது மேலும் சிறந்த நிலைக்கு நாடு முன்னேறியுள்ளது" என்ற ரணிலின் கொள்கை விளக்க உரையின் வரிகள், அவர் இனப்பிரச்சனைத் தீர்வினைவிட பொருளாதார பிரச்சனைத் தீர்வையே முக்கியமானதாகவும் முதன்மையானதாக வும் பார்க்கிறார் என்பதைச் சுட்டுகிறது.

"அரசியல் ஆதாயத்துக்காக நான் ஒருபோதும் முடிவுகளை எடுக்கவில்லை. ஒவ்வொரு முடிவையும் நாட்டின் நலன் கருதியே எடுத்தேன்" என்ற வரிகள்கூட நாட்டின் பொருளாதாரத்தின்மீது அவர் காட்டும் அக்கறையை மட்டுமே எடுத்துக் காட்டுகிறது.

இறுதியாக, பத்தொன்பதாம் நூற் றாண்டில் மகாகவி பாரதி இந்தியா பற்றி எழுதிய கவிதை ஒன்று தமது நினைவுக்கு வருவதாகக் கூறி அதனை தனது கொள்கை விளக்க உரையில் பின்வரு மாறு ரணில் வாசித்தார்:

"முப்பது கோடி முகமுடையாள்
உயிர் மொய்ம்புற ஒன்றுடையாள்
இவள் செப்பும் மொழி
பதினெட்டுடையாள்
எனில் சிந்தனை ஒன்றுடையாள்"

என்று இந்திய ஒருமைப்பாடு பற்றி மகாகவி பாரதி பாடியதை நினைவில் கொண்டிருக்கும் ரணில் விக்கிரமசிங்க, நடிப்புச் சுதேசிகள் பற்றி அதே மகாகவி பாரதி எழுதிய பின்வரும் வரிகளையும் படித்து நினைவிருத்த வேண்டும்:

"நெஞ்சில் உரமுமின்றி
நேர்மைத் திறனுமின்றி
வஞ்சனை செய்வாரடி!
கூட்டத்தில் கூடிநின்று
கூடிப் பிதற்றலன்றி
நாட்டத்திற் கொள்ளாரடி!"

ஆண்டாண்டு காலம் ஓரினத்தை அடிமைப்படுத்தி ஆட்சி புரியும் அரசி யல்வாதிகளுக்கான பாரதியின் சமர்ப் பணம் இது.



## அநுரகுமாரவின் இந்திய விஜயம் :

# ஜே.வி.பி.யின் இந்திய விரோத கடந்த காலத்தை மோடி அரசு பொருட்படுத்தவில்லை!



வீரகத்தி தனபாலசிங்கம்



தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்கவும் அவரது மூன்று தோழர்களும் கடந்த வாரம் ஐந்து நாள் விஜயத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பியிருக்கிறார்கள். தங்களையும் கூட இந்திய அரசாங்கம் அழைத்துப் பேசவேண்டும் என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச கொழும்பில் உள்ள இந்திய தூதரகத்தை அணுகி வேண்டுகோள் விடுத்திருப்பதாக செய்திகள் வருகின்றன. அந்தளவுக்கு தேசிய மக்கள் சக்தி தலைவரின் இந்திய பயணம் அரசியல் அரங்கில் பெரும் பரபரப்புடன் கூடிய கவனத்தை ஈர்த்திருக்கிறது.

இந்தியா வழமையாக தமிழ் அரசியல் கட்சிகளுக்கு புறம்பாக ஐக்கிய தேசிய கட்சி, சிறிலங்கா சுதந்திர கட்சி மற்றும் சிறிலங்கா பொதுஜன பெரமுன போன்ற பெரிய கட்சிகளுடனேயே ஊடாட்டங்களைச் செய்துவந்திருக்கிறது. ஆனால், தேசிய ஐக்கிய மக்கள் சக்தி போன்ற இடதுசாரிக் கட்சிகளை அழைத்துப் பேசியதில்லை.

இந்திய, இலங்கை இடதுசாரி அரசியல்வாதிகள் அவர்களின் கட்சிகளின் மகாநாடுகளில் கலந்துகொள்வதற்காக பரஸ்பரம் விஜயங்களை மேற்கொள்வதுண்டு. அத்தகைய விஜயங்கள் குறிப்பிட்ட கட்சி வட்டாரங்களுக்கும் ஒரளவுக்கு ஊடக கவனிப்புக்கும் அப்பால் பெரிதாகக் அக்கறைக்குரியவையாக இருப்பதில்லை.

ஆனால், இந்த தடவை தேசிய மக்கள் சக்தியின் தலைவர்களின் இந்திய பயணத்துக்கு அதிவிசேட முக்கியத்துவம் ஒன்று இருக்கிறது. திசாநாயக்கவையும் தோழர்களையும் இந்திய அரசாங்கம் உத்தியோகபூர்வமாக அழைத்து இரு நாடுகளுக்கும் இடையிலான முக்கியத்துவம் வாய்ந்த விவகாரங்கள் குறித்து பேச்சுவார்த்தைகளை நடத்தியிருக்கிறது. இலங்கை அரசியல் கட்சியொன்றின்

**இலங்கையின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் மிகவும் முக்கியமான அரசியல் சக்தியாக தேசிய மக்கள் சக்தியை இந்தியா நோக்குவது எந்தளவுக்கு விவேகமானது, பொருத்தமானது என்ற கேள்வி பல மட்டங்களில் எழுப்பப்படுகிறது.**

தலைவர்களை இந்திய அரசாங்கம் உத்தியோகபூர்வமாக அழைத்துப் பேசியிருப்பது அண்மைய தசாப்தங்களில் இதுவே முதற்தடவையாக இருக்கவேண்டும்.

திசாநாயக்கவுடன் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத், தேசிய மக்கள் சக்தியின் செயலாளர் கலாநிதி நிஹால் அபேசிங்க, தேசிய நிறைவேற்று குழு உறுப்பினர் பேராசிரியர் அனில் ஜயந்த ஆகியோரும் இந்தியா சென்றிருந்தனர்.

அவர்களுடன் இந்திய வெளியுறவு அமைச்சர் கலாநிதி சுப்பிரமணியம் ஜெய்சங்கர், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவால் மற்றும் வெளியுறவு செயலாளர் வினாய் மோகன் கவாட்ரா ஆகியோர் இலங்கையின் பொருளாதாரம், அரசியல் நிலைவரம்,



எதிர்கால அரசியல் மற்றும் பிராந்தியப் பாதுகாப்பு குறித்து கலந்துரையாடியதாக செய்திகள் கூறின

திசாநாயக்கவுடனான சந்திப்புக்கு பிறகு கடந்த திங்கட்கிழமை கலாநிதி ஜெய்சங்கர் 'எக்ஸ்' சமூக ஊடகத்தில் செய்த பதிவில் "இலங்கையின் தேசிய மக்கள் சக்தியினதும் ஜனதா விமுக்தி பெரமுனவினதும் தலைவர் அநுராகுமார திசாநாயக்கவை சந்தித்ததில் பெரு மகிழ்ச்சி. இருதரப்பு உறவுகள், பரஸ்பர நலன்கள், இலங்கையின் பொருளாதாரச் சவால்கள், முன்னோக்கிச் செல்வதற்கான பாதை குறித்து நல்ல பேச்சுவார்த்தையை நடத்தினேன்" என்று குறிப்பிட்டிருந்தார்.

ஐந்து நாள் விஜயத்தின்போது தேசிய மக்கள் சக்தியின் தலைவர்கள் பிரதமர் நரேந்திர மோடியின் சொந்த மாநிலமான குஜராத்துக்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆட்சியில் உள்ள தென்னிந்திய மாநிலமான கேரளாவுக்கும் சுற்றுலாவை மேற்கொண்டு சிந்தனைக் குழாம்கள் உட்பட பல்வேறு தரப்புகளுடனும் கலந்துரையாடினார்கள்.

இவ்வருட பிற்பகுதியில் இரு தேசிய தேர்தல்களுக்கு இலங்கை தயாராகிவரும் நிலையில், ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளராக தன்னை அறிவித்திருக்கும் திசாநாயக்கவின் மக்கள் செல்வாக்கு பெரு



மளவுக்கு அதிகரித்திருப்பதாக தோன்றும் ஒரு நேரத்தில் இந்திய அரசாங்கம் அவரை அழைத்துப் பேசியிருப்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகிறது.

இரு வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற மக்கள் கிளர்ச்சிக்கு பின்னரான அரசியல் சூழ்நிலையைப் பயன்படுத்தி மக்கள் மத்தியில் ஆதரவைப் பெருமளவுக்கு வளர்த்துக்கொண்ட கூட்டணியாக கட்சியாக தேசிய மக்கள் சக்தி விளங்குகிறது. அதன் தலைமைக் கட்சியான ஜனதா விமுக்தி பெரமுனவின் (ஜே.வி.பி.) பொதுக் கூட்டங்களிலும் ஊர்வலங்களிலும் மக்கள் பெருமளவில் அணிதிரண்டாலும் அந்த திரட்சி தேர்தல்களில் வாக்குகளாக மாறுவதில்லை என்ற ஒரு வரலாறு இருக்கிறது. ஆனால், அதே வரலாறு இனிமேலும் தொடரும் என்று கூற முடியாது என்றே தோன்றுகிறது

மக்களால் பெரிதும் விரும்பப்படும் ஜனாதிபதி வேட்பாளரா திசாநாயக்கவே விளங்குவதாக கொழும்பை தளமாகக் கொண்டியங்கும் "சுகாதாரக் கொள்கைக்கான நிறுவனம்" என்ற ஆய்வு அமைப்பு ஜனவரியில் செய்த கருத்துக் கணிப்பின் மூலம் தெரியவந்திருக்கிறது.

ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டவர்களில் 50 சதவீதமானவர்கள் தேசிய மக்கள் சக்தியின் தலைவருக்கே வாக்களிக்கப்போவதாக கூறியிருக்கும் அதே வேளை, 33 சதவீதமானவர்கள் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசவை ஆதரிப்பதாகக் கூறியிருக்கிறார்கள்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை வெறுமனே 9 சதவீதமானவர்கள் மாத்திரமே ஆதரிப்பதாக கருத்துக்கணிப்பு கூறுகிறது. இந்த பிந்திய ஆய்வு கடந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு கருத்துக் கணிப்புகளின் முடிவுகளை மீண்டும் உறுதிப்படுத்தியிருக்கிறது

தேசிய மக்கள் சக்தி அமைக்கப்பட்ட சில மாதங்களில் நடைபெற்ற 2019 ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட திசாநாயக்க 3.1 சதவீத வாக்குகளையே பெறக்கூடியதாக இருந்தது. மக்கள் கிளர்ச்சிக்கு பிறகு தேசிய மக்கள் சக்தியின் ஆதரவு எவ்வளவுதான் அதிகரித்திருந்தாலும் திசாநாயக்க அடுத்த ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற வேண்டுமானால் அவரின் வாக்குகள் அந்த மூன்று சதவீதத்தில் இருந்து 50 சதவீதமாக அதிகரிக்கவேண்டும். அது சாத்தியமா என்ற கேள்வி இயல்பாகவே எழுகிறது.

எது எவ்வாறிருந்தாலும், இலங்கையின் இன்றைய அரசியல் நிலைவரத்துக்கு மத்தியில் தேசிய மக்கள் சக்தியை புதுடில்லிக்கு உத்தியோகபூர்வமாக அழைத்துப் பேசும் அளவுக்கு முக்கியமான அரசியல் சக்தியாக இந்திய அரசாங்கம் நோக்குகிறது என்பது தெளிவானது.

### இந்திய விரோத கடந்த காலம்

ஜே.வி.பி.யைப் பொறுத்தவரை அதன் ஆரம்பம் முதலிருந்தே மிகவும் வெறித்தனமான இந்திய விரோதக் கொள்கையைக் கடைப்பிடித்த வரலாற்றைக் கொண்டிருக்கிறது.

காலஞ்சென்ற கம்யூனிஸ்ட் தலைவர் என். சண்முகதாசன் தலைமையிலான சீனச்சார்பு கம்யூனிஸ்ட் கட்சியின் வாலிபர் இயக்கத்தின் முக்கிய தலைவராக இருந்த ரோஹண விஜேவீர 1960 களின் பிற்பகுதியில் கட்சியில் இருந்து வெளியேறி

(11ஆம் பக்கம் பார்க்க)

# இந்திய விஜயத்தின் பின்னர் சீனாவை எவ்வாறு தேசிய மக்கள் சக்தி கையாளப்போகின்றது?

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

புதிதாக அமைத்துக்கொண்ட ஜே.வி.பி.யின் கொள்கைகளில் இந்திய விரோதம் முக்கியமான ஒரு கூறாக இருந்தது.

இலங்கையின் ஏனைய சமூகங்களின் தொழிலாளர் வர்க்கத்தினருடன் ஒப்பிடும்போது மெய்யான பாட்டாளி வர்க்கத்தினராக நோக்கக்கூடிய தமிழர்களான இந்திய வம்சாவளி மலையக தோட்டத்தொழிலாளர்களை இந்தியாவின் ஐந்தாம் படையென்றும் இந்திய விஸ்தரிப்புவாதத்தின் கருவிகள் என்றும் விஜேவீர வர்ணித்தார்.

மலையக பெருந்தோட்டங்களில் தேயிலைச் செடிகளை அகற்றிவிட்டு உருளைக் கிழங்கை பயிரிடுவது குறித்து அவர் பேசியதாகவும் கூறப்பட்டது.

1980 களின் பிற்பகுதியில் கைச்சாத்திடப்பட்ட இந்திய - இலங்கை சமாதான உடன்படிக்கையை "இரண்டாவது மலைநாட்டு உடன்படிக்கை" (Second Upcountry Pact) என்று விஜேவீர வர்ணித்ததாக இலங்கையில் இந்தியாவின் தலையீடுகள் தொடர்பில் அவரின் சிந்தனைகள் குறித்து 2019 ஆம் ஆண்டில் உதேனி சமன் குமார என்ற என்பவர் எழுதிய விரிவான கட்டுரையொன்றில் பதிவு இருக்கிறது.


கண்டி பிரதானிகளுக்கும் பிரிட்டிஷ் காலனியாதிக்கவாதிகளுக்கும் இடையில் கைச்சாத்திப்பட்ட உடன்படிக்கையே இறுதியில் முழு இலங்கையும் பிரிட்டிஷாரின் ஆட்சியின் கீழ் வருவதற்கு வழிவகுத்தது. அதுவே முதலாவது மலைநாட்டு உடன்படிக்கை எனப்படுகிறது. இந்தியாவுடனான சமாதான உடன்படிக்கையை இலங்கை முழுவதும் இந்தியாவின் ஆதிக்கத்தின் கீழ் வருவதற்கு வழிவகுக்கக்கூடியது என்று விஜேவீர சிங்கள மக்களுக்கு கூறினார் என்பதை இதில் இருந்து புரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கிறது.

அந்த சமாதான உடன்படிக்கையை அடுத்து இரண்டாவது ஆயுதக்கிளர்ச்சியை முன்னெடுத்த ஜே.வி.பி. இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண முடியும் என்ற நம்பிக்கையில் மாகாண சபை முறையை ஆதரித்த தென்னிலங்கை அரசியல்வாதிகள் பலரை படுகொலை செய்தது. முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் கணவர் விஜய குமாரதுங்கவும் அவர்களில் ஒருவர். ஆனால், விஜேவீரவின் மறைவுக்கு பிறகு சில வருடங்கள் கழித்து ஜே.வி.பி. தேர்தல்களில் போட்டியிட்டு மாகாணசபைகளில் அங்கம் வகித்தது என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால், ஜே.வி.பி.யும் அதன் நவீன அவதாரமான தேசிய மக்கள் சக்தியும் மாகாணசபை முறைக்கு வழிவகுத்த அரசியலமைப்புக்கான 13 வது திருத்தத்தை கடுமையாக எதிர்த்து வருகின்றன. அந்த திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு தனக்கு இருக்கும் விருப்பத்தை ஜனாதிபதி விக்கிரமசிங்க கடந்த வருட முற்பகுதி யில் வெளியிட்டபோது கடும்போக்கு சிங்கள பௌத்த தேசியவாத சக்திகளுக்கு எந்த விதத்திலும் குறைவில்லாத அளவுக்கு தேசிய மக்கள் சக்தி அதை எதிர்த்தது.

ஆனால், தற்போதைய புவிசார் அரசியல் நிலைவரங்களுக்கு மத்தியில் ஜே.வி.பி.யின் இந்திய விரோதக் கடந்த காலத்தை மோடி அரசாங்கம் பொருட்படுத்தவில்லை. தேசிய மக்கள் சக்தியும் இந்தியா தொடர்பிலான அதன் நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டுள்ளது.

இந்தியாவின் முக்கியமான ஆங்கிலப் பத்திரிகைகளில் ஒன்றான சென்னை இந்துவின் கொழும்பு செய்தியாளர் மீரா ஸஷ சிறினிவாசனுக்கு கடந்த டிசம்பரில் திசாநாயக்க வழங்கிய நேர்காணலில் இலங்கையின் நெருங்கிய அயல்நாடான இந்தியா முக்கியமான அரசியல் மற்றும் பொருளாதார மையமாக மாறிவிட்டது என்றும் அரசியல், பொருளாதாரத் தீர்மானங்களை எடுக்கும்போது அவை இந்தியாவில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை எப்போதும் கவனத்திற்கொண்டே செயற்படப்போவதாகவும் கூறினார்.




சீனாவுடன் நெருக்கமான உறவுகளைக் கொண்டிருக்கும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர்கள் இந்திய விஜயத்தின் பின்னர் சீனாவை எவ்வாறு கையாளுவார்கள் என்பது முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டியதாகும்.

கடந்த வாரம் கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரினி அமரசூரியவிடம் அவரது கட்சி வல்லரசுகளுடனான உறவுகளை எவ்வாறு கையாளும் என்று கேள்வியழுப்பப்பட்டது.

அதற்கு அவர், "எமக்கு சிறப்பான முறையில் பொருத்தமாக அமையக்கூடிய நிகழ்ச்சித்திட்டத்தின் அடிப்படையிலேயே நாம் எந்த நாட்டுடனும் விவகாரங்களைக் கையாளவேண்டும். சீனாவோ, இந்தியாவோ அல்லது அமெரிக்காவோ அவர்களுக்கென்று ஒரு நிகழ்ச்சித்திட்டம் இல்லாமல் எம்முடன் விவகாரங்களைக் கையாள வரப்போவதில்லை. எமக்கென்று ஒரு நிகழ்ச்சித்திட்டம் இல்லாவிட்டால் அவர்களின் நிகழ்ச்சித் திட்டத்தின் பிரகாரமே நாம் செயற்படவேண்டியிருக்கும்" என்று பதிலளித்தார்.

### சீனாவின் வியூகங்கள் பற்றிய அக்கறை

இலங்கை உட்பட இந்து சமுத்திரத்தின் கரையோர நாடுகளில் சீனா அதன் செல்வாக்கைத் திணிக்கும் முயற்சிகளில் தீவிரமாக இறங்கியிருக்கும் பின்புலத்தில், இந்திய வெளியுறவு அமைச்சரும் தேசிய பாதுகாப்பு ஆலோசகரும் வெளியுறவுச் செயலாளரும் தங்களது நாட்டின் அக்கறைகளை தேசிய மக்கள் சக்தியின் தலைவரின் கவனத்துக்கு கொண்டுவருவந்திருப்பார்கள் என்பது நிச்சயம்.

இலங்கையில் இந்தியாவின் நலன்கள் உறுதிசெய்யப்படுவதை ஆதரிக்கக்கூடிய மாற்றுக் கட்சியொன்றை புதுடில்லி தேடுவதன் அறிகுறியே தேசிய மக்கள் சக்திக்கு நீட்டப்பட்ட நேசக்கரமாகும் என்று இலங்கையில் சில அவதானிகள் உணருகிறார்கள்.

ஆனால், திசாநாயக்கவின் புது டில்லி விஜயத்தை விக்கிரமசிங்க அரசாங்கம் முழுமையாக ஆதரிக்கிறது போன்று தெரிகிறது. பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டுவருவதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் உதவித் திட்டத்துக்கு தேசிய மக்கள் சக்தியின் ஒத்துழைப்பைப் பெறுவதில் ஜனாதிபதி அக்கறையாக இருக்கிறார். இது இந்திய நலன்களுடனும் ஒத்துப்போகக் கூடியது என்று கொழும்பை மையமாகக்கொண்டியங்கும் இந்தியப் பத்திரிகையாளரும் அரசியல் ஆய்வாளருமான பி.கே. பாலச்சந்திரன் கூறுகிறார்.

> **சமஷ்டி அரசாங்க முறையையோ அல்லது குறைந்தபட்சம் 13ஆவது திருத்தத்தையோ கூட ஆதரிக்காத தேசிய மக்கள் சக்தியுடனான இந்தியாவின் ஊடாட்டத்தை தமிழர்கள் விரும்பமாட்டார்கள் என்பது நிச்சயம்.**

பொருளாதார மறுசீரமைப்பு செயற்திட்டத்துக்கு சகல கட்சிகளினதும் ஒத்துழைப்பை நாடிநிற்பதாக கடந்த புதன்கிழமை பாராளுமன்றத்தின் புதிய கூட்டத்தொடரை ஆரம்பித்து வைத்த பிறகு கொள்கைவிளக்க உரையில் விக்கிரமசிங்க கூறினார்.

### தமிழர்களின் மனநிலை

அதேவேளை, சமஷ்டி அரசாங்க முறையையோ அல்லது குறைந்தபட்சம் 13 வது திருத்தத்தையோ கூட ஆதரிக்காத தேசிய மக்கள் சக்தியுடனான இந்தியாவின் ஊடாட்டத்தை தமிழர்கள் விரும்பமாட்டார்கள் என்பது நிச்சயம். ஆனால், இந்தியாவுடன் ஆரம்பித்திருக்கும் நெருக்கம் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வுதொடர்பில் தேசிய மக்கள் சக்தியின் நிலைப்பாடுகளில் தளர்வுகளை ஏற்படுத்துவதற்கு உதவவும் கூடும் என்று ஒரு வாதம் முன்வைக்கப்படுவதாகவும் பாலச்சந்திரன் கூறுகிறார்.

ஆனால், தற்போதைய சூழ்நிலையில் இனப்பிரச்சினையுடன் தொடர்புடைய விவகாரங்கைளை திசாநாயக்க குழுவினருடன் இந்திய அதிகாரிகள் கலந்துரையாடியிருப்பார்கள் என்று பெரும்பாலும் எதிர்பார்ப்பதற்கில்லை.

இது இவ்வாறிருக்க, இந்தியா நேசக்கரத்தை நீட்டியிருக்கும் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தென்னிலங்கையில் உள்ள இந்திய விரோத அரசியல் சக்திகள் தேசிய மக்கள் சக்திக்கு எதிராக பிரசாரங்களை முன்னெடுக்கத் தொடங்கியிருப்பதையும் காணக்கூடியதாக இருக்கிறது.

பெரும்பாலான இலங்கையர்கள் எதிர்க்கும் பொருளாதார மற்றும் தொழில்நுட்ப உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு ஆதரவைப் பெறும் நோக்குடனேயே தேசிய மக்கள் சக்திக்கு இந்தியா அழைப்பை அனுப்பியதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச கூறியிருக்கிறார்.

தங்களுக்கு கிடைத்திருக்கும் தகவல்களின்படி இந்தியா அந்த உடன்படிக்கையில் விரைவில் கைச்சாத்திடவிருக்கிறது என்று செய்தியாளர்களிடம் கூறிய வீரவன்ச, இலங்கையின் வர்த்தகத்தையும் தொழிற்சந்தையையும் இந்தியாவுக்கு திறந்துவிடுவதே அந்த உடன்படிக்கையின் நோக்கம். இலங்கையை தனது காலனி நாடாக மாற்ற விரும்பும் இந்தியா சகல அரசியல் கட்சிகளையும் பூனைக்குட்டிகள் போன்று கட்டுப்படுத்தி வைத்திருக்க விரும்புகிறது என்று குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

சிறிலங்கா ரெலிகோமுடன் இந்தியா உடன்பாடு ஒன்றுக்கு வருவதற்கான சாத்தியம் இருக்கும் பின்புலத்திலேயே தேசிய மக்கள் சக்தியின் தலைவர்கள் புதுடில்லிக்கு அழைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று பொதுஜன பெரமுனவின் தொழிற்சங்கத் தலைவர்களில் ஒருவரான அனில் ஹேவத்த நெத்திக்குமார கூறியிருக்கிறார்.

தேசிய மக்கள் சக்தி தலைவர்களின் இந்திய விஜயத்துக்கு எதிரான பிரசாரங்கள் தேசிய தேர்தல்களுக்கு இலங்கை தயாராகும் சூழ்நிலையில் புதிய இந்திய விரோத உணர்வு அலைக்கு வழிவகுக்கக்கூடிய சாத்தியம் இருப்பதாக சில அவதானிகள் கருதுகிறார்கள்.

இலங்கையில் இந்திய முதலீடுகளுக்கு எதிராக குரலெழுப்பிவந்த தேசிய மக்கள் சக்தி இனிமேல் அத்தகைய முதலீடுகள் தொடர்பில் எத்தகைய அணுகுமுறையைக் கடைப்பிடிக்கும் என்பதும் இந்திய விஜயம் தொடர்பில் தேசியவாத சக்திகளினால் முன்வைக்கப்படும் விமர்சனங்களுக்கு எவ்வாறு பதிலளிக்கும் என்பதும் முக்கியமான கேள்விகள்.

இந்திய விஜயம் தேசிய மக்கள் சக்திக்கும் அதன் தலைவர்களுக்கும் பிராந்திய மட்டத்தில் ஒரு பெரிய அரசியல் மற்றும் இராஜதந்திர வெற்றி என்று நோக்கப்படுகின்ற போதிலும், இலங்கையின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் மிக முக்கியமான ஒரு அரசியல் சக்தியாக அவர்களை இந்தியா நோக்குவது எந்தளவுக்கு விவேகமானது, பொருத்தமானது என்ற கேள்வி பல மட்டங்களில் எழுப்பப்படுகிறது

# உலகத் தமிழர் பேரவை மற்றும் அதன் கூட்டாளிகளின் துரோக முயற்சியை நாங்கள் நிராகரிக்கிறோம்!

## 16 புலம்பெயர் அமைப்புக்கள் கூட்டாக அறிக்கை

2009 ஆம் ஆண்டு, தமிழ் இனப்படுகொலையின் உச்சக்கட்டத்தில், புலம்பெயர்ந்த தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்த உலகளாவிய தமிழ் குடை அமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டியதன் அவசியத்தை உலகளாவிய தமிழ் அமைப்புகள் உணர்ந்தன. ஆரம்பத்தில், அவர்கள் தமிழ் மக்களின் நியாயமான மற்றும் அடிப்படை வேணவாக்களை முன்னேற்றுவதற்காக உலகத் தமிழர் பேரவையை (GTF) உருவாக்கினர். ஒரு சில ஆண்டுகளுக்குள், உலகத் தமிழர் பேரவை ஒரு சில நபர்களால் சனநாயகமற்ற முறையில் கையகப் படுத்தப்பட்டதனால், தமிழ் மக்களின் நியாயமான மற்றும் அடிப்படையான வேணவாக்களிலிருந்து விலகியது. இதன் விளைவாக, கனேடிய தமிழ் காங்கிரஸ் (CTC) தவிர மற்ற அனைத்து அங்கத்துவ அமைப்புகளும் உலகத் தமிழர் பேரவை இலிருந்து தாமாகவே விலகிக்கொண்டதனால் இந்த அமைப்பை அடிமட்டத்தில் புலம்பெயர்ந்த தமிழ் மக்களின் ஆதரவின்றி நிற்க வழிவகுத்தது. இன்றுவரை, உலகத் தமிழர் பேரவை மற்றும் கனடிய தமிழ் காங்கிரஸ் ஆகிய இரண்டும் நடந்த இனப்படுகொலைக்காக அல்லது தமிழ் மக்களின் நியாயமான மற்றும் அடிப்படை கோரிக்கைகளுக்காக வாதிட மறுத்துவிட்டதன் மூலம், அவர்கள் பிரதிநிதித்துவம் செய்வதாகக் கூறும் தமிழ் மக்களைக் கைவிட்டுள்ளனர்.

பின்னர், உலகத் தமிழர் பேரவை இலிருந்து வெளியேறிய 14 நாடுகளைச் சேர்ந்த புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகளில் பெரும்பாலானவை அனைத்துலக ஈழத்தமிழர் அவையை (ICET) உருவாக்கினர். இதில் 2008 முதலாவது மக்களவை ஆரம்பிக்கப்பட்டு இன்று 14 நாடுகளில் மக்களவைகள் இயங்குகின்றன. இது தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்காக தொடர்ந்து வாதிட்டு வருகிறது. 2011 ஆம் ஆண்டு முதல், அனைத்துலக ஈழத்தமிழர் அவை உலகளாவிய ரீதியில் வளர்ச்சியடைந்துள்ளதுடன், தமிழ் மக்களுக்கு எதிராக இலங்கையினால் மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலைக்கான நீதியையும், தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமையின் அடிப்படையிலான நீண்டகால அரசியல் தீர்விற்காகவும் அங்கம் வகிக்கும் நாட்டு அமைப்புகள் செயற்பட்டு வருகின்றன. இதற்கிடையில், தமிழ் மக்களின் பாரம்பரிய மற்றும் வரலாற்று தாயகத்தில் வாழ்கின்ற தமிழ் மக்களின் நிலைமை மோசமாகி, அவர்களின் தாயகத்தில் அடிப்படை உரிமைகள் அற்ற திறந்தவெளி சிறைச்சாலையாக மாறியுள்ளது. ஐநா மனித உரிமைகள் பேரவையினால் ரத்துசெய்யுமாறு பணிக்கப்பட்ட கொடூரமான பயங்கரவாதத் தடைச் சட்டம், சுதந்திரப் போராட்டத்தில் உயிரிழந்த தங்கள் பிள்ளைகள் மற்றும் உறவினர்களை நினைவுகூரும் தமிழ் மக்களை துன்புறுத்துவதற்கும் சிறையில் அடைப்பதற்கும் இலங்கை அரசால் பயன்படுத்தப்படுகிறது. தொல்பொருள் திணைக்களம் மற்ற மதத் தலங்களை அழித்து, அந்த புனிதத் தலங்களுக்குப் பதிலாக பௌத்த நினைவுச்சின்னங்களைக் இரவோடிரவாக திணித்து அந்த இடங்களை பௌத்த விகாரைகள் கட்டுவதற்கு உரிமை கோருகிறது. பௌத்தர்கள் யாரும் வசிக்காத தமிழர் தாயகத்தில் 1000 பௌத்த விகாரைகளை நிர்மாணிப்பதாக இலங்கையின் தற்போதைய ஜனாதிபதி உறுதியளித்துள்ளார்.

கடந்த ஏழு தசாப்தங்களில் தமிழ்த் தலைவர்களுடன் செய்துகொண்ட ஒப்பந்தங்களை ரத்து செய்ததற்கான நீண்ட ஆவணப்படுத்தப்பட்ட வரலாற்றை இலங்கை கொண்டுள்ளது. ஐ. நா மனித உரிமைகள் பேரவையில் தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்க பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. அவ்வாறாயினும், தீர்மானங்களின் பரிந்துரைகள் எதிலும் இதுவரை இலங்கை அரசாங்கத்திடம் இருந்து உறுதியான முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை. தமிழ் மக்களுக்கு எதிராக, சர்வதேச மனித உரிமைப் பிரகடனத்தில் உள்ள 30 சரத்துக்களையும், இலங்கை தண்டனையின்றி மீறியுள்ளது என்பதை மீண்டும் வலியுறுத்துகிறோம். தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட குற்றங்களுக்கு காரணமான ஒவ்வொரு சிங்கள சிப்பாயையும் பாதுகாப்பதாக சபதம் செய்து இலங்கையில் தற்போதைய தலைமை உட்பட அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்தன. எனவே, தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலைக்கு இலங்கை எந்த வகையிலும் உண்மையான நீதியை நிலைநாட்டும் அல்லது தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றி

(14ஆம் பக்கம் பார்க்க)

---



உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி

வியுக்தியார் பதில்கள்
ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
viyukthiyar@gmail.com

# வியுக்தியார் பதில்கள்

**பா. சதீசன், கோவில் வீதி, யாழ்ப்பாணம்.**

**கேள்வி:** நாட்டின் பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதற்காக மாகாண சபைகளுக்கு சில அதிகாரங்கள் உரிய வகையில் வழங்கப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது கொள்கைப் பிரகடன உரையில் தெரிவித்துள்ளாரே.?

**வியுக்தியார்:** அவர் ஆட்சிப்பொறுப்பை எடுத்து இந்த இரண்டு ஆண்டுகளில் தனது கொள்கைப்பிரகடன உரை என்று பல உரைகளை ஆற்றிவிட்டாரே. அவர் 'வழங்கப்படும்' என்று எதிர்காலத்தை குறித்து சொன்னால் இனியும் யாரும் நம்புவார்களா என்பது தெரியவில்லை. அவர் இனி அதிகாரங்களை வழங்கிவிட்டு அறிவிக்கட்டும் அப்போது அதுபற்றி கருத்துச் சொல்வதுதான் சரியாக இருக்கும்.

---

**கே. இரவீந்திரராசா,**
**சின்ன உப்போடை, மட்டக்களப்பு**

**கேள்வி:** தமிழ் அரசு கட்சியின் பொதுச் செயலாளர் பதவிக்காலத்தை தலா ஒரு வருடம் பகிர்வதற்கு இணங்கியமை உண்மை என்று மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞா. சிறீநேசன் தெரிவித்துள்ளாரே. ஆனால் திருகோணமலையில் நடைபெற்ற மத்திய செயற்குழுக் கூட்டத்தில் பொதுச் செயலாளரைத் தெரிவுசெய்தபோது, அப்படி அறிவித்ததாகத் தெரியவில்லையே?.

**வியுக்தியார்:** மத்திய செயற்குழுக் கூட்டத்தில் என்ன நடைபெற்றது என்பதைத்தான், நேரில் பார்த்ததுபோல விலாவாரியாக விளக்கமளித்து விட்டாரே ஒருவர். அந்தக் கூட்டத்தை நேரடி ஒளிபரப்பு செய்ததுபோல சொல்லியபோதே, புதிய தலைவரும் அவரது ஆதரவாளர்கள் சிலரும் நீண்டநேரம் தனிமையில் ஆலோசனை நடாத்திய பின்னரே, குகதாசனை செயலாளராக ஏற்றுக் கொண்டார்கள் என்று தெரிவித்திருந்தாரே. அந்த நீண்ட நேர ஆலோசனையில் அப்படி முதல் வருடத்திற்கு அவருக்கு கொடுப்பது என்றும் அடுத்த வருடம் சிறிநேசனுக்கு கொடுப்பது என்றும் அவருக்கு தெரிவிக்கப்பட்டிருந்ததாம். ஆனால், செயற்குழு முடிவில் அப்படி சொல்லப்படவில்லை என்பதுதான் குழப்பத்திற்கு காரணமோ தெரியவில்லை. ஆனால் இனி இந்த தமிழரசின் பாரம்பரியம் என்று பேசிக்கொண்டிருக்காமல், தலைவர், பொதுச்செயலாளர் பதவிகளுக்கு தேர்தல் மூலம் தெரிவுசெய்வதுதான் சரியானது என்பதைத் தான் நடந்திருக்கும் சம்பவங்கள் உணர்த்துகின்றன.

---

**சி. சதீஸ்குமார்,**
**உருத்திரபுரம், கிளிநொச்சி.**

**கேள்வி:** மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) தலைவர் அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான குழு 5 நாள் பயணமாக இந்தியா சென்றுள்ளதுடன், புதுடில்லியில் இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கரையும் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளதே. இந்திய எதிர்பை ஜேவிபி கைவிட்டுவிட்டது என்று இனியாவது நம்பலாமா?

**வியுக்தியார்:** இந்தியாவுக்கு சென்றுவிட்டால் மட்டும் இந்திய எதிர்ப்பை கைவிட்டுவிட்டதாக கொள்ள முடியுமா என்பது தெரியவில்லை. அவர்கள் தங்கள் தேவையை நிறைவேற்றிக்கொள்ளவேண்டுமானால், எந்தப் பேயுடனும் கூட்டுச் சேர்வார்கள் என்பதை கடந்த காலங்களிலேயே உணர்த்தியிருக்கின்றனர் தானே. புலிகளை தோற்கடிப்பதற்காக மகிந்தவுடன் இணையவில்லையா? இதுபோலத்தான், தாம் வெற்றி பெறுவதை இந்தியா என்ன விலை கொடுத்தும் தடுத்துவிடும் என்பதால், அவர்களை 'தாஜா' செய்யச் சென்றிருக்கிறார்கள் என்று தான் நினைக்கின்றேன். கொஞ்சம் பொறுங்கள், தேர்தல் பிரசாரத்தில் தமது இந்திய எதிர்ப்பை கையில் எடுக்கிறார்களா இல்லையா என்று பார்ப்போம்.

---

**த. பிரதீபன்,**
**கரவெட்டி கிழக்கு, கரவெட்டி**

**கேள்வி:** யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலைய விஸ்தரிப்புக்கு 500 ஏக்கர் காணிகளை சுவீகரிக்க முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டங்களை முன்னெடுக்க சிவில் அமைப்புகள் தயாராகியுள்ளனவாமே. இது சரியானது என்று நினைக்கின்றீர்களா?

**வியுக்தியார்:** ஒவ்வொருவருக்கும் தத்தமது காணிகள் முக்கியமானவைதான். ஆனால், ராணுவத்தின் தேவைகளுககாக சுவீகரிப்பதுதான் தவறானது. ஆனால், யாழ்ப்பாண விமான நிலையத்தின் ஓடுபாதையை சற்று விஸ்தரித்து பெரிய விமானங்களும் தரையிறங்கக்கூடியவாறு செய்வது பல வழிகளிலும் நமக்கு நல்லதுதான். எடுத்ததற்கெல்லாம் எதிர்ப்பு என்று நிற்காமல், இது பற்றி ஆற அமர யோசித்து, சுவிகரிக்கப்படும் காணிகளுக்கு பொருத்தமான நஷ்டஈட்டைப் பெற முயல்வதும் நல்லது. தையிட்டியில் விகாரைகட்டுவதற்காக நமது காணிகளை அவர்கள் எடுத்தபோது பார்த்துக்கொண்டிருந்தவர்கள், பின்னர் போராடுவதுபோல இல்லாமல் சுவீகரிப்பதற்கு முன்னர் போராட தயாராவதும் நல்லதுதான்.

---

**ச. துவாரகன், பூந்தோட்டம், வவுனியா**

**கேள்வி:** இராணுவத்தின் பொறுப்பில் இருந்தவர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளார். எனவே, இராணுவம் பதிலளிக்க வேண்டும் - அவர்களே பொறுப்பேற்க வேண்டும் - இவ்வாறு வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டவரான கந்தசாமி இளரங்கன் என்பவரை தேடி அவரின் தாயார் தொடுத்த ஆட்கொணர்வு மனுமீதான விசாரணையில் உத்தரவிட்டுள்ளார் வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன். இனி அவருக்கும் முல்லைத்தீவு நீதிபதிக்கு வந்தது போல அச்சுறுத்தல் வரும் என்று நினைக்கின்றீர்களா?

**வியுக்தியார்:** யுத்தம் நடந்துகொண்டிருந்தபோதே செம்மணி படுகொலை வழக்கில் ராணுவத்திற்கு எதிராக தீர்ப்பு சென்னவர் நீதிபதி இளஞ்செழியன். அதாவது ராணுவத்தினர் என்ன செய்தாலும் கேட்கமுடியாத காலம் அது. அப்போதே துணிந்து நீதியின் பக்கம் நின்றவர். அவரெல்லாம் முல்லைத்தீவு நீதிபதி போல சலசலப்புக்கு அஞ்சமாட்டார்.

---

**எஸ். நிதர்சன் சங்கிலியன் வீதி, நல்லூர்**

**கேள்வி:** ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேசிய மக்கள் சக்தியை மூளைச்சலவை செய்துள்ளார். அதன் காரணமாகவே தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க இந்திய தலைவர்களை சந்திக்க சென்றுள்ளார் என அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளாரே. ஏதாவது உங்களுக்கு புரிகின்றதா?

வியுக்தியார்: அது வேறு ஒன்றுமில்லை. இந்தியா தான் தன்னை தோற்கடித்தது என்று சொல்லி பிரசாரம் செய்ததால்தான் மகிந்தர் மீண்டும் வெற்றிபெறமுடிந்தது. அதாவது இந்திய எதிர்ப்பு பிரசாரம்தான் அவருக்க உதவியது என்றும், அவ்வாறே ஜேவிபியும் தொடர்ந்து இந்திய எதிர்ப்பிலேயே இருந்தால் வென்றுவிடுவார்களோ என்ற எண்ணத்தில் ரணில் அவர்களை மூளைச்சலவை செய்து இந்தியாவுக்கு அனுப்பியிருக்கிறார். இனி அவர்கள் இந்திய எதிர்ப்பு பிரச்சாரத்தை செய்யமுடியாமல் பண்ணிவிட்டார் ரணில் என்கிறார் என்று நினைக்கின்றேன்.

# சீனாவில் ஊடக சுதந்திரம் மறுப்பு: ஆஸி. எழுத்தாளருக்கு மரண தண்டனை!

ஐங்கரன் விக்கினேஸ்வரா




அவுஸ்திரேலிய அறிஞரும் நாவலாசிரியருமான டாக்டர் யாங் ஹெங்ஜூனுக்கு (Yang Hengjun) சீன நீதிமன்றம் மரண தண்டனை விதித்துள்ளது. அவர் பிறப்பால் சீன வம்சாவளியைச் சேர்ந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

உளவு பார்த்த குற்றச்சாட்டில், அவுஸ்திரேலிய எழுத்தாளர் ஒருவருக்கு சீனாவில் மரண தண்டனை விதித்துள் ளமைக்கு ஆஸி அரசு பலத்த கண்டனத்தை தெரிவித்துள்ளது. அவர் கைது செய்யப்பட்ட ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு, சீன நீதிமன்றம் அவருக்கு இடைநிறுத்தப்பட்ட மரண தண்டனையை தற்போது விதித்துள்ளது.

அவுஸ்திரேலியாவின் வெளிவிவகார அமைச்சர் பெனி வாங், இந்த தண்டனை இடைநிறுத்தப்பட்ட தண்டனை என்றும், இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு ஆயுள் தண்டனையாக மாற்ற முடியும் என்றும் கூறியுள்ளார்.

அவர் அனைத்து குற்றச்சாட்டுகளிலும் குற்றவாளி என்று கண்டறியப்பட்டார் என்பதால் இத்தீர்ப்பை சீன நீதிமன்றம் வழங்கியது. சீனா பகிரங்கமாக பெயரிடாத ஒரு நாட்டிற்காக உளவு பார்த்ததாக யாங் குற்றம் சாட்டப்பட்டார். அதே நேரத்தில் அவருக்கு எதிரான வழக்கின் விவரங்கள் வெளியிடப்படவில்லை.




அறிஞரும் நாவலாசிரியருமான டாக்டர் யாங், இதுவரை அவர் மீது வெளியிடப்படாத குற்றச்சாட்டுகளை முழுமையாக மறுத்துள்ளார்.

ஜனநாயக ஆர்வலர் யாங் ஹெங்ஜூன் உளவு பார்த்த குற்றச்சாட்டில் 2019 முதல் சீனாவில் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

சீனாவில் தடுத்து வைக்கப்பட்டு ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகும், உளவு பார்த்த குற்றச்சாட்டில் மூடிய கதவு விசாரணைக்கு மூன்று ஆண்டுகளுக்குப் பிறகும் தீர்ப்பு வந்துள்ளது.

**கருத்து சுதந்திரமும் ஊடக உரிமையும்**

கருத்து சுதந்திரம் என்பது, அடிப்படை உரிமைகளில் ஒன்று. இச்சுதந்திரம் இருந்தால் தான், உண்மையான ஜன நாயகம் நீடிக்கும். அதே வேளை ஊடகச் சுதந்திரம் என்பது ஊடகங்கள் மிரட்ட லும் தணிக்கையும் இல்லாமல் தகவலை வெளியிடுவதற்கான சுதந்திரம் ஆகும்.

ஆயினும் வெவ்வேறு நாடுகளில் ஊடகச் சுதந்திரம் வெவ்வேறு நிலைகளில் உள்ளது. நேர்டிக் நாடுகள், கனடா, ஐக்கிய அமெரிக்கா, ஜப்பான், ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் ஊடகங்கள் மிகச் சுதந்திரமாக இயங்குகின்றன.

ஆனால் சீனா, ஈரான், வட கொரியா, கியூபா, இலங்கை ஆகிய நாடுகளில் ஊடகங்கள் மிகவும் கட்டுப் படுத்தப்பட்டுள்ளன. இந்தியா ஓரளவு கட்டுப்பாடுகளைக் கொண்ட ஒரு இடைப்பட்ட நாடாக உள்ளது.

**சீனாவில் ஊடக அதிகாரம்:**

சீன மக்கள் குடியரசு பத்திரிகையாளர் களுக்கான உலகின் மிகப்பெரிய சிறைச் சாலையாகும். மேலும் அதன் ஆட்சி உலகளவில் பத்திரிகை மற்றும் தகவல் அறியும் உரிமைக்கு எதிராக அடக்கு முறை பிரச்சாரத்தை நடத்துகிறது.

சின் ஹூவா நியூஸ் ஏஜென்சி, சீனா சென்ட்ரல் டெலிவிஷன் (சிசிடிவி), சீனா நேஷனல் ரேடியோ (சிஎன்ஆர்) மற்றும் சீனா டெய்லி, பீப்பிள்ஸ் டெய்லி மற்றும் குளோபல் டைம்ஸ் ஆகிய செய்தித்தாள்கள் போன்ற முக்கிய சீன ஊடகக் குழுக்கள் அரசுக்குச் சொந்தமா னதுடன், நேரடியாக அரச அதிகாரிக ளால் கட்டுப்படுத்தப்படுகின்றன.

அத்துடன் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் பிரச்சாரத் துறையானது, தலையங்க வழிகாட்டுதல்கள் மற்றும் தணிக்கை செய்யப்பட்ட தலைப்புகளை உள்ளடக்கிய விரிவான அறிவிப்பை ஒவ்வொரு நாளும் அனைத்து ஊடகங்களுக்கும் அனுப்புகிறது.

அரசுக்குச் சொந்தமான சீனா குளோபல் டெலிவிஷன் நெட்வொர்க் (CGTN) மற்றும் ரேடியோ சீனா இன்டர்நேஷனல் (RCI) ஆகியவை ஆட்சியின் பிரச்சாரத்தை உலகம் முழுவதும் பரப்பி வருகிறது.

**கட்சியின் ஊதுகுழல் :**

ஆட்சியின் பார்வையில், ஊடகங்களின் செயல்பாடு கட்சியின் ஊதுகுழலாகவும், அரசின் பிரச்சாரத்தை வழங்குவதாகவும் உள்ளது. "உணர்திறன்" தகவலைப் புகாரளிக்கத் துணியும் சுதந்திரமான பத்திரிகையாளர்கள் மற்றும் பதிவர்கள் பெரும்பாலும் கண்காணிப்பின் கீழ் வைக்கப்பட்டுள்ளனர். நீண்ட காலம் தடுத்து வைக்கப்பட்டு சில



சமயங்களில் சித்திரவதை செய்யப்படுகின்றனர்.

சீன மக்கள் குடியரசின் அரசியலமைப்பு பேச்சு சுதந்திரம், பத்திரிகை சுதந்திரத்திற்கு உத்தரவாதம் அளிக்கிறது எனக் கூறினாலும், பத்திரிக்கையாளர்களை மேலும் மௌனமாக்க, அது அவர்கள் மீது அடிக்கடி உளவு குற்றம் சாட்டுகிறது.

**சீனாவின் கறுப்புச் சிறைகள்:**

சீனாவின் கறுப்புச் சிறைகளில் குறிப்பிடப்பட்ட இடத்தில் குடியிருப்பு கண்காணிப்பின் கீழ் சுதந்திரமான பத்திரிகையாளர்கள் சட்டப்பூர்வமாக ஆறு மாதங்களுக்கு தனிமைச் சிறையில் வைக்கப்படலாம். அங்கு அவர்கள் சட்டப்பூர்வ பிரதிநிதித்துவம் இழக்கப்பட்டு சித்திரவதைக்கு உட்படுத்தப்படவும் சாத்தியமுண்டு.

2012 ஆம் ஆண்டு முதல் மாவோயிஸ்ட் சகாப்தத்திற்கு தகுதியான ஊடக கலாச்சாரத்தை மீட்டெடுத்துள்ளனர். அதில் தகவல்களை சுதந்திரமாக அணுகு வது ஒரு குற்றமாக மாறியுள்ளது. மற்றும் தகவல்களை வழங்குவது இன்னும் பெரிய குற்றமாகும். சீனாவின் அரசு மற்றும் தனியாருக்குச் சொந்தமான ஊடகங்கள் கம்யூனிஸ்ட் கட்சியின் எப் போதும் இறுக்கமான கட்டுப்பாட்டின் கீழ் உள்ளன. அதே நேரத்தில் நிர்வாகம் வெளிநாட்டு நிருபர்களுக்கு மேலும் மேலும் தடைகளை உருவாக்குகிறது.

**ஆயுள் தண்டனையாக மாறும் ?**

முன்னர் சீனாவின் மாநில பாதுகாப்பு அமைச்சகத்தில் பணியாற்றிய டாக்டர் யாங், கைது மற்றும் தொடர்புடைய வழக்குகள் குறித்து ஆஸ்திரேலிய அதிகாரிகள் முன்பு கவனத்தை ஈர்த்திருந்தாலும், சீன வெளியுறவு அமைச்சகம் இந்த வழக்கில் தலையிடாமல் நீதித்துறை இறையாண்மைக்கு மதிப்பளிக்குமாறு எச்சரித்திருந்தது.

டாக்டர் யாங்கின் குடும்பத்தினர், அவர் 300-க்கும் மேற்பட்ட விசாரணைகளுக்கும் ஆறு மாதங்களுக்கும் மேலாக கடுமையான சித்திரவதைகளுக்கும் உட்படுத்தப்பட்டதாகக் கூறினர்.

அவுஸ்திரேலிய அரசாங்கம் அவரை விடுவிக்க ஒரு மனுவை சமர்ப்பித்தது. அத்துடன் செனட்டர் வோங் சீன நாட்டு தூதரை விளக்கம் கேட்டு, இந்த நீதிமன்ற தீர்ப்பை பயங்கரமானது என்று விவரித்துள்ளார். ஆயினும் இத்தண்டனை ஆயுள் தண்டனையாக மாற்றப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எழுத்தாளரும் வலைப்பதிவருமான யாங் ஹெங்ஜூனுக்கு உளவு பார்த்த குற்றச்சாட்டின் பேரில் பெய்ஜிங்கில் உள்ள நீதிமன்றம் மரண தண்டனையை வழங்கியதற்கு அவுஸ்திரேலிய அரசாங்கம், பல்வேறு மனித உரிமை அமைப்புக்கள் கண்டனம் தெரிவித்துள்ளன.

ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு தண்டனையை மாற்றுவது சீனாவில் வழக்க மாக உள்ளதைப் போல, ஜனநாயக சார்பு பதிவருக்கு எதிராக நிறுத்தி வைக்கப்பட்ட தண்டனை இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு ஆயுள் தண்டனையாக மாற்றப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



# தென்கிழக்கு பல்கலை. பட்டமளிப்பு விழா சிறப்புற நடந்தது!







அக்கரைப்பற்று, பெப். 11

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் 16ஆவது பட்டமளிப்பு விழா நேற்று பல்கலைக்கழக ஒலுவில் வளாகத்தின் மண்டபத்தில் மிக கோலாகலமாக ஆரம்பமானது.

இன்றைய இந்நிகழ்வுகள் உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கரின் நெறிப்படுத்தலிலும் பல்கலைக்கழக வேந்தர் ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி பாயிஸ் முஸ்தபா தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன.

பட்டமளிப்பு விழாவின் முதல் அமர்வின் விசேட பேச்சாளராக அமெரிக்க - இலங்கை ஃபுல்பிரைட் ஆணைக்குழுவின் புதிய நிறைவேற் றுப் பணிப்பாளர் கலாநிதி பெட்ரிக் மெக்னமாரா கலந்து கொண்டார்.

முதலாம் நாளின் முதலாவது அமர்வில் கலை கலாசார பீடத்தைச் சேர்ந்த 342 பட்டதாரிகளும் இரண்டாவது அமர்வில் இஸ்லாமிய கற்கைகள் அரபு மொழி பீடத்தைச் சேர்ந்த 355 பட்டதாரிக ளும் மூன்றாவது அமர்வில் பிரயோக விஞ்ஞான பீடம், பொறியியல் பீடம் மற்றும் தொழில்நுட்ப பீடம் ஆகியவற்றைச் சேர்ந்த 430 பட்டதாரிகளும் பட்டங்களைப் பெற்றுக்கொண்டனர்.

மூன்றாவது அமர்வில் பிரயோக விஞ்ஞான பீடம், பொறியியல் பீடம் மற்றும் தொழில் நுட்பவியல் பீட மாணவர்களுக்கான பட்டங்கள் வழங்கப்பட்டன.



விழாவின் மூன்றாவது அமர்வில் விசேட பேச்சாளராக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உப தவிசாளர் சிரேஷ்ட பேராசிரியர் சந்தன பி உடவத்த அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றினார்.

இன்றைய தினம் நான்காவது ,ஐந்தாவது மற்றும் ஆறாவது அமர்வுகளில் வர்த்தக முகாமைத்துவ பீடம் மற்றும் வெளிவாரி பட்டதாரி களுக்கு பட்டங்கள் வழங்கப்படவுள்ளன. (ஐ-06)

# மத்திய வங்கி பிணைமுறி விசாரணை மந்தகதியில்!

## முன்னாள் ஜனாதிபதி மைத்திரி

கொழும்பு, பெப். 11

மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி தொடர்பான விசாரணைகள் மந்தகதியில் முன்னெடுக்கப்படுகின்றன. பிரதான குற்றவாளி என பெயர் குறிப்பிடப்பட்ட அர்ஜூன மகேந்திரன் உட்பட 10 பேரை வழக்கிலிருந்து விடுவிக்க அரசாங்கம் ஏன் விசேட கவனம் செலுத்துகிறது என்பது பகிரங்கப்படுத்த வேண்டும் - என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

ஜனாதிபதியின் கொள்கை பிரடன உரை தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அறிக்கையில் "அவரை கடுமையாக விமர்சித்த பொதுஜன பெரமுனவினர் நாட்டுக்காக அவருக்கு ஒத்துழைப்பு வழங்கியுள்ளபோது ஐக்கிய மக்கள் சக்தியினரால் ஏன் ஒத்துழைப்பு வழங்க முடியாது. நல்லாட்சி அரசாங்கத்தில் மக்கள் விடுதலை முன்னணியினர் ஊழல் ஒழிப்புக்கு முன்னிலையானார்கள்.

ஊழல் ஒழிப்பு பணிமனையின் பொறுப்புக்களை ஆனந்த பாலிதவுக்கு வழங்க மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார பரிந்துரைத்தாரெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது கொள்கை பிரகடன உரையில் குறிப்பிடவில்லை. ஆகவே, ஜனாதிபதி ஆற்றிய உரையை ஏற்பதா அல்லது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரை தொடர்பான அறிக்கையை ஏற்பதா என்பது தெரியவில்லை.

ஊழல் ஒழிப்பு தொடர்பில் ஜனாதிபதி விசேட கவனம் செலுத்தியுள்ளதாக குறிப்பிடப்படுகிறது. மத்திய வங்கியின் ஊழல் மோசடியின் பிரதான குற்றவாளியாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ள மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜூன மகேந்திரன் உள்ளிட்ட 10 பேருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை இரத்து செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து சட்டத்தரணிகளில் ஒரு தரப்பினர் உயர்நீதிமன்றத்தை நாடி அந்த முயற்சியை தோற்கடித்துள்ளார்கள்.

மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி தொடர்பான விசாரணைகள் மந்தகதியில் முன்னெடுக்கப்படுகின்றன. அர்ஜூன மகேந்திரன் உள்ளிட்ட 10 பேருக்கு எதிரான வழக்கை இரத்து செய்வதற்கு ஏன் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதை அரசாங்கம் பகிரங்கப்படுத்தப்பட வேண்டும். ஊழலுக்கு எதிரான செயல்பாடுகள் வெளிப்படைத் தன்மையுடன் முன்னெடுக்கப்பட வேண்டும் - என்றார். (ஐ)

# கனடாவில் வாழமுடியாமல்...

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கு முன்னால் இந்தியாவிலிருந்து கனடாவில் குடியேறிய தலைமுறையினரின் கனடா செல்லும் கனவு மங்கி வருவதற்கு, ஆழமான கலாசாரம் சார்ந்த பல காரணங்களும் பங்கு வகிக்கின்றன.

அதில் கனடாவின் சிக்கலான பிரச்னையான பணி அனுபவத் தேவைகள் மீதான தடை, மக்கள் தொகை அதிகரிப்பு மற்றும் இந்தியாவிற்கும் கனடாவிற்கும் இடையிலான உறவில் சலசலப்பு போன்ற பிரச்னைகள் அடங்கும்.

2023 இன் இரண்டாம் பாதியில் சுமார் 42,000 பேர் கனடாவை விட்டு வெளியேறினர்.

கனடா குடியுரிமைக்கான நிறுவனத்தின் மக்கள்தொகை புள்ளிவிவரங்களின்படி, மிகக் குறைவான நிரந்தர குடியிருப்பாளர்களுக்கே கனடாவின் குடியுரிமை வழங்கப்படுகிறது. அப்படி தகுதி பெற்றவர்களில் 75 சதவீதம் பேர் 2001 இல் கனடிய குடிமக்கள் ஆனார்கள். அந்த எண்ணிக்கை இரண்டு தசாப்தங்களுக்குப் பிறகு 45 சதவீதமாக மாறியது.

**கனடாவில் வீட்டு வசதி, சுகாதாரச் சிக்கல்கள்**

அதிகமான மக்களுக்கு இடமளிக்க நினைக்கும் கனடாவின் தீவிர குடியேற்ற இலக்குகளில் இருந்து இந்த பிரச்னை தொடங்குகிறது.

கனடா தேசிய வங்கியின் பொருளாதார நிபுணர்களின் சமீபத்திய அறிக்கை, கனடாவின் வீட்டுவசதி நெருக்கடியில் உள்ளதாகவும், அதன் சுகாதார கட்டமைப்பு அழுத்தத்தில் இருக்கும்போது, கூடுதல் மக்கள்தொகை வளர்ச்சி மேலும் சுமையை அதிகரிப்பதாகவும் எச்சரித்தது.

புதிதாக வரும் மக்களால், கனடாவின் மக்கள்தொகை 2023 இல் 12 லட்சம் அதிகரித்துள்ளது. ஓராண்டுக்கு மக்கள் குடியேறும் எண்ணிக்கையை 5 லட்சம் என்ற அளவில் கட்டுப்படுத்தினால் மட்டுமே, வாழ்க்கைத் தரத்தை பராமரிக்க அல்லது மேம்படுத்த முடியும் என்று நிபுணர்களின் அறிக்கை கூறப்படுகிறது.

சமீபத்தில் ஜஸ்டின் ட்ரூடோவின் தாராளவாத அரசு சர்வதேச மாணவர்களுக்கான அனுமதிக்கு வரம்புகளை விதித்தது. இது கல்வி விசாக்களில் தற்காலிகமாக 35 சதவீதத்தை குறைக்கும்.

கனடாவில் இருந்து வெளியேறுவதற்கான அலை வீசிக் கொண்டிருக்கும் சூழலில், இந்த குறிப்பிடத்தகுந்த கொள்கை மாற்றம், மேலும் கனடா மீதான விருப்பத்தை குறைக்கும் என்று சிலர் நம்புகின்றனர். •

# உலகத் தமிழர் பேரவை...

(12ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிரந்தர அரசியல் தீர்வை வழங்கும் என எவரும் எதிர்பார்க்க முடியாது.

2024 ஆம் ஆண்டில், ஐநா மனித உரிமை பேரவைக்கு வழங்கிய வாக்குறுதிகளை இலங்கை வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேற்கூறியவற்றின் அடிப்படையில், இலங்கை மீண்டும் ஒருமுறை உலக நாடுகளை ஏமாற்ற விரும்புகிறது என்பது தெளிவாகத் தெரிகிறது. எனவே, உலகத் தமிழர் பேரவை, மற்றும் அதன் சதிகாரர்களின் சில தனிநபர்களின் துரோக முயற்சியானது, ஏமாற்றுக்காரர்களுடன் பேரம் பேசும் போலிக்காரணத்தின் கீழ் இலங்கையை சர்வதேச சமூகத்திலி ருந்தும் ஐநா மனித உரிமை பேரவை ஆய்விலிருந்தும் பாதுகாக்கும் வெறுக்கத்தக்க முயற்சியாகும்! தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தப்பட்ட இனப்படுகொலைக்கு நீதி கிடைக்க நாம் எடுக்கும் அனைத்து முயற்சிகளையும் சீர்குலைக்கும் முயற்சியே இந்த "நிகழ்ச்சி."

இந்த ஏமாற்று முயற்சிகளை புறக்கணிக்குமாறு சர்வதேச சமூகத்தை நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். அரைகுறையான தீர்வு தமிழ் தேசத்தின் பாதுகாப்பை மேலும் சீரழிக்கும். தமிழ் மக்களுக்கு எதிரான இனப்படுகொலைக்கு சர்வதேச சமூகம் பரிகார நீதியை வழங்க வேண்டும். அத்துடன் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதன் அடிப்படையில் நீண்டகால அரசியல் தீர்வைக் காண உதவ வேண்டும்.

01. National Council of Canadian Tamils - (Canada)
02. Norwegian Council of Eelam Tamils (Norway)
03. Italian Council of Tamils (Italy)
04. Council of Eelam Tamils in Germany (Germany)
05. National Council of New Zealand Tamils (New Zealand)
06. Dutch Tamil Forum (Netherland)
07. Tamil Cultural Centre Belgium (Belgium)
08. Finland Tamil Forum (Finland)
09. National Council of Sweden Tamils (Sweden)
10. 10. Maison du Tamil Eelam France (France)
11. Swiss Council of Eelam Tamils (Switzerland)
12. Campaign for Tamil Justice (Australia)
13. Danish Federation of Tamil Associations (Denmark)
14. Council of Eelam Tamils - UK (United Kingdom)
15. Tamil Movement Against Genocide (Mauritius)
16. Solidarity Group for Peace and Justice in Sri Lanka (South Africa)

•

## பதிவுபெற்ற....

வலுப்படுத்த வேண்டியதன் அவசியம் தொடர்பாக ஆராயப்பட்ட இந்தக் கூட்டத்தில், விசாரணையின்போது முன்னெடுக்கப்பட்ட சட்ட ரீதியான விடயங்கள் சம்பந்தமாக சட்டமா அதிபருக்கும் தகவல்கள் பகிரப்பட்டன.

இம்யூனோகுளோபுலின் கொள்வனவின்போது நடைபெற்ற முறைகேடான கொடுக்கல் வாங்கல் தொடர்பில் முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல, முன்னாள் அமைச்சின் செயலாளர் ஜனக சிறீ சந்திரகுப்த மற்றும் பலர் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஒருங்கிணைந்த....

இதனால் நன்மையேற்படும் பொருளாதாரம் போட்டித்தன்மை மிகுந்ததாகக் காணப்படும். மேலும் இந்த மாகாணங்கள் தங்களின் பொருளாதார, சமூக அபிவிருத்தியை தேசிய கொள்கை கட்டமைப்புக்குள் கையாளவேண்டும்.

இந்த அடிப்படையில் ஒருங்கிணைந்த அதிகாரப் பட்டியலில் உள்ள அதிகாரங்களில் அநேகமானவற்றை அல்லது தேவையானவற்றை வழங்க தயாராகவுள்ளோம்.

சில சிறுபான்மை குழுக்கள் செனட் சபைக்கான வேண்டுகோளை விடுத்துள்ளன. எங்களைப் பொறுத்தவரைக்கும் நாங்கள் அதனை எதிர்க்கமாட்டோம். ஆனால், இதனை வெறுமனே அரசாங்கம் மாத்திரம் ஏற்றுக்கொள்ள முடியாது. அனைத்து கட்சிகளும் ஏற்றுக்கொள்ளவேண்டும். பாராளுமன்றத்தில் பல கட்சிகள் உள்ளன - இவ்வாறு இந்தியாவின் பிரபல ஊடகமான வியோன் தொலைக்காட்சிக்கு அவர் அளித்த நேர்காணலிலேயே மேற்கண்டவாறு கூறினார். (ஐ)

## நாட்டின்....

கேள்விக்கு பதிலளித்த அவர்,

இலங்கை மக்களின் மனநிலையே இந்த அழைப்புக்கு வழிவகுத்துள்ளது. ஒவ்வோர் அரசாங்கமும் இலங்கையில் அரசாங்கத்தை அமைக்கத் தயாராக இருக்கும் அரசியல் இயக்கங்களுடன் உறவுகளை வளர்த்துக் கொள்ள முயற்சிக்கின்றன. அரசாங்கம் அமைவதற்கு முன்னரும் பின்னரும் இவ்வாறான உறவுகளை வலுப்படுத்த இந்திய அரசாங்கம் முக்கியத்துவம் அளித்து வருகிறது." என்றார்.

இந்திய பாதுகாப்பு அமைச்சு தரப்பினருடனான சந்திப்பு தொடர்பில் அவர் கூறியவை வருமாறு,

"புவிசார் அரசியலில் இலங்கை ஒரு போட்டியாளர் அல்ல. ஆனால், புவிசார் அரசியலில் இந்தியா ஒரு போட்டியாளர். எனவே, இலங்கையின் அரசியல் மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் இந்தியாவின் தேசிய பாதுகாப்பில் சில தாக்கங்களை ஏற்படுத்தலாம்.

இதன் காரணமாக அரசியல் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது இந்தியாவின் தேசிய பாதுகாப்பு பாதிக்கப்படாதிருக்கும் வகையில் தீர்மானங்கள் எடுக்கப்படும்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் நாம் இரட்டை நிலைப்பாட்டை வெளிப்படுத்த மாட்டோம். ஒரே விடயத்தைதான் முன்வைப்போம். எமது கட்சியின் நிலைப்பாடுகள் தொடர்பில் இந்தியாவின் குழப்பங்கள் தீர்க்கப்பட்டுவிட்டதாக தாம் நம்புவதாகவும் அனைத்து புலம்பெயர் இலங்கையர்களுடனும் பேச்சு நடத்துவதற்கு தயாராக இருக்கிறோம். இலங்கை தேசத்தை கட்டியெழுப்புதல், தேசிய ஒருமைப்பாடு, நாட்டின் பாதுகாப்பு மற்றும் மக்களின் அபிவிருத்தியை கருத்தில்கொண்டு இந்த கலந்துரையாடல்கள் நடத்தப்படவுள்ளன என்றும் அநுரகுமார கூறினார். (ஐ)

## மூன்று....

பெர்னாண்டோவை மேற்கோள்காட்டி இந்து வர்த்தக இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

அந்த விமான நிலையங்களின் வசதிகளை விரிவுபடுத்துவதற்கும் பயணிகளின் திறனை அதிகரிப்பதற்கும் ஒரு தனியார் பங்காளியின் ஆதரவு எதிர்பார்க்கப்படுவதுடன், அதானி குழுமம் அதற்காக இலங்கை அதிகாரிகளுடன் பேச்சு நடத்தி வருவதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

மும்பை சர்வதேச விமான நிலையம் உட்பட இந்தியாவில் உள்ள 7 விமான நிலையங்களின் நிர்வாகத்தை தற்போது அதானி குழுமம் நிர்வகித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சமரசம்....

மத்தியில் திருகோணமலை மாவட்டத்தின் ச. குகதாசன் பொதுச் செயலாளராக தெரிவு செய்யப்பட்டார். எனினும், இவரின் தெரிவு தொடர்பில் சர்ச்சை எழுந்தது. இதைத் தொடர்ந்து கட்சியின் தலைமை புதிய நிர்வாகத்தை கிடப்பில் பேணியதுடன், கட்சிக்குள் அமைதியை ஏற்படுத்த முயற்சி முன்னெடுக்கப்பட்டது.

இந்த நிலையில், பொதுச் செயலாளர் பதவியை குகதாசனுக்கும் சிறீநேசனுக்கும் தலா ஒரு வருடம் வழங்குவது என்று இணக்கம் எட்டப்பட்டது. எனினும், முதல் வருடத்தில் யாருக்கு வழங்குவது என்பதில் இழுபறி நிலை நீடித்து வருகிறது.

இந்த நிலையில், இது விடயத்தில் இணக்கம் ஒன்றை எட்டுவதற்காக ஏற்கனவே திட்டமிட்டபடி இன்று ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் தமிழ் அரசு கட்சியின் முக்கியஸ்தர்கள் ஒன்றுகூடுகின்றனர்.

இதனிடையே, செயலாளர் பதவிக்கான தேர்தலை நடத்துமாறு கோரி மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களை சேர்ந்த பொதுக்குழு உறுப்பினர்கள் கையொப்பமிட்ட கடிதம் தயாரிக்கப்பட்டுள்ளது. அது கட்சி தலைமையிடம் இன்றைய தினம் ஒப்படைக்கப்படவுள்ளது என்றும் அறிய வருகின்றது. (ஐ)

## அரச....

ஆண்டு, செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் நாட்டில் தங்கள் திட்டங்களுக்காக 3 ஆயிரத்து 300 கோடி ரூபாய் வெளிநாட்டு நிதியைப் பெற்றன. இருப்பினும், நாட்டில் பதிவு செய்யப்படாத பல தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. மொத்தத்தில், ஆண்டுக்கு ரூ.10 ஆயிரம் கோடி நிதி பெறப்படுகிறது என்று நாங்கள் நம்புகிறோம். அரசின் எந்தவொரு கண்காணிப்பும் இன்றி அதிகளவு தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் நிதியை செலவிடுகின்றன.

தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் செயல்பாடுகள் என்ற போர்வையில் பணமோசடி மற்றும் பயங்கரவாதத்துக்கு நிதியுதவி செய்வதைக் கட்டுப்படுத்த இதுபோன்ற சட்டத்தை இயற்றப்படுவது அவசியம். பணமோசடி மற்றும் பயங்கரவாதத்துக்கு நிதியுதவி செய்வதைக் கையாள்வதற்கான சட்டங்களை வைத்திருப்பது சர்வதேச நாணய நிதியத்தால் நிர்ணயிக்கப்பட்ட ஒரு தேவையாகும். எனவே, இந்த சட்டமூலத்தை நிறைவேற்ற வேண்டும். இன்னும் இரண்டு மாதங்களில் செய்து முடிக்கப்படும்," என்றார்.

தற்போது, நாடளாவிய ரீதியில் ஆயிரத்து 786 பதிவு செய்யப்பட்ட தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், மாவட்ட அளவில் ஆயிரத்து 636 மற்றும் பிரதேச அளவில் 38 ஆயிரத்து 524 உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இந்தியாவிலிருந்து நாடு திரும்பினர் அநுர குழுவினர்!



கொழும்பு, பெப். 11

இந்தியாவில் ஐந்து நாட்கள் உத்தி யோகபூர்வ பயணத்தில் ஈடுபட்டிருந்த தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திஸநாயக்க உள்ளிட்ட குழுவினர் நேற்று சனிக்கிழமை பிற்பகல் நாடு திரும்பினர்.

இந்த பயணத்தின் போது, அநுர குமார திஸநாயக்க, இந்திய வெளிவிவகார அமைச்சர், இந்திய பாதுகாப்பு ஆலோசகர், இந்திய வெளிவிவகார செயலாளர் மற்றும் இராஜதந்திரிகளை சந்தித்தார்.இந்தியாவின் பிரபல வர்த்தகர்களுடனும் அநுர குமார திஸநாயக்க உள்ளிட்ட குழுவினர் கலந்துரையாடினர்.

இந்திய அரசாங்கத்தின் அழைப்பை ஏற்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க, பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத், டொக்டர் நிஹால் அபேசிங்க மற்றும் பேராசிரியர் அனில் ஜயந்த ஆகியோர் இந்தியா சென்றிருந்தனர்.

தேசிய மக்கள் சக்தி மற்றும் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் ஒருவர் இந்திய அரசாங்கத்திடம் இருந்து அதிகாரபூர்வ அழைப்பை பெற்றிருந்தமை இதுவே முதல் சந்தர்ப்பமாகும். (ஐ)

# ஓரிரு நாட்களில் நாடு திரும்புகிறார் பஸில்!

## ஜனாதிபதி வேட்பாளர் குறித்து விரைவில் முடிவு என்கிறது மொட்டு!

கொழும்பு, பெப். 11

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் பொதுஜன பெரமுன சார்பில் களமிறங்கவுள்ள ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் முடிவெடுக்கப்படும் என்று அந்தக் கட்சி அறிவித்துள்ளது.

இது தொடர்பில் பொதுஜன பெரமுன கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். எம். சந்திரசேன நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கூறுகையில்,

அமெரிக்காவில் தங்கியிருக்கும் முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ இன்னும் ஓரிரு நாள்களில் நாடு திரும்புவார். அதன்பின்னர் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் முடிவெடுக்கப்படும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போதும் இறுதித் தறுவாயிலேயே ஜனாதிபதி வேட்பாளரை பெயரிட்டோம். வேட்பாளர் ஒருவரை களமிறக்குவதற்கான பலம் எமது கட்சியிடம் இன்னும் உள்ளது.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் பலர் போட்டியிடவுள்ளனர். ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் ஐந்தாறு மாதங்கள் உள்ளன. எனினும், அதுவரை காத்திருக்கமாட்டோம் - விரைவில் முடிவு எடுக்கப்படும் - என்றார். (ஐ)

# நிகழ்நிலை காப்பு சட்டத்தில் ஒருவர் சி. ஐ. டியால் கைது!

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்

கொழும்பு, பெப். 11

சமூக வலைதளங்களில் அவதூறு பரப்பிய ஒருவரை குற்றப் புலனாய்வு திணைக்களம் கைது செய்துள்ளதாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

அரசியல்வாதி ஒருவரின் ஆதரவுடன் இந்த அவதூறு பிரசாரங்களை அவர் மேற்கொண்டார் என்றும் அவர் கூறினார்.

பாணந்துறையில் நேற்று நடந்த நிகழ்வொன்றில் உரையாற்றிய அவர், எதிர்காலத்தில் அந்த அரசியல்வாதியின் பெயரை வெளிப்படுத்துவேன் என தெரிவித்துள்ளார்.

மேலும், "சி. ஐ. டியினரால் நேற்று (நேற்று முன்தினம்) ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் கையில் 4 இலட்சம் ரூபாய் பணம் இருந்தது. சமூக வலைதளத்தை பயன்படுத்தி எங்களை அவதூறாக பேசுபவர். அரசியல்வாதி ஒருவர்தான் பணத்தை கொடுத்துள்ளார். அவர் காரில் கொழும்பு சென்று டொலர்களை ரூபாயாக மாற்றியபோதே கைது செய்யப்பட்டார். சமூக வலைதளங்களில் எங்களை - அரசாங்கத்தை - பொலிஸ் மா அதிபர் உள்ளிட்ட அனைவர் தொடர்பிலும் அவதூறு பரப்புகின்றனர். அதனால்தான் நிகழ்நிலை பாதுகாப்பு சட்டத்தை கொண்டு வந்துள்ளோம். அரசாங்கங்களை கவிழ்க்க வேண்டுமானாலும் இந்த சமூக ஊடகங்கள் ஊடாக சேறு பூசுகின்றார்கள். இந்த சட்டம், சமூக ஊடகங்களை தவறாக கையாளுபவர்கள் மட்டுமே பிரச்னையாக அமையும்" என்றார். (ஐ)

## திருமலையில்....

தொண்டமானை சந்தித்துப் பேசினர்.

மரியாதை நிமித்தமாக நடைபெற்ற இந்த சந்திப்பிலேயே, திருகோணமலை துறைமுகத்தில் கப்பல் கட்டும் தளம் ஒன்றை நிறுவுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராயப்பட்டது.

திருகோணமலை துறைமுகத்தை மேம்படுத்துவதன் ஊடாக வங்காள விரிகுடாவில் பயணிக்கும் கப்பல்களுக்கு அவசரநிலையின்போது விரைவான சேவைகளை வழங்க முடியும் என்று இந்திய பாதுகாப்பு அமைச்சின் குழுவினர் ஆளுநருக்கு தெரிவித்தனர். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# அயோத்தி இராமர் கோவிலில் நாமல் ராஜபக்ஷ வழிபாடு!

அயோத்தி, பெப். 11

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ நேற்று அயோத்தி இராமர் கோயிலில் வழிபாடு நடத்தினார்.

தனது பாரியாருடன் அவர் இந்த வழிபாட்டில் பங்கேற்றார்.

உத்தரப் பிரதேசத்தில் தங்கியிருந்த பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ மரியாதை நிமித்தமாக அந்த மாநில முதல்வர் யோகி ஆதித்யநாத் மற்றும் துணை முதல்வர் பிரிகேஷ் பதேக் ஆகியோரை சந்தித்துப் பேச்சு நடத்தினார். (ஐ)

# குருநகரில் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், பெப். 11

யாழ்ப்பாணம் புறநகர் பகுதியான குருநகருக்கு அண்மையாக உள்ள தடாகத்தில் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது.

நேற்று காலை சடலத்தை அவதானித்த பொதுமக்கள் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

சடலத்துக்கு உரியவர் அடையாளம் காணப்படவில்லை. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

பொலிஸாரால் மீட்கப்பட்ட சடலம் யாழ். போதனா மருத்துவமனைக்கு உடல்கூறாய்வுக்காக அனுப்பி வைக்கப்பட்டது. (ஐ)

# நிதியமைச்சு தொடர்பாக பேசவே நான் ஜனாதிபதியை சந்தித்தேன்!

## சரத் பொன்சேகா விளக்கம்



கொழும்பு, பெப். 11

நிதியமைச்சு தொடர்பில் பேசுவதற்காகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பாராளுமன்றத்தில் தான் சந்தித்தார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

அத்துடன், அரசியல் தொடர்பில் எதுவும் அங்கு பேசப்படவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

மாத்தறையில் நடந்த நிகழ்வு ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"நிதி அமைச்சு தொடர்பான விடயம் தொடர்பில் பேசுவதற்காகவே நான் ஜனாதிபதியை பாராளுமன்றத்தில் சந்தித்தேன். ஜனாதிபதியையும் இந்த நாட்டின் எந்தவொரு குடிமகனையும் சந்திக்க எனக்கு உரிமை உண்டு.

அவர் நிதியமைச்சர். நான் அமைச்சுக்கு செல்லவில்லை. அவரை வெளியே சந்தித்தேன். பின்வாசலால் சென்று சந்திக்கவில்லை - என்றும் அவர் கூறினார். (ஐ)

# நாட்டின் பல பகுதிகளில் வெப்பநிலை அதிகரிப்பு

கொழும்பு, பெப். 11

நாட்டின் பல பகுதிகளில் வெப்பநிலை 1 முதல் 4 பாகை செல்சியஸால் அதிகரித்துள்ளது.

நேற்றைய தினம் புத்தளம் மாவட்டத்தில் அதிக வெப்பநிலை பதிவாகியுள்ளது. அங்கு, 33.7 பாகை செல்சியஸ் வெப்பநிலை நிலவியது என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இரத்தினபுரியில் 33.5 செல்சியஸ் ஆக வெப்பநிலை பதிவாகியது. அம்பாந்தோட்டை உள்ளிட்ட பல பகுதிகளில் வெப்பநிலை அதிகரித்துள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேநேரம், யாழ்ப்பாணத்தில் நேற்றைய தினம் 31 பாகை செல்சியஸ் வெப்பநிலை நிலவியது. அடுத்த மாதம் வெப்பமான காலநிலை மேலும் அதிகரிக்கலாம் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது. (ஐ)

# ஒவ்வொரு குடிமகனுக்கும் வரிகோப்பு சாத்தியமற்றது

## பாட்டாலி சம்பிக்க எம். பி.

கொழும்பு, பெப். 11

**நாட்டின் ஒவ்வொரு குடிமகனுக்கும் வரிக் கோப்புகளை தயாரிப்பது நடைமுறை சாத்தியமற்றது என்று பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.**

**நேற்று அவர் விடுத்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.**

அந்த அறிக்கையில், தேவையான அனைத்து அளவுகோல்களையும் கருத்தில்கொண்டு, ஒரு வரிக் கோப்பை செயலாக்குவதற்கு தோராயமாக அரை மணித்தியாலம் தேவைப்படுகிறது. இதற்கு கணிசமான நேரம், மனித வளம் தேவை.

"ஒன்பது அதிகாரிகள் மட்டுமே இந்தப் பொறுப்பில் பணிபுரிவதால் தினசரி செயலாக்கத் திறன் 144 கோப்புகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இதனால், பல இலட்சக் கணக்கான கோப்புகளை செயலாக்குவது கடினமான மற்றும் நேரத்தைச் செலவழிக்கும் முயற்சியாகும்.

ஒவ்வொரு தனிநபருக்கும் புதிய வரிக் கோப்புகளை திறப்பதைவிட உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால் அடையாளம் காணப்பட்ட ஆயிரத்து 272 கடனை செலுத்தாதவர்களிடமிருந்து செலுத்தப்படாத வரிகளை வசூலிப்பதில் முன்னுரிமை அளிக்க வேண்டும்.

எவ்வாறாயினும், இது தொடர்பாக தற்போதைய அரசாங்கம் நடவடிக்கை எடுக்காததால், மக்கள் மீது தேவையற்ற சுமை மற்றும் நடைமுறைக்கு மாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மிகவும் நெறிப்படுத்தப்பட்ட அணுகுமுறையை முன்மொழிந்த பாராளுமன்ற உறுப்பினர், மக்களின் பரிவர்த்தனைகளை துல்லியமாக கண்காணிக்க கியூ. ஆர். குறியீடுகள் போன்ற நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த வேண்டும். எரிபொருள் பரிவர்த்தனைகளுக்கான கியூ. ஆர். குறியீடுகள் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டதை ஒரு முன்னுதாரணமாக அவர் மேற்கோள் காட்டினார், இதேபோன்ற நடவடிக்கைகள் மின்சாரம் மற்றும் தண்ணீர் கட்டணங்களுக்கும் நீடிக்கப்படலாம் என பரிந்துரைத்தார்.

கியூ. ஆர். குறியீடுகளை பரவலாக ஏற்றுக்கொள்வதை ஊக்குவிப்பதன் மூலம், பரிவர்த்தனைகள் மற்றும் அவற்றின் மதிப்புகள் பற்றிய துல்லியமான தரவை அரசாங்கம் பெற முடியும், மேலும் முறைப்படுத்தப்பட்ட வரி வசூல் செயல்முறையை எளிதாக்குகிறது," என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தொழில்நுட்ப தீர்வுகளை ஏற்றுக்கொள்வது வினைத்திறனை அதிகரிப்பது மட்டுமன்றி மிகவும் வெளிப்படையான மற்றும் பொறுப்புக்கூறக்கூடிய வரிவிதிப்பு முறைமைக்கு பங்களிப்புச் செய்கிறது - என்றுள்ளது. (ஐ)

# இந்திய வெளிவிவகார அமைச்சருடன் ஆஸியில் ஜனாதிபதி சந்தித்து பேச்சு!

கொழும்பு, பெப். 11

அவுஸ்திரேலியாவின் பேர்த் நகரில் 7ஆவது இந்து சமுத்திர மாநாட்டில் கலந்துகொள்ள சென்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய் சங்கரை சந்தித்து கலந்துரையாடினார்.

இரு நாட்டு ஒத்துழைப்பில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை தொடர்ந்து வலுப்படுத்த இதன் போது இருவரும் அவதானம் செலுத்தினர்.

இந்து சமுத்திர மாநாட்டில் கலந்துகொள்வதற்காக அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் ஜனாதிபதி பேர்த் நருக்கு பயணம் மேற்கொண்டுள்ளார்.

"இந்தியப் பெருங்கடலில் நிலைத்தன்மையை நோக்கிச் செல்வது" என்ற கருப்பொருளில் இடம்பெறும் இந்த மாநாட்டில் 40 நாடுகள் பங்கேற்றுள்ளன.

ஜெய்சங்கருடனான சந்திப்பில் இரு நாட்டு பொருளாதார மற்றும் அரசியல் விவகாரங்கள் தொடர்பில் ஜனாதிபதி கலந்துரையாடியுள்ளார்.

"எட்கா" உடன்படிக்கை மற்றும் இலங்கையில் இந்தியா முன்னெடுத்துவரும் அபிவிருத்தி திட்டங்களின் தற்போதைய நிலைமைகள் குறித்தும் ஜெய்சங்கர் ஜனாதிபதியிடம் கேட்டறிந்து கொண்டார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்தது. (ஐ)

# காஸா போரை நிறுத்துமாறு கல்முனையில் ஆர்ப்பாட்டம்!







நிந்தவூர், பெப். 11

காஸா மீதான இஸ்ரேலின் மிலேச்சத்தனமான இன அழிபபு தாக்குதலையும், அங்கு அப்பாவி உயிர்கள் பலியாவதைக்கண்டித்தும், உடனடியாக யுத்த நிறுத்தம் மேற்கொள்ளப்பட வேண்டுமென வலியுறுத்தியும் கல்முனை மாநகரில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடைபெற்றது.

கல்முனை மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் ஏ.எம்.றியாஸ் (பெஸ்டர்) தலைமையில் ஆர்ப்பாட்ட பேரணி நடைபெற்றது.

கல்முனை நகர ஜூம்ஆபள்ளி வாசல் முன்றலில் ஆரம்பமான இந்தப்பேரணி கல்முனை பழைய பஸ் நிலைய வளாகம் வரை நடைபெற்றது. அங்கு இஸ்ரே லின் காஸா மீதான தாக்குதல்களை கண்டித்து உரைகள் நடந்தன. பாதிக்கப்பட்டுள்ள, உயிர் நீத்த மக்களுக்காக விசேட துஆ பிரார்த்தனையும் இடம்பெற்றது.

இதேவேளை, இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர் இஸ்ரேலின் மிலேச் சத்தனமான தாக்குதலைக் கண்டித் தும், யுத்த நிறுத்தத்தை வலியுறுத் தியும், வாசகங்களைக் கொண்ட சுலோக அட்டைகளை ஏந்தியிருந்த துடன்,

அவற்றைக் கோஷமாக எழுப்பியும், குறிப்பாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் மெதன்யாகுவைக் கண்டித்தும், கோஷங்களை எழுப்பினர். (ஐ-06)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 11.02.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

ஏழுநாடு



# மனநல பாதிப்பை விரட்டுவோம்!

- ஜவி. நாகராஜன்



உலக அளவில் மனிதர்களிடம் உள்ள குறைபாட்டில் மன அழுத்தமே முதலிடத்தில் உள்ளது. முன்கூட்டிய மரணத்துக்கான காரணங்களில் 10-வது இடத்தில் மன அழுத்தம் உள்ளது. 15 முதல் 29 வயதுக்கு உட்பட்டவர்களின் மரணத்துக்கு இரண்டாவது முக்கிய காரணம் தற்கொலை. தற்கொலைக்கும் மன அழுத்தத்துக்கும் தெருங்கிய தொடர்பு உண்டு.

இந்தியாவில் ஒரு ஆண்டில் 2.6 லட்சத்துக்கும் அதிகமான தற்கொலைகள் நிகழ்கின்றன. உலகின் தற்கொலை தலை நகராக இந்தியா உள்ளது. இந்தியாவில் சராசரியாக ஒரு லட்சம் பேருக்கு 10.9 என்ற அளவில் தற்கொலை விகிதம் உள்ளது.

கொள்ளை நோய்த்தொற்றுக்கு முன் உலகளவில் 8 பேரில் ஒருவர் மனநல பிரச்னையுடன் வாழ்ந்து வந்ததாக மதிப்பிடப்பட்டிருந்தது. கொரோனா தீநுண்மியின் முதல் ஆண்டில் கவலை மற்றும் மனசோர்வால் 25 சதவீதத்துக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டனர். இந்தியாவில் பெரும்பாலானவர்கள் தங்களுக்கு மனநலம் பாதிப்பு இருப்பது தெரியாமல் வாழ்வதாக மருத்துவர்கள் கூறுகின்றனர்.

சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் தேசிய சுகாதார திட்டத் தின்படி நாட்டில் 60 முதல் 70 மில்லியன் மக்கள் கடுமையான மனநல பிரச்னை யால் பாதிக்கப்பட்டுள்ளனர். 15 கோடி இந்தியர்களுக்கு மன நல சிகிச்சை தேவைப்படுகிறது என்கிறது ஒரு புள்ளி விபரம்.

மன அழுத்தத்தின் அறிகுறிகள் தலைவலி, முதுகுவலி, தூக்கம் தொடர்பான சிக்கல்கள், தலைச்சுற்றல், எரிச்சல், விரைவான இதயத் துடிப்பு, மறதி போன்றவையே. அதுபோல பதற்றத்தின் பல அறிகுறிகள் மன அழுத்தத்தை போலவே இருக்கும். எண்ணங்களை அமைதிப்படுத்துவதில் சிரமம், எளிதில் சோர்வடைதல், எளிதில் பயப்படுதல், அதிக வியர்வை, நெஞ்சுவலி போன்ற உணர்வு ஆகியவை ஏற்படும்.

பதற்றம் என்பது உடல் சார்ந்ததாகவும் இருக்கலாம். மூளையில் ஏற்படும் ரசாயன மாற்றங்கள் தொடர்ந்து நீடித்திருப்பதால் அவை மன பதற்றத்துக்கு காரணமாகும் என்கின்றனர் மருத்துவர்கள். ஆண்களைவிட பெண்களே அதிக மன அழுத்தத்துக்கு ஆளாகிறார்கள். ஆண்களிடையே 29.3 சதவீதமாக உள்ள மன அழுத்தம் பெண்களிடையே 41.9 சதவீதமாக உள்ளது.

வன்முறை மோதல்கள், உள்நாட்டு போர்கள், பேரழிவுகள், இடம்பெயர்வுகளால் பாதிக்கப்பட்ட மக்களில் 80 சதவீதம் பேர் பெண்கள் மற்றும் குழந்தைகள் என்று புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. ஒருவர் மன அழுத்தத்தோடு இருந்தால் அவரின் சுவாச அமைப்பு பாதிப்படைந்து மூச்சு விட சிரமப்படுவார். ஆக்சிஜன் பற்றாக்குறையால், ரத்த ஓட்டம் சீராக இருக்காது. மன அழுத்தமானது, நோய் எதிர்ப்பு சக்தியை அழித்துவிடும். மன அழுத்தத்தால் தோள்பட்டை, கழுத்து, முதுகு ஆகிய பகுதிகளில் வலி ஏற்படும்.

மன அழுத்தத்தின்போது உணவுப் பழக்கம் மாறும். அதை இரைப்பை ஏற்காது. இதனால் வயிற்று வலி, வாந்தி, குமட்டல் போன்ற பிரச்னைகள் ஏற் படும். ஒரு நபர் தொடர்ந்து ஒரே அள விலான மன அழுத்தத்தில் இருந்தால் அவருக்கு மாரடைப்பு ஏற்பட வாய்ப்புள்ளது என்று மருத்துவர்கள் கூறுகின்றனர்.

பொதுவாக ஒரு லட்சம் மக்கள் தொகைக்கு மூன்று மனநல மருத்துவர்கள் இருக்க வேண்டும். ஆனால் இந்தியாவில் 0.75 மன நல மருத்துவர்களே உள்ளனர் என்று புள்ளிவிபரம் தெரிவிக்கிறது. மன பதற்றம் அதிகரிப்பதாக நாம் உணர்ந்ததுமே ஆழமாக மூச்சை இழுத்துவிட்டு அதிலேயே மனதை குவிப்பதன் மூலமாக மன பதற்றத்தைக் குறைக்க முடியும். மேலும் நம்மைச் சுற்றியுள்ள ஐந்து நபர்க ளையோ, பொருள்களையோ பார்க்க வேண்டும்.

அடுத்து அருகேயுள்ள நான்கு பொருள்களைத் தொட வேண்டும். அது தரையாகவோ, பேனாவாகவோ, மனைவி வாங்கி வைத்திருக்கும் காய்கறியாகவோகூட இருக்கலாம். அடுத்து மூன்று ஒலிகளை கேட்க வேண்டும். பின்னர் இரு வாசனைகளை நுகர வேண்டும். பின்னர் ஒரு சுவையை உணர வேண்டும்.

இந்த ஐந்தையும் செய்து முடித்த பின் நம் பதற்றம் தணிந்திருப்பதை உணர முடியும். வெளிநாடுகளில் ஒரு லட்சம் பேருக்கு ஆறு மன நல மருத்துவர்கள் இருக்கிறார்கள். இந்தியாவில் 3 மூன்று மனநல நிபுணர்கள் தேவை என்று மதிப்பிட்டால், கூடுதலாக 30 ஆயிரம் மனநில மருத்துவர்கள் தேவைப்படு வார்கள்.

லான்செட் மருத்துவ இதழ் வெளியிட்ட ஒரு ஆய்வு முடிவு இந்தியாவில் மனநல பிரச்னைகள் 35 சதவீதம் அதிகரித்துள்ளது என்கிறது. அதே போல மன நலத்துக்கான தேசிய சுகாதார பட் ஜெட் ஒதுக்கீடும் 0.16 சதவீதமாக மிக குறைந்த அளவே உள்ளது.

மன நலம் சரியில்லாத ஒருவரை விவரிக்க இழிவான சொற்கள் பயன்படுத் தப்படுவதை தவிர்க்க வேண்டும். மன நோய்க்கு சரியான வழிகாட்டுதலின் கீழ் சரியான மருத்துவம் தரப்படுவது முக்கியம். குடும்பத்தினரின் அன்பு மிக அவசியம். தினமும் இரவில் குறிப்பிட்ட நேரத்தில் தூங்கி காலையில் குறிப்பிட்ட நேரத்தில் எழ வேண்டும். துங்குவதற்கு 2 மணி நேரத்துக்கு முன் சாப்பிட வேண் டும்.

டிவி பார்ப்பது, செல்போன் பயன்படுத்துவதை தூங்குவதற்கு ஒரு மணி நேரத்துக்கு முன்னதாகவே நிறுத்த வேண்டும். நாள்தோறும் 45 நிமிடம் உடற்பயிற்சி செய்யவேண்டும். அது, நடைப்பயிற்சியாகக்கூட இருக்கலாம். தூங்கும் இடம் சுத்தமாக இருக்க வேண்டும்.

நம் மனம் நம் உரிமை. மன நலத்தைப் பாதுகாக்க முதலில் நம்மை நாம் நேசிக்க வேண்டும். நம்பிக்கைக் குரிய நபர்களிடம் பேசவேண்டும். ஆரோக்கியமான உணவு, வாழ்க்கை முறைக்கு மாற வேண்டும். பிடித்ததைச் செய்ய வேண் டும். இதனால், மனமும் உடலும் ஆரோக்கியமாக இருக்கும்.

நம்மை நாமே பாராட்டிக் கொள்ளலாம். கவலையை துறந்து மகிழ்ச்சியை நாடுவோம். மன அழுத்தத்துக்கு எதிராக உறுதியான நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் மனநல பாதிப்பு தொற்று நோயை விட நீண்ட காலம் நீடிக்கும் என்கிறார் ஐ.நா. சபை பொதுச் செயலா ளர் அன்டோனியோ குட்டரெஸ். தங்கள் வாழ்க்கையை கண்ணியமாகவும், தன்னம்பிக்கையுடனும் வாழ மன நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் உரிமை உண்டு. மகிழ்வான தருணங்கள் அவர்களுக்குத் தொடரட்டும்.

